


துப்பறியும் கதை
மர்மக் கொலைகாரன்
COMICS PDF TIMES
ரூ. 1

# விருதை ராமசாமி

KALIMAGAL BOOK STALL
(Near High Court)
Stall No. 49, N. S. C Bose Road,
MADRAS-1:
Proprietor: RAJAMANI

எழுதிய

COMICS
PDF TIMES

# மர்மக் கொலைகாரன்!



# 1. விருந்துக்கு வந்தவன்

"உலக நாதன் சிவராமனின் பால்ய நண்பன். பாலப் பருவத்திலேயே உலகநாதனின் தயவு தாட்சண்யத்தைப் பெற்றவன் சிவராமன். பள்ளிக்கு உலகநாதன் வந்தால்தான் கமர்கட்டும் ஐஸ் புருட்டும் கிடைக்கும் சிவராமனுக்கு. சிலேட்டு, பென்சில், புத்தகம், நோட்ஸ் முதலியவற்றை அவ்வப்போது வாங்கிக் கொடுப்பான் உலகநாதன். அந்த நாளிலேயே வசதியான பையன். இன்றுவரை ஏராளமான சொத்து சுகங்களுக்கு அதிபதியாக விளங்கி வருபவன். கோவை ஷேர் மார்க்கெட்டில் பெரும்புள்ளியாக மதிக்கப்படுபவன் உலகநாதன். அவனுடைய பைனான்ஸை எதிர்பார்த்து தமிழ் சினிமா உலகமே தவம் கிடக்கும் நிலை. இவை அனைத்தையும் இருபது சாட்சிகளுக்கு மேற்பட்டவர்கள் நீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"இவ்வளவு செல்வமும் செல்வாக்கும் நிறைந்த உலகநாதன் சென்னைக்கு வந்தால் பெரிய பெரிய ஆடம்பர ஓட்டல்களில் தங்குவதுதான் வழக்கம். இதையும் ஓட்டல் உஷா, மைலேடி, ஓட்டல் ரீட்டா ஆகிய உல்லாச விடுதிகளின் மானேஜர்களும் ஊழியர்களும் தங்களின் சாட்சியங்களில் மெய்ப்பித்திருக்கிறார்கள்.

"இந்த உலகநாதன் சிவராமனின் வீடே கதி எனக் கிடந்தான் என்பது கட்டுக்கதை. பால்ய நண்பன் என்ற முறையில் அதுவும் சிவராமன் வலியுறுத்தி அழைத்ததின் பேரில் சிவராமனின் வீட்டுக்குப் போனான். ஒரு சில மணி நேரங்கள் தங்கினான். பாலப் பருவத்து நினைவுகளில் கட்டுண்டு பேசி மகிழ்ந்தார்கள். சிவராமனின் தாயார்க்கும் சிவராமனின் மாமன் மகளுக்கும் கைநிறைய பணத்தை வாரி வாரி கொடுத்தான். அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

"இந்தச் சம்பவத்தை சிவராமனின் தாய் செல்லம்மாளும் மாமன் மகள் சாவித்திரியும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சிவராமனும் மறுக்கவில்லை. இதைத் தவிர அடிக்கடி சிவராமன் வீட்டுக்குப் போனான் உலகநாதன் என்பது வீண் புரளி—வேண்டுமென்றே கூறும் பொய்.

"சம்பவம் நடந்த தினத்தன்று தன் வீட்டுக்கு விருந்துக்கு வரும்படி உலகநாதனை அழைத்திருக்கிறான் சிவராமன். அன்று சிவராமன், ஓட்டலுக்கு வந்து உலகநாதனைக் கூட்டிப் போனதை ஓட்டல் மானேஜரும் ரூம் பாயும் தங்கள் சாட்சியத்தில் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

"விருந்துக்குப் போன இடத்தில் தனது கஷ்டத்தைத் தீர்த்துக்கொள்ள உலகநாதனிடம் பத்தாயிரம் ரூபாய் கேட்டு இருக்கிறான் சிவராமன். 'ஒரேயடியாக பத்தாயிரம் கேட்டால் எப்படி?' என்று உலகநாதன் கொடுக்க மறுத்திருக்கிறான். என்னதான் பால்ய நண்பனாக சிவராமன் விளங்கினாலும் பத்தாயிரத்தைத் தூக்கிக் கொடுத்துவிட யாருக்குத்தான் மனம் வரும்? தான் கேட்டும் உலகநாதன் பணம் தர மறுக்கிறானே என்ற ஆத்திரம் சிவராமனுக்கு.

"உலகநாதனின் ஹேண்ட் பேக்கிலிருந்த ரூபாய் இருபதினாயிரத்தையும், தங்கச் செயின் பிணைத்த வாட்ச்—மைனர் செயின்—மோதிரம் முதலியவற்றை அபகரிக்கத் திட்டமிட்டு உலகநாதனை இரவு தனது வீட்டில் தங்கும்படி கட்டாயப்படுத்தினான் சிவராமன். பணம் கேட்டும் கொடுக்க மறுத்துவிட்ட உலகநாதன் மீது ஏற்பட்டிருந்த ஆத்திரத்தை அப்போதைக்கு வெளிக் காட்டிக் கொள்ளவே இல்லை, சிவ ராமன் ..."

இவ்வளவு நேரம் பேசிவிட்ட களைப்பு அரசு தரப்பு வக்கீல் ராமையாவுக்கு. விவாதத்தை சற்று நிறுத்தி...குரல் வளையை சரிப்படுத்திக் கொள்வதுமாதிரி செருமிக் கொண் டார். விவாதத்தைத் தொடர்ந்தார்:

"இரவு—சிவராமனின் கட்டாயத்திற்காக உலகநாதன் தங்கினான்; மாமன் மகள் சாவித்திரியை ஏவிவிட்டு உலக நாதனை மயக்கிப் பணத்தைப் பறிக்க அனுப்பினான். அவளும் உலகநாதனை நெருங்கினாள்; அவன் நெருப்பானான். சாவித் திரியின் மயக்கு மொழிகளுக்கு மதிமயங்கவில்லை. உடனே, 'என் மாமன் மகளைக் கையைப் பிடித்து இழுத்தான். கற்பழிக்க முயன்றான் உலகநாதன்' எனக் கூப்பாடு போட் டான் சிவராமன்.

"உலகநாதனை அடித்து நொறுக்கியாவது பணத்தை அபகரித்துவிட சிவராமன் எத்தனித்தான். இருவருக்கும் பலமான சண்டை நடந்தது. சிவராமனின் முரட்டுப் பிடியி லிருந்து தப்பி உயிர் பிழைத்தால் போதுமென்று வீட்டை விட்டு ஓடினான் உலகநாதன். அப்போதும் சிவராமன் விட்ட பாடில்லை. தொடர்ந்து ஓடினான்.

"'இரும்புக் குழாய் ஏந்திய கையோடு சிவராமன் துரத்த உலகநாதன் ஓடிக் கொண்டிருந்ததை டீக்கடை பாலன், பேட்டைக் காவலன் பெரியசாமி, இரவு சினிமாப் பார்த்து விட்டுத் திரும்பிய மணி ஆகிய மூன்று பேர் பார்த்திருக்கிறார்கள். 'ஏம்பா அவரை இந்த விரட்டு விரட்டுறே' என்று சிவராமனைத் தடுத்திருக்கிறார்கள். 'அவனைக் கொல்லாமல் விடமாட்டேன்; அவன் சாகத்தான் வேண்டும்' என்று மேற்படி மூன்று பேரிடமும் சொல்லிவிட்டு அவர்களை அப்பால் தள்ளி விட்டுவிட்டு தொடர்ந்து உலகநாதனைத் துரத்திக் கொண்டே போயிருக்கிறான் சிவராமன்.

"மணி, பாலன், பெரியசாமி ஆகிய இந்த மூவரும்தான் இந்த வழக்கில் மிக முக்கியமான சாட்சிகள். உலகநாதன் உயிருக்குப் பயந்து ஓடினான். அவனது உயிரை வாங்காமல் விடமாட்டேன் என்று சிவராமன் துரத்தினான். இதை இந்த மூன்று சாட்சிகளும் அழுத்தம் திருத்தமாக இந்த நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

"சென்ற வழியே திரும்பியிருக்கிறான் கொஞ்ச நேரம் கழித்து சிவராமன். விரட்டிக்கொண்டு போனானே என்ன ஆச்சோ என்று குழம்பிப் போய் பேசிக் கொண்டிருந்த பெரியசாமி, பாலன், மணி மூவரும் திரும்பி வந்த சிவராமனை பார்த்திருக்கிறார்கள். இப்போது அவன் கையில் இரும்புக் குழாய் இல்லை.

"'ஏம்பா சிவா, துரத்திக்கிட்டுப் போனியே, அவனை என்ன செய்தே?' என்று மூவருமே கேட்டிருக்கிறார்கள். 'அவனையா? கொன்னு போட்டுட்டேன், போங்கய்யா...' என்று அலட்சியமாக—கொலை செய்து விட்டோமே என்ற கவலை கொஞ்சமும் இல்லாமல் கூறிவிட்டுப் போயிருக்கிறான் சிவராமன். இதை மேற்படி சாட்சிகள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

"மறுநாள்—ஓடைக் கரையில் உலகநாதனின் பிணம் மண்டை இரண்டாகப் பிளக்கப்பட்ட நிலையில் கிடந்தது. அது உலகநாதனின் சடலம் என்பதற்கான சாட்சிகளும், தடியால் மண்டையில் அடித்துக் கொல்லப்பட்டிருக்க வேண்டும்—உயிர் நடுநிசிக்குப் பின்னும் அதிகாலைப் பொழுதுக்கு முன்னும் பிரிந்திருக்க வேண்டும் என்று பிரேத பரிசோதனை செய்த டாக்டர் தங்கராசனின் ரிப்போர்ட்டும் ஐயத்திற்கிடமின்றி சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

"ஆகவே, உலகநாதனின் வசதியைக் கண்டு பொறாமை கொண்ட சிவராமன் பணம் பறிக்கத் திட்டமிட்டான். உலகநாதன் பெரும் அளவுக்கு பண உதவி அளிக்க மறுத்த

தால் ஆத்திரம் கொண்ட சிவராமன் உலகநாதனை திட்டமிட்டுக் கொன்ருன். தனது கொலைக் குற்றத்தை மறைப்பதற்காக மாமன் மகள் சாவித்திரியை உலகநாதன் கற்பழிக்க முயன்றதாகவும், அதற்காக அடித்து விரட்டியதாகவும் சிவராமன் பொய்யான வாக்குமூலம் கொடுத்திருக்கிருன்.

"அவனது வாக்குமூலத்தை உறுதிப்படுத்த தாய் செல்லம்மாளும், மாமன் மகள் சாவித்திரியும் ஒத்து ஊதி இருக்கிருர்களே தவிர, அது உண்மையான சாட்சியங்கள் அல்ல. மகனைக் காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்பு தாய்க்கு இருக்காதா என்ன? அத்தானை—அதாவது வருங்காலக் கணவனை காப்பாற்ற வேண்டும் என சாவித்திரி பதருமல் இருக்க முடியுமா? ஆகவே இவ் இருவருடைய புலன் தரப்பு சாட்சியங்களை கோர்ட்டார் பொருட்படுத்தக் கூடாதெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"உள்ளன்போடு பழகிய—உதவி செய்த நண்பனை விருந்து என்று வஞ்சககாகக் கூட்டிப் போய்—பணம் கறக்க முடியவில்லையே என்ற ஏமாற்றத்தால் ஆத்திரமடைந்து உலகநாதனை ஓட ஓட விரட்டி இரும்புத் தடியால் தலையில் அடித்துக் கொன்று விட்டான் சிவராமன் என்பதை அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபித்து விட்டோம் என்று நம்புகிறேன்.

"இது மனித சமூகத்தில் மன்னிக்க முடியாத குற்றம்—எனவே திட்டமிட்ட சதி—பணம் பறிக்கும் முயற்சி—கொலை ஆகிய மூன்று குற்றங்களுக்கும் உரிய தண்டனையை சிவராமனுக்கு விதிக்கவேண்டும் என கனம் கோர்ட்டார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தட்ஸ் ஆல்!"

இவ்வாறு தனது நீண்ட விவாதத்தை முடித்துக்கொண்டார் பப்ளிக் பிராஸிக்யூட்டர் ராமையா.

அவரது ஆர்க்யூமெண்டுக்கு குறுக்கே யாரும் தலையிடவில்லை.

குற்றவாளிக்கூண்டில் நின்றிருந்த சிவராமனின் கண்கள் சில சமயம் ஆவேசத்தால் சிவந்தன. மறுகணம் கண்ணீரைச் சிந்தின. மேலும் சில நிமிடங்கள் நீர்த்திவலைகளுக்கிடையே நீதிபதியை அர்த்தபாவத்தோடு நோக்கின.

பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த செல்லம்மாளும், சாவித்திரியும் சிவராமன்மீது சாட்டப்படும் குற்றசாட்டுகளைக் கேட்டு மனம் குமுறினர். செல்லம்மாவின் உள்ளம் கேவிக் கேவி அழுவதைத் துடிக்கும் உதடுகள் எடுத்துக் காட்டின.

சிவராமன் சார்பில் வாதாட நியமிக்கப்பட்டிருந்த நீல மேகம் எழுந்தார்—தனது எதிர்வாதத்தைத் தொடர்ந்தார்:

"உலகநாதனை தன் வீட்டுக்கு வரும்படி சிவராமன் வருந்தி அழைத்தான்—வற்புறுத்தி அழைத்தான் சிவராமன் என்றார் என்னருமை நண்பர் வழக்கறிஞர் ராமையா. இதை ருசிப்பிக்க பிராக்ஸிக்யூஷன் தரப்பில் விடப்பட்டுள்ள சாட்சி யங்களையும் சுட்டிக் காட்டினார். அத்தனை சாட்சியங்களையும் நான் மறுப்பதோடு வழக்கை இவ்வளவு அற்புதமாக ஜோடித் திருக்கும் போலீசாரையும் அவர்களின் தரப்பை நிலைநாட்ட அரும்பாடு படும் நண்பர் ராமையா அவர்களையும் மிக மிகப் பாராட்டுகிறேன்

"கனம் நீதிபதி அவர்களே! உலகநாதன் சிவராமனின் பால்ய நண்பன் என்பதையோ—சின்னஞ்சிறு வயதிலேயே உலகநாதனின் உதவியைப் பெற்றவன் சிவராமன் என்ப தையோ நாங்கள் மறுக்கவில்லை. சிவராமன், இல்லாத பையன்; ஏழை வீட்டுப் பிள்ளை. உலகநாதன் சீமான் வீட்டுச் செல்வப் புதல்வன்: இன்றளவும் பணக்காரன். இதையும் மறுக்கவில்லை. இதை வலியுறுத்திப் பேசுவ்தா லேயே இருப்பவனை இல்லாதவன் பணத்திற்காக ஆசைப் பட்டுக் கொலை செய்தான் என்று நிலைநாட்டிவிட முடியுமா?

"ஒருநாள் கடைவீதியில் உலகநாதனை தற்செயலாகப் பார்த்தான் சிவராமன். நீண்ட காலத்திற்குப் பின்னர் இரு பால்ய நண்பர்கள் சந்தித்தார்கள்; அளவளாவினர். தனது வீட்டுக்கு வரும்படி உலகநாதனை அழைத்தான் சிவராமன். இதில் வற்புறுத்தலுக்கு என்ன அவசியம் வந்தது? உலக நாதனும் சிவராமனின் அழைப்புக்கு இசைந்து வந்தான், ஏதோ தன்னால் முடிந்தவரை சிவராமன் வரவேற்று உபசரித் தான்.

"மறுநாள் முதற்கொண்டு யாரும் அழையாத விருந்தாளி யாக வரப்போக ஆரம்பித்தான். பெரும்பாலும் செல்லம் மாளும் சிவராமனும் வீட்டில் இல்லாத வேளைகளாகப் பார்த்து வர ஆரம்பித்தான்.

"வசதிக் குறைவான வாழ்வு வாழ்கின்ற எந்தப் பெண் ணுக்கும் சில பலகீனங்கள் உண்டு. அந்தச் சில பலகீனங் கள் சாவித்திரியைப் பிடித்திருந்தன. உயர்தர துணிமணி களை அணிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை—மேக்கப் பொருள்களின்மீது மோகம்—சாவித்திரியின் இந்தத் தேவை களைப் புரிந்துகொண்ட சிவராமன் தினம் தினம் விதவிதமான ஆடை அணிகளை—மேக்கப் மெட்டீரியல்ஸை வாங்கிவர ஆரம்பித்தான்.

''முதன் முதலில் அவன் வாங்கி வந்தபோது அதைப் பெற்றுக்கொள்ள மறுத்தாள் சாவித்திரி. இதை ஒரு பெரிய புகார் மாதிரி சிவராமனிடம் தெரிவித்தான்.

'' 'பாரப்பா! உன் மாமன் மகள் நான் ஆசையோடு வாங்கி வந்த சாமான்களை வேண்டாம் என்கிறுள். அப்போ என்னை வித்தியாசமாகத்தானே எண்ணுகிருள்! அப்போ நீ வேறே, நான் வேறேயா? நான் வாங்கிக் கொடுக்கிறது நீ வாங்கிக் கொடுக்கிற மாதிரி இல்லையா?' என உரிமையோடு உலகநாதன் பேசினுன். அவனது இந்தப் பசப்புப் பேச்சை சிவராமன் நம்பிவிட்டான். தன் மீது இப்படி உயிரையே வைத்திருக்கிருனே உலகநாதன் என்று பெருமைப்பட்டான் சிவராமன்

'' 'சாவித்திரி! அவனும் நானும் வேறல்ல! நான்தான் அவன்; அவன்தான் நான்' என்று நட்புக்கு முத்தாய்ப்பு வைத்தான் சிவராமன்.

''அத்தானே அனுமதித்துவிட்டபிறகு நாம் அவன் தரும் அன்பளிப்புகளை வாங்கிக் கொள்வதில் தவறு இல்லை என்றும், தான் வாங்க மறுத்தால் இரு பால்ய நண்பர்களுக்குள் மனத்தாங்கல் ஏற்பட்டுவிடுமே என்று அஞ்சியும் உலகநாதன் வாங்கிக் கொடுப்பதையெல்லாம் பெற்றுக் கொண்டாள். அவனோடு சகஜமாகப் பழகினுள்; இரண்டறக் கலந்து உரையாடினுள்.

''இதையெல்லாம் தனது அந்தரங்க எண்ணத்திற்கு 'அட்வான்டேஜாக' சாதகமாக எடுத்துக் கொண்டான் உலகநாதன். சமய சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தான் சாவித்திரியின் கற்பைச் சூறையாட.

''சம்பவத்தன்று ஓட்டலுக்குப் போய் உலகநாதனை சிவராமன் விருந்துக்கு அழைத்தான் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. இப்படி அழைப்பதே பணம் பறிக்க—கொலை செய்யத்தான் என்று நண்பர் ராமையா வாதாடுவது விசித்திரம்—வேதனை.

''விருந்துக்குப் பின்னர் சிவராமன் வீட்டிலேயே விரும்பித் தங்கினுன் உலகநாதன். தங்கினுல்தானே சாவித்திரியைச் சுவைக்க முடியும்! நடுநிசியில் எழுந்துபோய் சாவித்திரியைக் கட்டி அணைத்தான். தன் இச்சைக்கு இணங்குவாள் என்று அவனுகவே கற்பனை செய்துகொண்டது கற்பனையாகவே போய்விட்டது. சாவித்திரி தன் கற்பைத் தற்காத்துக்கொள்ள போராடினுள். சத்தம் கேட்டு எழுந்த சிவராமன் வெகுண்டான்.

''உலகநாதனோடு சண்டையிட்டான்; நாங்கள் மறுக்க வில்லை அவனை ஓட ஓட விரட்டினான்; சிவராமன் மறுக்க வில்லை. டீக்கடை பாலன், சினிமாப் பார்த்துவிட்டுத் திரும்பிய மணி, பேட்டைக்காவலன் பெரியசாமி ஆகிய மூன்று பேரும் சிவராமனைத் தடுத்தார்கள்; மறுக்கவில்லை. சற்று நேரம் கழித்துத் திரும்பிய சிவராமன், 'தப்பி விட்டானே பாவிப் பயல்' என்ற வெறுப்புணர்ச்சியால், 'அவனையா? கொன்னு போட்டுட்டேன் போங்கய்யா' என்று கூறினானே தவிர, 'கொன்று விட்டேன்' என்று மனமார அவன் சொல்ல வில்லை

''மேலும், அப்படிக் கொன்றிருந்தால், 'கொன்று விட்டேன்' என்று அவ்வளவு சர்வ சாதாரணமாக லேசாகவலாக எவனும் சொல்லமாட்டான். கொலை செய்வதற்கு முன்னர் ஆத்திரத்தில் பேசியிருந்தாலும் கொலைக்குப் பின்னர் எந்தக் கொடூர சிந்தை படைத்தவனுக்கும் நடுக்கம் இல்லாமற் போகாது இதை கனம் நீதிபதி அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமெனப் பணிவோடு கோருகிறேன்.

''ஆக, ஆத்திரம் உண்மை; ஆனால் சிவராமன் உலகநாதனைக் கொலை செய்யவில்லை. இதற்குரிய ஒரே ஆதாரமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பணத்திற்காக ஆசைப்பட்டு கொலை செய்தான் என்ற வாதமே அடிபட்டுப் போயிருக்கிறது. அதாவது உலகநாதனின் பிணம் கிடந்த இடத்தில் ஹேண்ட் பேக்கும் கைப்பற்றப்பட்டிருக்கிறது. அதில் ஐயாயிரம் ரூபாய் இருந்ததாக போலீசாரின் எப். ஐ. ஆரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

''பணத்தைக் கைப்பற்றுவதுதான் சிவராமனின் நோக்கம் என்றால், பதினைந்தாயிரம் ரூபாயை மட்டும் எடுத்துக் கொண்டு, ஐயாயிரம் ரூபாயை பாவம் போகட்டும் என்று மிச்சம் வைத்துவிட்டு எவனாவது போவானா? கொலைக்கே அஞ்சாதவன் ஐயோ பாவம் என ஐயாயிரத்தை விட்டு விட்டுப் போவான் என்ற பொருத்தமற்ற வாதத்தை நண்பர் ராமையா ஏற்றுக்கொள்ளச் சொல்லுகிறாரா?

''அடுத்து—சிவராமனின் வீட்டுக்குள் அன்று இரவு... சிவராமன் பணம் கேட்டு உலகநாதன் மறுத்ததாகவும் சாவித்திரியை ஏவிவிட்டு மயக்கச் சொன்னதாகவும்—அவள் மேனகையாய்ப் போய் அந்த விசுவாமித்ரரை மயக்க முயன்றதாகவும், அந்த முற்றும் துறந்த ஞானி, 'சீச்சீ... இந்தப் பழம் புளிக்கும் என்றதாகவும், உடனே சாவித்திரியைக் கற்பழிக்க முயன்றதாக கூப்பாடு போட்டு சிவராமன் விரட்டியதாகவும் ஒரு அற்புதமான கற்பனையை ஜோடித்து

இருக்கிறார்கள் போலீசார். இப்படி 'வீட்டுக்குள்ளே' நடந்ததாகக் கூறுவது வெறும் அனுமானமே தவிர உண்மையே என்று நிருபிக்க எந்த ஒரு சாட்சியமும் போலீசு தரப்பில் இல்லை. இது ஒன்றே உள்ளே நடந்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சி பொய் என்பதை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது.

"எனவே, சிவராமன் கொலை செய்யவில்லை என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறிக்கொண்டு சிவராமனை விடுதலை செய்யுமாறு வேண்டுகிறேன்."

இவ்வாறு தனது ஆணித்தரமான வாதத்தை முடித்தார்–அமர்ந்தார், சிவராமன் சார்பில் ஆஜர் ஆன நீலமேகம்.

"இறுதியாக நீ ஏதாவது சொல்ல விரும்புகிறாயா? உன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களை மறுக்கிறாயா?" என்று நீதிபதி வாசுதேவன் சிவராமனிடம் கேட்டார்.

அவருடைய குரலில் கனிவு—பார்வையில் பட்சாதாபம்!

சிவராமன் விரசதியும் வேதனையும் ததும்பிய பார்வையை நீதிபதியை நோக்கிப் பரப்பினான். அந்தப் பார்வை நீதிபதி வாசுதேவனின் இதயத்தின் ஆழத்தே புதையுண்டு கிடக்கும் மனிதாபிமான உணர்ச்சியை வருடியதுபோலும். துணுக் குற்றவரைப்போல் சற்று நிமிர்ந்தார்.

மெல்லிய குரலில் சிவராமன் பேச ஆரம்பித்தான்.

"மேன்மை மிகு நீதிபதி அவர்களே! இறுதியாக நான் என்ன சொல்லப் போகிறேன்? கொலை செய்தேன் என்கிறார்கள்; சொல்லிவிட்டுப் போகட்டும். அதற்காக நான் கவலைப் படப் போவதில்லை. ஆனால் பணத்திற்காக ஆசைப்பட்டு என் மாமன் மகளை உலகநாதனிடம் அனுப்பினேன் என்று கதை கட்டியிருக்கிறார்களே, அதைத்தான் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. என் மாமன் மகள் என் உயிர். அவளை மட்டுமென்ன எனக்கு உறவோ உரிமையோ இல்லாத வேறு எந்தப் பெண்ணாக இருந்தாலும் சரி, மயக்கும் படி ஏவிவிடக்கூடிய ஈனப்புத்தி என் காலடி மண்ணை மிதித்த வர்களுக்குக்கூட வராது.

"மானம் மரியாதையைக் குலப் பெருமையாகப் போற்றிடும் பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்தவன் நான். என் மீது களங்கத்தை வாரி இறைத்த போலீசாரை சட்டம் தண்டிக்காது. இப்போது நானும் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது ஆனால்...இவர்களைத் தெய்வம் தண்டிக்காமல் விடாது.

"கொலைக்கான மோட்டிவ்—அதாவது எனக்கு ஒரு நோக்கம் இருந்ததாக குற்றச்சாட்டில் குறிப்பிட வேண்டுமே என்பதற்காக என்னை பெண்ணைக் கூட்டிக் கொடுக்கத்

துணிந்த பேடியாக்கி விட்டார்கள். நான் பேடியல்ல. என் வம்சத்தில் எவரும் கோழையல்ல.

"இப்போதும் பகிரங்கமாக—இந்த நீதி மன்றத்திலேயே அறிவிக்கிறேன்; உலகநாதன் என் கையில் பிடிபட்டிருந்தால் கொலை செய்தே இருப்பேன். அவனது பிணமே உங்களுக்குக் கிடைத்திருக்காது. இரும்புத் தடியாலேயே அடித்து அடித்துக் கூழாக்கி ஓடை நீரிலேயே கரைத்து விட்டிருப்பேன். பாவி, என் கையில் அகப்படவில்லையே! தப்பி விட்டானே! அவனைக் கொலை செய்யும் பாக்கியம் வேறு எவனோ ஒருவனுக்கு அல்லவா கிடைத்து விட்டது. அவனைக் கொன்ற புண்யவான் யாரோ? எங்கிருக்கிறானோ? ஒரு பாவியைக் கொன்ற புண்யவான்; அவன் வாழவேண்டும்! அவனுக்காக நான் சாகவும் தயார். இம்... சீக்கிரம் எனக்குத் தூக்குத் தண்டனை விதியுங்கள்."

இவ்வாறு உரக்கப் பேசினான். பேச்சின் ஆரம்பத்தில் இருந்த தாழ்மையும் தன்மையும் பேசப் பேசக் கடுமையாகிப் பொங்கி எழுந்த புலியாக உறுமி, கோர்ட்டையே கிடு கிடுக்க வைத்து விட்டான் சிவராமன்.

அவனது பேச்சைக் கேட்டு நீதிபதியே நிலை பெயர்ந்தார். நீதிபதி ஸ்தானத்திலிருந்து தள்ளப்பட்டு சாதாரண மனிதனாக மாறி விட்டாரா? அவருடைய கண்கள்கூட கலங்கி விட்டனவா?

அப்படியானால் சிவராமனை நிரபராதி என்று நீதிபதி முடிவு செய்து விட்டாரா? நீதிமன்றமே அப்படித்தான் நினைத்தது. 'தனது அற்புதமான நடிப்பால்—அருமையான பேச்சு வன்மையால் நீதிபதியின் உள்ளத்தை உலுக்கி விட்டான் சிவராமன்.'—இது போலீசாரின் எண்ணம். 'இந்த நீதிபதி சிவராமனின் பேச்சை நம்பி உணர்ச்சிக்கு அடிமையாகி விடுதலை செய்து விட்டால் இதை லேசில் விட்டு விடக் கூடாது. அப்பீல் செய்ய வேண்டும். சிவராமனை எப்படியும் தண்டிக்காமல் விடப்படாது' என்று அப்போதே முணு முணுத்தனர் சர்க்கார் தரப்பினர். இவ் வழக்கு இரு தரப்பாரின் கௌரவப் பிரச்னையாக மாறி விட்டது.

நீதிபதி தீர்ப்பை ஒத்தி வைத்தார்.

சாவித்திரியும் செல்லம்மாளும்கூட சிவராமன் விடுதலையாவான் என நம்பிக் கிடந்தனர்.

தீர்ப்பு வழங்கப்படும் நாளும் வந்தது.

"சந்தர்ப்ப சாட்சியங்கள் அனைத்துமே சிவராமன் குற்றவாளியே என மெய்ப்பிக்கின்றன. கொலை செய்திருப்பான் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. எனவே சிவராமன்

குற்றவாளியே எனத் தீர்மானிக்கிறேன். ஆயினும் கொலையை நேரில் பார்த்த சாட்சியம் ஒன்றுகூட இல்லாமையால் அதை எதிரிக்கு சாதகமாக்கி ஆயுள் தண்டனையோ தூக்குத் தண்டனையோ விதிக்க வேண்டிய இந்தக் குற்றத்திற்கு... ஏழாண்டு கடுங்காவல் தண்டனை மட்டுமே விதிக்கிறேன்'' என்றார் நீதிபதி வாசுதேவன்.

அப்பாடா! சர்க்கார் தரப்புக்கு ஒரே உற்சாகம்—நீதிபதி வாசுதேவன் எப்போதுமே நீதி தவறி நடக்கமாட்டார் எனப் புகழுரை பாடினர். சிவராமன், சாவித்திரி, செல்லம்மாள் மூவரும் கதறி அழுதனர்.

COMICS PDF TIMES

## 2. கொலை செய்யேன்

கடுங்காவல் தண்டனையும் கொடிய சிறை வாழ்வும் சிவராமனுக்கு கலக்கமோ கவலையோ அளிக்கவில்லை. மாறாக, வயோதிகத் தாயையும் வயதுக்கு வந்த மாமன் மகள் சாவித்திரியையும் இவ்வுலகில் விட்டு வந்திருக்கிறோமே என்ற ஏக்கம்தான் அவனை வாட்டி வதைத்தது.

பளிங்குச் சிலை—பவளச் செவ்வாய்—பரவச மூட்டும் பரந்த நெஞ்சம்—பட்டு மேனி—பளபளக்கும் பருவம்—பால் உணர்ச்சியைத் தூண்டிவிடும் படைப்பு—இப்படி சாவித்திரியைப் பற்றி வர்ணித்து கொண்டே போகலாம். அதற்கொரு முடிவே இருக்காது.

'இவ்வளவு கவர்ச்சி இருப்பதால்தானே வீட்டுக்கு விருந்துண்ண வந்த உலகநாதன் கையைப் பிடித்து இழுத்தான்—காம சேஷ்டைக்கு அழைத்தான். அதுவும் தான் வீட்டினுள் இருக்கும்போதே. இப்போது வீட்டிலும் இல்லை. கூப்பிட்டாலும் ஓடிவரும் தொலைவிலும் இல்லை. அபயக் குரல் கேட்டபிறகு தூரத்தைக் கடந்தேனும் உதவிக்குப் போகலாம் என்று முயன்றாலும் முடியாதே. தான் கிடப்பதோ சிறைச்சாலை இரும்புக் கம்பிகளுக்கு அப்பால். நினைத்த மாத்திரத்தில் போய்வரக் கூடிய இடமல்ல. இந்த நிலையில் சாவித்திரிக்கு ஒன்று நேர்ந்தால்...'

இவ்வாறு எண்ணியெண்ணி மனம் புழுங்கினான். சிவராமன். அவனுக்கு உண்டான கொந்தளிப்பு—சிறைச்சாலையின் இரும்புக் கதவுகள் இலவம் பஞ்சைப்போல் பறந்து விடும்போல் இருந்தது.

ஏழாண்டு காலச் சிறைத் தண்டனையை ஏற்று சிறைக் கொட்டடிக்குள் சிவராம் புகுந்த மூன்றும் நாள்...

நீதிபதி வாசுதேவன் சிறைச்சாலைக்கு வந்தார். இவ்வாறு நீதிபதிகள் சிறைச்சாலைக்குள்ளே சரியான காரணங்கள் இன்றி வருவதில்லை. அதுவும் அவரால் தண்டிக்கப்பட்ட குற்றவாளியைக் காண வருவது என்பது நடக்கவே முடியாதது.

இதனால் நாலுபேர் நாலு விதமாகப் பேசக்கூடும் எனக் கருதினாரோ என்னவோ...கல்விமான்—தர்மத்தின் தலைவர்—சட்டங்களையும் மரபுகளையும் நன்குணர்ந்தவர்--எனவே நீதிபதி பதவியிலிருந்து கட்டாய விடுமுறை எடுத்துக் கொண்டு ஒரு சாதாரண மனிதராகி சிவராமனைச் சந்திக்க வந்தார்.

தன்னைத் தண்டித்த—உலக வாழ்விலிருந்து துண்டித்த-நீதிபதி என்ற ஆத்திரத்தால் பொங்கி எழுவான்—தன்னை திட்டுவான் சிவராமன் என்று வாசுதேவன் எதிர்பார்த்தே வந்தார். ஆனால்...உயர்ந்த ஆசனத்தில் கம்பீரமாக வீற்று இருந்தபடி தீர்ப்பு வழங்கிய அந்த உயர்ந்த மனிதர்--தன்னைக் காண அவரது பாதம் படக்கூடாத பாவிகள் வசிக்கின்ற நரகத்திற்கு வந்திருக்கிறார் என்றதும் அவனையே அவனால் நம்ப முடியவில்லை

வாசுதேவனை அப்படியே ஒரு பார்வை பார்த்தான்—கண்கள் நீரை வர்ஷித்தன. 'ஐயா! இப்படி அநியாயமா தண்டிக்கலாமா?' என்று கேட்பதைப்போல் தோன்றின, சிவராமனின் பார்வையும் கண்ணீரும்.

அவரும் அவனை தயக்கத்தோடும் தயவோடும்தான் பார்த்தார். இருவருக்குமிடையே சற்று நேரம் மௌனம்.

"சிவா! சட்டப்படி உன்னைத் தண்டிக்க வேண்டிய..."

"கடமை உங்களுக்கு இருந்ததால் தண்டிக்க நேரிட்டதுன்னு எனக்குத் தெரியும். நீங்க என்ன செய்வீங்க..."

"இதை நீ உணர்ந்திருப்பேன்னு நான் நினைக்கவே இல்லை. எந்த நீதிபதிக்கும் யாரையும் அநியாயமாகத் தண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையவே கிடையாது. சந்தர்ப்ப சாட்சியங்களை அடிப்படையாக வைத்து சட்டப்படி நீதி வழங்க வேண்டிய பொறுப்பு எங்களைச் சார்ந்திருப்பதால் தண்டனை வழங்குகிறோம். அவ்வளவுதான். மிக மிக அபூர்வமாகத்தான் நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடுவார்கள். நீயும் ஒரு நிரபராதியாக இருப்பாயோ என்று என் மனம் உறுத்திக்கொண்டே இருந்தது."

"இது ஒன்றே போதும்; இதை எனக்குக் கிடைத்த தார்மீக வெற்றியா எண்ணிப் பூரிப்படைகிறேன் ஐயா, பூரிப்படைகிறேன். நான் நிரபராதி. உலகநாதனை கொலை செய்தது நானல்ல; யாரோ செய்த குற்றத்திற்காக நான் தண்டனையை அனுபவிக்கிறேன்."

"அப்படியானால் எனது இத்தனை ஆண்டு கால அனுபவத்தில் ஒரு நிரபராதியை தண்டித்திருக்கிறேன். நீ கோர்ட்டில் இறுதி வாக்குமூலம் கொடுக்கும்போது 'உலகநாதன் என் கையில் பிடிபட்டிருந்தால் கொலை செய்திருப்பேன்' என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டாயே அப்போதே நீ நிரபராதியாகத்தான் இருப்பாய் என எண்ணினேன். ஆனால் சந்தர்ப்ப சாட்சியங்கள் அனைத்தும் உனக்கு எதிராக நின்றன போலீசார் பலமான அடிப்படையோடு வழக்கைத் தொடுத்திருந்தார்கள். அதனால் சட்டப்படி......"

"தண்டனை விதித்து விட்டீர்கள். அதுக்காக உங்களை நோகவில்லை. என் விதியை நினைத்து நொந்துகொண்டேன். சிறைச்சாலை எனக்குப் புதுசுதான்; இங்கே எனக்கு இடப்படும் வேலைகளும் கடினமானதுதான். அதுக்காக நான் கொஞ்சமும் வருத்தப்படலே. ஆனா......என் தாயையும் மாமன் மகள் சாவித்திரியையும் நிர்கதியா விட்டு விட்டு வந்திருக்கோயேன்னு நினைக்கும்போதுதான் என் நெஞ்சமெல்லாம் பதறுது ஐயா."

"சிவா! வருத்தப்படாதேப்பா. உனக்காக கண்ணன் என்ற ஒரு இளம் வழக்கறிஞர் அப்பீல் செய்திருக்கார். நீ ஐகோர்ட்டில் நிச்சயம் விடுதலை செய்யப்படுவாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நான் இப்போது நீதிபதியல்ல. உன்னைப்போல் ஒரு சாதாரண மனிதன். ஆகவே என்னால் கூடுமான உதவிகளையும் உனக்குச் செய்கிறேன். தைரியமாக இரு. அடிக்கடி இங்கு வந்து உன்னைச் சந்திக்கிறேன்."

இவ்வாறு நீதிபதி வாசுதேவன் கூறிவிட்டு திரும்பினார்—நடந்தார் அவர் சென்ற திசையைப் பார்த்தபடியே நின்றான் சிவராமன். 'மனிதர்களுள் இப்படித் தெய்வங்களும் உண்டோ!' என்று சிவராமனின் வாய் முணு முணுத்துக் கொண்டது.

உயர் பதவி வகித்த— அதுவும் அவராலேயே தண்டிக்கப்பட்ட குற்றவாளியை வந்து பார்த்தது மட்டுமல்ல, கண் கலங்கி நின்ற அவனுக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிவிட்டுச் செல்கிறாரே என்ற வியப்போடு சிறை அதிகாரிகளும் சிப்பந்தி

களும் ஏனைய கைதிகளும் கவனித்தனர். நம்பவே முடியாத தாக இருந்தது இக்காட்சி.

சின்னாட்களில் வழக்கு உயர்நீதி மன்ற விசாரணைக்கு வந்தது. இளைஞரும் பிரபல கிரிமினல் லாயர் சின்னச்சாமி யிடம் பயிற்சி பெற்றவனுமான கண்ணன் சிவராமனுக்காக ஆஜர் ஆனான்.

கண்ணன் உயர்நீதி மன்றத்தில் ஒரு புதிய பிரச்னையை– சிக்கலைக் கிளப்பினான்.

''யுவர் ஆனர்! இவ் வழக்கில் உண்மை புதையுண்டு போயிருக்கிறது. அதை வெளிக் கொணர்ந்து விட்டால் வழக்கு திசை திரும்பிவிடும். குற்றவாளியாகத் தீர்மானிக்கப் பட்டு ஏழாண்டு சிறைத் தண்டனையை கீழ்க்கோர்ட்டில் பெற் றுள்ள சிவராமன் கொலை செய்யவில்லை என்பதும் நிரூபண மாகி விடும்.

''சந்தர்ப்ப சூழ்நிலைகளையும்–உலகநாதன் சிவராமனின் வீட்டுக்கு வந்தான்––தங்கினான்–தகராறு மூண்டது என்பதை யும்––தகராறு முற்றி உலகநாதனைத் தீர்த்துக்கட்ட சிவராமன் துரத்திச் சென்றான் என்பதையும் அடிப்படையாக வைத்து மட்டுமே இவ் வழக்கை அணுகி இருக்கிறார்கள்––ஆராய்ந் திருக்கிறார்கள் போலீசார். போலீசார்மீது குற்றம் கற்பிக்க வேண்டும் என்பது எனது குறிக்கோள் அல்ல. ஆனால்...... போலீசார் வழி தவறி விட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்டு வது என் கடமை

''கொலைக்கான மோட்டிவ் இருக்கிறதா என்ற நோக்கில் பார்த்தபோது சிவராமன்––உலகநாதன் தகராறு கேள்விப் பட்டு இருக்கிறார்கள். உடனே சிவராமனே கொலை செய்து இருக்க முடியும் என்ற அடிப்படையில் மேற்கொண்டு விசாரணையைத் தொடர்ந்து விட்டார்கள். அதனால் உண்மை யான குற்றவாளி யார் என்பது கருத்துக்குப் புலப்படாமல் போய்விட்டது.

''சிவராமன்–உலகநாதன் இருவருக்குமிடையே மூண்ட தகராறையோ—அவனை விரட்டியதையோ எங்கள் தரப்பில் மறக்கவில்லை. அதுவரைக்கும் சரி ஆனால் கொலை செய் தது சிவராமன் அல்ல என்பதுதான் எனது அழுத்தம் திருத்த மான கருத்து

''கீழ்கோர்ட் நீதிபதி தமது தீர்ப்பில் ஒன்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார் சிவராமன் உலகநாதனை ஓட ஓட விரட் டினான் என்பதுவரை சாட்சியங்கள் உள்ளன. ஆனால் சிவ ராமன்தான் உலகநாதனை இரும்புத் தடியால் அடித்துக் கொன்றான் என்பதற்கு சாட்சியங்கள் ஒன்றுகூட இல்லை என்

பதை குறிப்பிட்டு இந்த சந்தேகத்தை எதிரிக்கு சாதகமாக்கி ஏழாண்டு கடுங்காவல் தண்டனை மட்டும் விதிக்கிறேன் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்.''

''கண்ணன் தனது வாதத்தை நிறுத்தவில்லை. இதற்குள் அரசுத் தரப்பு வழக்கறிஞர் தேவசகாயம் குறுக்கிட்டார்

''நண்பர் கண்ணனின் வாதம் விசித்திரமாக இருக்கிறது. கொலை செய்தே தீருவேன் என்று உலகநாதனை மிரட்டிச் சென்றிருக்கிறான் சிவராமன். இதை சிவராமனே ஒப்புக் கொண்டிருக்கிறான். இப்போதுகூட என்னருமை நண்பர் கண்ணன் அதை மறுக்கவும் இல்லை. அப்படியிருக்கும்போது கொலை செய்ததை கண்கூடாகக் கண்ட சாட்சிகள் இல்லை என்பதாலேயே சிவராமன் கொலை செய்யவில்லை என்றாகிவிடுமா?

''ஒரு கொலை நடப்பதற்கான மோட்டிவ்—பலமாக இருக்கிறதா அது நிரூபிக்கப்பட்டிருக்கிறதா என்பதுதான் ஒரு வழக்கின் முக்கிய அம்சமாகும். அந்த வகையில் நாங்கள் ஐயத்திற்கிடமின்றி நிரூபித்து விட்டோம் இப்போது கொலை செய்ததைப் பார்த்த சாட்சிகள் இல்லை என்பதை வலியுறுத்திக் காட்டி சிவராமன் கொலை செய்யவில்லை என்று வழக்கை திசை திருப்ப முயல்வது நண்பர் கண்ணனின் வீண் முயற்சி.

''எல்லா கொலை வழக்குகளிலும் கண்கூடாகக் கண்ட சாட்சிகள் கிடைப்பதில்லை. கிடைப்பதும் கடினம். கொலை நடக்கப் போகிறது என்று யாராவது குறிப்பிட்ட இடத்தில் காத்திருக்க முடியுமா? அப்படிக் காத்திருக்க வேண்டும்—பின்னும் சாட்சி சொல்லவும் வரவேண்டும் என்கிறாரா கண்ணன்? இது நடக்கக் கூடிய காரியமா?''

இவ்வாறு தேவசகாயம் ஏளனமாகச் சிரித்துக்கொண்டார்.

கண்ணன் தனது வாதத்தைத் தொடர்ந்தான்.

''சர்க்கார் தரப்பு வழக்கறிஞர் கொலை செய்வதைக் காண யாராவது அங்கே காத்திருக்க வேண்டுமா எனக் கேட்கிறார். அப்படி யாரும் காத்திருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை அது சாத்தியமல்ல. ஏதோ எனது வாதத்தை அடித்து நொறுக்கி விட்ட மாதிரி அலட்சியமாக சிரித்து விட்டதாலேயே என் வாதம் அடிபட்டதாகி விடுமா?

''கண்கூடாகக் கண்ட சாட்சிகளும் இருந்தால்தான் குற்றம் ஐயத்திற்கிடமில்லாமல் நிரூபணமாகும். அதற்காக கண்கூடான சாட்சிகள் கண்டிப்பாகத் தேவை எனக் கேட்க நான் அவ்வளவு அப்பாவி அல்ல. இப்போது நான் கேட்

கிறேன், சிவராமனின் பிடியில் அகப்படாமல் தப்பிவிட்ட உலகநாதனை வேறு யாரோ ஒருவர் கொலை செய்திருக்கக் கூடாதா?"

"அதெப்படி? அந்தப் புதுக் கொலைகாரன் திடீரென்று வானத்திலிருந்து குதித்து விட்டானா?"

"அவன் எங்கிருந்து குதித்தான் என்பது முக்கியமல்ல, வேறொருவன் குதித்திருக்கவே முடியாது என்பது மூத்த வழக்கறிஞர் தேவசகாயத்தின் வாதமா?"

"கனம் நீதிபதி அவர்களே, நண்பர் கண்ணன், சிவராமன் குற்றவாளியா இல்லையா என்பதைப் பற்றி விவாதித்தால் நல்லது. இவர் வழக்கறிஞரே தவிர, துப்பறியும் நிபுணர் அல்ல."

"வழக்கறிஞராக இருப்பவர்களுக்கு ஓரளவு துப்பறியும் ஆற்றலும் இருத்தல் வேண்டும்."

"நண்பர் துப்பறியும் தொழிலையும் சேர்த்துப் பார்க்கட்டும்; எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஒன்றை மட்டும் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். வெறும் யூகத்தை சட்டம் ஏற்றுக் கொள்ளாது. நிதர்சனமாக உண்மையை எடுத்துக் காட்டினால்தான் சட்டம் வளைந்து கொடுக்கும்."

"கொடுக்க வேண்டும் என்பதற்காகவே தான் இவ்வளவு நேரமும் பேசுகிறேன். என் வாதம் வெறும் யூகம் அல்ல. உண்மையின் படப்பிடிப்பு. இப்போது அதை எடுத்துக் காட்டுகிறேன். இதோ இந்த புகைப்படங்களை கனம் நீதிபதி அவர்கள் பார்வையிடும்படி வேண்டுகிறேன். இந்தப் புகைப் படங்கள் உலகநாதனின் பிணம் ஓடைக்கரையில் கிடந்த போது எடுக்கப்பட்டவை.

"பிணம் கிடக்கும் இடத்தின் வலதுபுறம்......இரண்டு மூன்று பாத சுவடுகள் சதுப்பு நிலத்தில் பதிந்திருப்பதைக் கவனியுங்கள். அவ்வளவு தெளிவாக இல்லை என்றாலும் பார்வைக்குப் புலப்படும் அளவுக்குத் தென்படுகின்றன. அதாவது இடது புறப் பாதங்கள் இரண்டு இடங்களில் பதிந்துள்ளன. அவற்றில் கட்டை விரல் இல்லை..."

"கட்டை விரல் பதியாமல் போயிருக்கலாமே" என்றார் நீதிபதி இடைமறித்து.

"அது சாத்தியமல்ல. கட்டை விரல் தெளிவாகப் பதிவு ஆகும். அது பதிவாகாததால் இடது காலில் ஒரு பெருவிரல் இல்லாத யாரோ ஒருவர் அன்று இரவு அந்த இடத்திற்கு வந்துவிட்டு திரும்பியிருக்க வேண்டும். பதிவாகியுள்ள பாதச்

சுவடுகள் திரும்பிப் போகும்போது மதிவானவை என்பது தெளிவு.''

''அதை வைத்து நீங்கள் அனுமானிப்பது என்ன?''

இது நீதிபதியின் கேள்வி.

''இடது கால் பெருவிரல் இல்லாத யாரோ ஒரு மர்ம ஆசாமி உலகநாதனை வழிமறித்துக் கொன்றிருக்க வேண்டும்!''

உடனே ஆவேசத்தோடு தேவசகாயம் எழுந்தார்.

''அப்படித் திடீரென ஒரு எதிரி முளைத்து வழி மறித்து உலகநாதனைக் கொன்றிருக்க வேண்டிய அவசியம்?'' என்று மடக்கினார்.

கண்ணன் கொஞ்சமும் பதற்றமடையாமல்...

''அவன் திடீரென்று முளைத்ததாக ஏன் சொல்ல வேண்டும்? அவன் ஏற்கனவே உலகநாதனுக்கு எதிரியாக இருந்திருக்கலாமல்லவா? உலகநாதனைத் தீர்த்துக் கட்ட சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்திருப்பான். சிவராமன், உலகநாதனைத் துரத்தி வந்தான். உலகநாதன் எங்கோ மறைந்து கொள்ளவே சிவராமன், அவனைக் காணவில்லையே என்று திரும்பி விட்டான். சிவராமனுக்குப் பயந்து ஓடைக்கரைக்கு ஓடியவன் தன் பழைய எதிரியிடம் சிக்கியிருப்பான். அவன் தீர்த்துக் கட்டிவிட்டுப் போய்விட்டான். துரத்தி வந்தவனும் கொலை செய்யாத சிவராமன் மாட்டிக் கொண்டதால் அந்த உண்மையான கொலைகாரன் இப்போது எங்கோ நிம்மதியாக இருக்கிறான்.''

''இதை நான் மறுக்கிறேன். போட்டோவில் தெரியும் பாத சுவட்டில் கட்டை விரல் இல்லை என்ற புதிய பிரச்னையைக் கிளப்பி சிவராமனைக் குற்றவாளியில்லை எனக் காட்டிட நண்பர் இவ்வளவு சிரமப்படுவதற்காக எனது பாராட்டுகள்–அத்தோடு எனது ஆழ்ந்த அனுதாபமும்கூட'' என்றார் தேவசகாயம்.

''மிக்க நன்றி!'' என்று தேவசகாயத்தை நோக்கிக் கூறிவிட்டு நீதிபதி பக்கம் திரும்பி, ''கனம் நீதிபதி அவர்களே! நான் எழுப்பியுள்ள இந்தப் பிரச்னையை போலீசாரின் கவனத்திற்குக் கொண்டுவந்து மீண்டும் புலன் விசாரணை நடத்தினால் உண்மையான குற்றவாளி அகப்படுவான் என்ற எனது பணிவான வேண்டுகோளை ஏற்று, எதிரி சிவராமனை விடுதலை செய்யாவிட்டாலும் மறு விசாரணைக்கு உத்தர விடும்படி வேண்டுகிறேன்'' என்று கேட்டுக்கொண்டான் கண்ணன்.

நீதிபதிகள் தங்களின் முடிவை மறுநாள் அறிவிப்பதாகத் தெரிவித்தனர். நீதிமன்றத்திற்கு வந்திருந்த செல்லம்மாள்— சாவித்திரி— நீதிபதி வாசுதேவன் ஆகியோர் கண்ணனின் வாதத் திறமையைப் பாராட்டினர்.

## 3 கடவுளாம் கடவுள்

"சாவித்திரி! இனிமேல் வருத்தப்பட்டு என்ன ஆகப் போவது. சட்டம் வளைந்து கொடுக்காதபோது நீதி விபத்துக்குள்ளாவது சகஜம்தான்."

"கண்ணன்! இனி எங்க அத்தானைக் காப்பாற்றவே முடியாதா?"

"இனி நம் கையில் இல்லை. ஏனென்றால் கீழ்க்கோர்ட் தண்டனையை ஹைகோர்ட் ஊர்ஜிதம் செய்துவிட்ட பிறகு இறுதியாக இருக்கக் கூடிய வாய்ப்பு சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வதுதான்."

"குடியிருக்கும் வீடு ஒன்றுதான் மிச்சம். மற்ற சொத்து பத்துகளையெல்லாம் விற்றுத்தான் கேஸை நடத்தினோம். இப்போ இருக்கிற இந்த ஒரு வீட்டையும் விற்றுவிடத் தயார். எப்படியாவது அத்தான் விடுதலை அடைந்தால் போதும்."

"இப்படி என்னிடம் நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லாமல் நானே சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய ஹைகோர்ட் அனுமதியை கேட்டாச்சு. அனுமதியை மறுத்திட்டாங்க. இனிமே அப்பீல் செய்ய வழியே கிடையாது. நீதிதேவனின் வாசற்கதவு தாழிடப்பட்டு விட்டது. இருப்பது இன்னும் ஒரே ஒரு வழிதான். ஜனாதிபதிக்கு கருணை மனு எழுதிப் போடலாம். அந்த மனுவை டிராப்ட் போட்டு உன் அத்தானிடம் கையெழுத்து வாங்கி ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கிறேன். கடவுள் அருளால் ஜனாதிபதி மனசிலே கருணை பிறந்தால்...வர்ற சுதந்திர தினத்திற்காக உன் அத்தான் விடுதலை செய்யப்படலாம்."

"கடவுளாம் கடவுள். கடவுளுக்கு கண்ணும், அருள் காட்டும் உள்ளமும் இருந்திருந்தால் எங்க அத்தானுக்கு இக் கதியே நேர்ந்திருக்காதே. கண்ணன்! எனக்கிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் போயிடுச்சு. இனிமே எங்க அத்தான் மீள்றதுக்கு வழியே இல்லே. ஏழு வருடங்கள் ஜெயில்லே

வாடத்தான் போகுது. ஏழு வருடங்கள்...ஏழு வருடங்கள்... அப்பப்பா......அதுவரைக்கும் அத்தையின் உலுத்துப்போன இருதயத்திற்குள்ளே ஊசலாடும் அந்த உயிர் நிலைத்து இருக்குமா?''

இவ்வாறு அழுது புலம்பியவள் கண்ணனின் மடியில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவன் அப்படியே அவளுடைய முதுகை ஆறுதலாக தட்டிக் கொடுத்து, "அழாதே சாவித்திரி, அழாதே" என்று தேற்றினான்.

இது என்ன காட்சி? கணவன் அல்லது காதலன் மடியில் தானே ஒரு பெண் இப்படி முகம் புதைத்து அழுவாள்! இங்கே அதே காட்சியைக் காணும்போது.........கண்ணனும் சாவித்திரியும்...?

ஆம்!...சாவித்திரி கண்ணனின் காதலியாகி விட்டாள்! இது எப்போதோ நிகழ்ந்து விட்டதல்ல! அண்மையில்தான். சிவராமனின் வழக்கை எடுத்து நடத்தும்படி கண்ணனின் உதவியை நாடிப் போனாள் சாவித்திரி மனமுவந்து வழக்கை நடத்திக் கொடுக்க இசைந்தான் அது மட்டுமல்ல; அதற்காக ஒரு காசுகூட 'பீஸாக' வாங்கிக் கொள்ளவில்லை. இவ்வாறு இலவசமாக ஆஜர் ஆனான் என்பதற்காக தன்னையே ஒப்படைத்தாள் சாவித்திரி என்று கருதிவிடக் கூடாது.

சாவித்திரி அவ்வளவு சாதாரணமான—பலகீனமான பெண்ணல்ல. கண்ணன் சிவராமனின் குடும்பத்தின்மீது உளமாரக் காட்டிய அன்பும் ஆதரவும்தான். இத்தோடு சிவராமன் உண்மையிலேயே குற்றவாளியல்ல என்ற அழுத்தமான நம்பிக்கை அவனுக்கு ஏற்கனவே இருந்து வந்தது. 'அத்தானை குற்றவாளியல்ல என்று நம்பும் ஒரே மனிதர் இவர்தான்' என்று அறிந்தபோது கண்ணன்மீது அலாதியான மதிப்பும் மரியாதையும் சாவித்திரிக்கு ஏற்பட்டு விட்டது.

கண்ணன் ஒரு வழக்கறிஞனாக மட்டும் நடந்துகொள்ளவில்லை; அவர்களுள் ஒருவனாக மாறிவிட்டான்.

ஒரு நாள்—

நீதி மன்றத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் கண்ணன். அப்போது சாவித்திரி அங்கே ஓடோடி வந்தாள். ஹைகோர்ட்டில் அப்பீலை ஏற்றுக் கொண்டார்களா என்பதை அறிந்து செல்ல. அந்த இனிக்கும் செய்தியை அவனும் வெளியிட்டான். அந்த மகிழ்ச்சியால் அவள் உள்ளம் துள்ளியது.

கேஸ் கட்டுகளை எடுத்து, டிரஸ் செய்து சித்தமாகிவிட்டு கண்ணன் கையில் கொடுக்க நீட்டினான் சாவித்திரி அவனும் தனது கரங்களை நீட்டி வாங்கப் போனான். அப்போது இருவருடைய விரல்களும் ஒன்றை ஒன்று தீண்டின. அந்த தொடும் உணர்ச்சிக்கு இருவரும் இலக்காயினர். அப்படியே சில நிமிடங்கள் விரல்கள் உராய்ந்தவாறே தங்கின. கேஸ் கட்டு கண்ணனின் கைக்குப் போகவில்லை.

முதலில் இருவருக்குமிடையே உள்ளத்தால் விளைந்த அன்டம் அபிமானமும் நிலவ ஆரம்பித்தது. அடுத்து கண்ணன் மீது சாவித்திரிக்கு அடக்கம் நிரம்பிய மதிப்பும் மரியாதையும் உண்டாயின. இறுதியாக ஸ்பரிச உணர்ச்சிக்கு ஆட்பட்டாள். அதன் விளைவு...?

இரண்டாம் முறை கண்ணனின் தோட்டத்தில் சந்திப்பு—ஒருவரை ஒருவர் அள்ளி உண்பதைப்போல் பார்த்தவாறே அமர்ந்திருந்தனர். அன்று இருவரும் ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை. பேச முடியவில்லை, பேசவும் முடியாது. காதல் அரும்பும் இயல்பான முறையே இதுதான். அன்று மௌனத்துடன் பிரிந்தனர்.

மூன்றும் நாள் கொஞ்சம் பேசலாயினர்.

"சாவித்திரி! கலகலன்னு பேசுவியே; இப்போ ஒரு வாரமா எங்கூட பேசக்கூட முடியலையே உன்னாலே. அது ஏன்?"

"அதுதான் எனக்கும் புரியலே...... ஆமா, கோர்ட்டிலே நீங்க ஒரு பெரிய வாயாடி வக்கீலுன்னு சொல்றாங்க, வாழ்க்கையிலேயும் நிறையப் பேசுவீங்க...நானும் கேட்டிருக்கேன். இப்போ ஒரு வாரமா நீங்களும்தான் பேசமாட்டேங்கிறீங்க... ஏன்?"

"அதுதான் எனக்கும் புரியலே. ஒருவேளை நம்ம வாழ்க்கையிலே ஒரு திடீர் திருப்பம் ஏற்பட்டிருக்குமோன்னு நினைக்கிறேன். ஒரு கட்டத்திலேயிருந்து இன்னொரு கட்டத்துக்கு வந்து நிற்கிறோமோ என்னமோ. ஒன்று மட்டும் நிச்சயம்; நம்ம இரண்டு பேருடைய உள்ளங்களிலும் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கு."

"அதை நானும் உணர்றேன். அது என்ன மாறுதல்?"

"ஒருக்கால் இப்படி இருக்குமோ! நீ ஒரு கிளையண்ட்—நான் ஒரு அட்வோகேட்டுங்கிற நிலையைக் கடந்து நீயும்.... நானும்..."

"இம்...நீங்களும் நானும்..."

"ஒருவரை ஒருவர்..."

"இம்...சொல்லுங்க...ஒருவரை ஒருவர்..."

"பற்றிக் கொண்டோமோ, கொடியும் கொம்புபோல......
தேனும் பாலும்போல கலந்து விட்டோமோ?"

"சரிதான்... நீங்க எங்கேயோ போறீங்களே!"

"இல்லையே' உன் பக்கத்திலேதான் இருக்கேன்."

இதற்குப் பின்னர் பேச்சு தடைப்பட்டது. தன்னிரு கைகளாலும் தனது முகத்தை மறைத்துக் கொண்டாள். வெட்கமாம்! அது வந்து விட்டால் காதலனைப் பார்க்கக் கூச்சமாம். இது எல்லாம் பெண்களிடமுள்ள ஒரே மாதிரியான பழக்கம்!

விரல்களின் இடுக்குகள் வழியே சாவித்திரியின் கண்கள் சிமிட்டுவதைப் பார்த்துவிட்டான் கண்ணன்.

"ஏய் திருடி! கள்ளத்தனமா என்னைப் பார்க்கிறியா?"

"ஊகூம்! நான் ஒண்ணும் பார்க்கலே!"

"நீ பார்க்கலே. உன் கண்கள்தான் பார்க்குது."

"நான் என்று சொன்னாலே என் கண்களையும் சேர்த்துத் தான்!"

"உண்மைதான் சாவித்திரி. 'நான்' என்கிறபோது வயிறும் நம்மைச் சேர்ந்ததுதான். ஆனால் சில சமயங்களிலே வயிறு நமக்குக் கட்டுப்படாமல் கலாட்டா பண்ணுகிறது இல்லையா? நான் என்பதற்குள்ளே நாமும் அடக்கம்தான் என்று வயிறு சொன்னபடி கேட்குதா? 'பசி பசி' என்று கூப்பாடு போடுகிறது.

"அப்படித்தான் எல்லா உறுப்புகளும். அதுகள்லே கண்களுக்கு ரொம்பக் குறும்புத்தனம் திருட்டுத் தனத்திலே முதல் நம்பர்! எங்கே...என்னைப் பார்க்கவே கூடாதுன்னு நான் என்கிற அதிகாரத்திலே ஆர்டர் போடு. அடங்குதான்னு பார்ப்போம். கேட்காதே...... அதோ... இப்பக்கூட என்னைப் பார்க்குதே!"

இதைக் கேட்டதும் 'களுக்'கெனச் சிரித்து விட்டாள், சாவித்திரி.

"அடேயப்பா! வழக்கு மன்றத்திலேதான் ஆர்க்யுமெண்ட்? வாழ்க்கையிலுமா?" என்று கேலியாக கேட்டாள் சாவித்திரி.

"ஆமாம்! வாழ்க்கையே ஒரு வழக்குதான்! அதுவும் கடவுளே நம்மீது தொடுத்துள்ள வழக்கு. இதில் நாம் வழக்காடி—வாதாடி வெற்றி கண்டால் சுவர்க்கம். தோற்றால் நரகம்."

"அப்படியா? ஆமாம்... இந்த வழக்கிலே நாம் வெற்றி பெறுவோமா?"

"வெற்றி பெறுவோம். தெய்வம்தான் நம்மைச் சேர்த்து வைக்கிறது."

"ஆமாம்...நான் யாருக்காகவோ பிறந்தவளில்லே; அத்தானுக்காகவே பிறந்தவள்னு ஊரே சொல்லிக்கிட்டிருந்தது அத்தையின் ஆசையும் அதுதான். நானும் அதற்கு உடன்பாடாகவே இருந்தேன். அத்தான் என் உயிரோடு கலந்தவர். எனக்காக எதையும் செய்யக்கூடிய திடமாக உள்ளம் படைத்தவர். நானும் அவருக்காக எதையும் செய்து முடிக்க சித்தமாக இருப்பவள். இந்த நிலையில் அவர் கொலையாளியாக கடுஞ் சிறையில் கிடக்க—அவரை விடுவிக்க உங்க உதவியை நாடி வந்தபோது நீங்களும் நானும்..."

"இம்... நீங்களும் நானும்...? இம்...சொல்லு சாவித்திரி. ஏன் நிறுத்திட்டே?"

"ஏன், உங்களுக்குத் தெரியாதோ?"

"தெரியும். இருந்தாலும் உன் வாயால் சொல்லி, என் காதால் கேட்கணும்போல ஒரு ஏக்கம்..."

"ஓகோ...சொல்லட்டுமா...நீங்களும் நானும்...நீங்களும் நானும்தான். நானும் நீங்களும்தான்..."

இப்படி ஒரு போடு போட்டாள் சாவித்திரி. கண்ணன் அசந்து விட்டான்.

ஒன்றே ஒன்றை மட்டும் கேட்டு விட்டால் லைசென்ஸ் கைக்குக் கிடைத்து விடும்!

"சாவித்திரி! சிவராமன் விடுதலையாகி வந்தபிறகும்... நம் தொடர்பு நிலைத்திருக்குமா?"

"ஏன், நீடித்திருக்காதா? போர்க்களத்திலே வாபஸ் வாங்கலாம். காதல் களத்திலே வாபஸ் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது."

"வெரிகுட்! வெரிகுட்!! சாவித்திரி! நீ அறிவில் சிறந்தவள்! காதல் இலக்கணத்தின் எடுத்துக்காட்டு!"

"பாராட்டுக்கு மிக்க நன்றி!" என்று கிண்டலாக—வணக்கமும் தெரிவித்தாள் சாவித்திரி.

"சரி...உன் அத்தான் சிவராமன் விடுதலையாகி வெளி வந்தால் நம் காதலைப் பற்றி என்ன நினைப்பார்...ஆத்திரப்படுவாரா?"

"ஒருபோதும் ஆத்திரப்பட மாட்டார்."

"அதெப்படிச் சொல்ல முடியும்! உன் கையைப் பற்றி இழுத்தான் உலகநாதன் என்ற ஒரே ஒரு குற்றத்திற்காகத் தானே ஓட ஓட விரட்டியிருக்கார் உன் அத்தான். அவன் அவர் கையில் அகப்பட்டிருந்தால் கொலையும் செய்திருப்பார் அல்லவா?"

''ஆமாம், அதிலென்ன சந்தேகம்! அது 'சாவித்திரி நம்ம மாமன் மகள்; நானைக்கு மனைவியாகப் போகிறவள்' என்ற உரிமையினால் ஏற்பட்ட ஆத்திரமல்ல. முன்பின் தெரியாத எந்தப் பெண்ணுக்கு அந்தக் கதி ஏற்பட்டிருந்தாலும் கொதித்தெழவே செய்வார். முறைகெட்டு யார் யாரிடம் நடந்தாலும் அவர் சகித்துக்கொள்ள மாட்டார். இது எங்க அத்தானுக்கே உரிய சிறப்பு.'.

''அப்படியா? உன் அத்தான் உண்மையிலேயே மனிதரில் மனிதர்! எப்படியோ...எம்பேரிலே அவர் கோபம் திரும்பி விடாமல் உன் பக்தனுகிவிட்ட என்னை கடாட்சித்து அருள வேண்டியது உன் கடமை.''

''அவ்வாறே உங்களைக் காப்போம்'' என்று தெய்வம் ஆசீர்வதிப்பதைப்போல் கையை உயர்த்தி அசைத்தாள் சாவித்திரி.

''புனிதன் ஆனேன் தேவி. ஆமா......உங்க அத்தான் கிட்டே எப்படி விஷயத்தைச் சொல்லுவே...''

'' 'அத்தான்! நானு...நானு...ஒரு தப்புப் பண்ணிட்டேன்'னு சொல்லி அவர் காலிலே விழுவேன். 'என் சாவித்திரி தப்பே செய்ய மாட்டாள். அப்படி ஏதாவது செய்திருந்தால் அது தப்பா இருக்காது. நல்லதாகவே இருக்கும்'னு கூறி...'என்னேன்னு சொல்லேன் கேட்போம்' என்பார். நானும் மெதுவா தயங்கித் தயங்கி...'அத்தான்! நான் ஒருத்தரைக் காதலிச்சுப்புட்டேன்'னு உண்மையைச் சொல்லுவேன். 'சாவித்திரிக் கழுதை இப்போது பொய் பேசக் கத்துக் கிடுச்சே' என்பார். 'சத்தியமா காதலிச்சிட்டேன்னு அடிச்சுக் கூறுவேன்.''

''உடனே உன் கன்னத்திலே நாலு கொடுப்பார்.''

''அதுதான் இல்லேன்னே! செல்லமா என் கன்னத்தைத் தட்டிக் கொடுத்து, 'அப்படியா! இந்த ராஜாத்தியின் காதலை அடைந்த மகா புண்யவான் யார்? அந்த ராஜாவை நான் காணலாமோ'ன்னு கேட்பாரு. உடனே அவரைக் கூட்டியாந்து உங்க முன்னாலே நிறுத்துவேன். 'என்ன வக்கீலிடம் கொண்டுவந்து நிறுத்திட்டே'ன்னு கேட்பாரு. 'ஆமா, இந்த வக்கீல்தான் என் காதலர்' என்பேன். 'சரி... சரி...கூடிய சீக்கிரம் ஒரு நல்ல நாள் பார்த்து உங்க இரண்டு பேரையும் கட்டிப் போடுறேன். ரெண்டு பேரும் இழுத்துக் கிட்டுக் கிடங்க'ன்னு சொல்லிடுவாரு ''.

''இந்த முடிவுதான் ஏற்படும்கிற திடமான நம்பிக்கை இருக்கா?''

"ஆமாம், அதிலே எனக்குக் கொஞ்சம்கூட சந்தேகமே இல்லே."

"சரி! உன் வாக்குறுதியை நம்பி வக்காலத்திலே கையெழுத்துப் போடுறேன். இந்த வழக்கிலே ஆஜராகி வெகு அற்புதமாக வாதாடி ஜெயிச்சு கொடுக்க வேண்டியது உன் பொறுப்பு. அப்படி வெற்றித் தேடிக் கொடுத்தேன்னு இரண்டு கை நிறைய பீஸ் கொடுப்பேன்."

"அப்படி என்ன பீஸ் கொடுத்திடப் போறீங்க?"

"சரியா ஒரு வருடத் தவணைக்குள்ளே..."

"பீஸ் கொடுக்கவும் அட்ஜர்ன்மெண்ட் அதாவது தவணையா?"

"பின்னே... அந்தப் பீஸைக் கட்டணும்னு தவணை இல்லாமல் முடியுமா? நான் கொடுக்கிறதை அட்வான்ஸா முதல் தானே வேணும்னாலும் கொடுத்திடறேன். உன்னாலே முடியும்னு மறுநாளே கேஷ் பண்ணிக்கோ!"

"அப்படீன்னு...கிராஸ் செக்கா?"

"எஸ்... எஸ்! நீ அதை அக்கௌண்ட்லிலே போட்டு பத்து மாசம் கழிச்சு கேஷ் பண்ணிக்கலாம்..."

"பத்து மாசம் ஆகுமா? அதென்ன செக்?"

"அதுவா?... அது... அதுதான் குவா...குவா... ஆராரோ ஆரிராரோ..."

குழந்தையை ஏந்தி தொட்டிலை ஆட்டுவது மாதிரி இரு கரங்களையும் ஆட்டினான்.

சாவித்திரி கலகலவெனச் சிரித்தாள். அவனும் சிரிப் பொலிக்கு சுதி சேர்த்தான்.

"ஆமாம், பத்தாவது மாசம் கண்டிப்பாக ஒரு குழந்தையைக் கொடுக்க முடியும்கிறதிலே உங்களுக்கு அவ்வளவு திடமான நம்பிக்கையா?"

"ஆமாம்... நீயும் ஒத்துழைத்தால்..."

"என் ஒத்துழைப்பா?"

"பின்னே... இது ஒருத்தராலே முடியக்கூடிய காரியமா? நான் எழுப்பும் இசைக்கு நீயும் தாளம் தட்டினால்தான்..."

"தாளம் தட்டுறதுன்னா...?"

"அதை இப்பவே புரிய வைக்கட்டுமா?" என்று சாவித்திரியை அப்படியே மஞ்சத்தில் சாய்த்து...ஒரு காலை இடையின் பள்ளத்தில் தூக்கிப் போட்டு; ஒரு கையை கழுத்தின் இடைவெளியில் கொடுத்து பின்னி அணைத்து, இரு மலைச் சிகரங்களுக்கிடையே உள்ள பள்ளத்தாக்கில் தன் முகத்தை புதைத்து இறுகத் தழுவினான்.

அப்பாடா! அவள் மூச்சுத் திணறி விட்டாள்.

"அப்புறம்...நமக்கிடையே இடையூருக இருக்கும் இவை களைக் களைந்தெறிந்துவிட்டு..." என்று அவளுடைய மேல் ஆடையை நீக்கினான்.

அவள் உணர்ச்சிவசமாகி விட்டாள். அவன் செய்கையைத் தடுக்கும் எண்ணம் எழவில்லை. கருவிழிகள் மேலேறி செறுகி நிற்க ஆலனையே பார்த்தாள். அவளுடைய இதழ்கள் துடித்தன அவற்றின் துடிப்பைத் தணிக்க தன் உதடுகளைப் பதித்து 'ஜிவ்'வென முத்தம் ஒன்றைப் பதித்தான். அவளுடைய கீழ் உதட்டை தன் வாயினுள் இழுத்து உறிஞ்சி அமுதம் பருகினான்.

உணர்ச்சி வயமாகாத நிலையில் அது எச்சில்—உணர்ச்சிக்கு அடிமையானால் அதுவே இன்ப நீர். மற்ற நேரங்களில் ஆடை நீக்கிய பெண் அசிங்கம் கூடலின்போது அதுதான் காணக் காண களிப்பூட்டும் தங்க ரதம்.

சாவித்திரி தங்கரதமாக மிதந்தாள். அவன் மேலே தவழ்ந்தான். தங்கரதம் ஆடி அசைந்தது. அவன் கொலு வீற்றிருந்தான். தேர் நகரவில்லை. ஒரே இடத்திலேயே— அந்த மஞ்சத்திலேயே இப்படியும் அப்படியும் அசைந்ததே தவிர, ஊர்ந்துகூட செல்லவில்லை. இது ஒரு வகையான தேரோட்டம்!

அன்றைக்கே கண்ணன்—சாவித்திரி இருவரின் முதல் இரவு நடந்து விட்டது.

சுய உணர்வு பெற்று அவர்கள் விழித்தெழுந்து உலகைப் பார்த்தபோது அது முன்னிரவு நேரம் என்பதை உணர்ந்தனர்.

"ஐயையோ! அத்தை தேடுவார்களே!" எனப் பதறினாள் காலங்கடந்த ஞானோதயம். விருட்டென்று எழுந்து ஆடைகளை கட்டிக்கொண்டாள்.

இந்த நிலையோடு வீட்டுக்குள் நுழைவதா எனத் தயங்கினாள். வேறு வழி?

கண்ணன் சாவித்திரியைக் காரில் ஏற்றிப்போய் வீட்டில் விட்டு வந்தான். வீட்டிற்குள்ளே போனதுமே...சமையற் கட்டிலிருந்த அத்தையின் காதில் காலடி ஓசை கேட்டுவிடாமல் நடந்து குளியலறைக்குள் நுழைந்தாள்.

குளிர் நீரில் குளித்தாள்—ஆடைகளைக் கசக்கிப் போட்டாள். தலையைத் துவட்டியவாறே முன் கட்டுக்கு ஓடோடி வந்து வேறு ஆடை மாற்றிக்கொண்டாள்.

அத்தை செல்லம்மாள் சப்தம் கேட்டு கூடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

"சாவித்திரி! இப்போ என்னடி குளிப்பு? வந்ததும் வராததுமா பச்சைத் தண்ணியைக் கொட்டிக்கிட்டியே. உடம்புக்கு ஏதாவது வந்துட்டா" எனக் கேட்டாள்.

அதில்தான் எத்துணை பாசம்—பரிவு!

அந்த இரவு வேளையில் குளிர் நீரில் குளித்ததால் உடம்புக்கு முடியாமல் போய் விடக்கூடாதாம். மருமகள்மீது அத்துணை அக்கறை! ஆனால் அவள் 'திருட்டுத்தனம்' செய்துவிட்டு வந்தவள் என்பது எப்படி செல்லம்மாளுக்குத் தெரியும்?

"உடம்பெல்லாம் கச கசன்னு இருந்திச்சு; குளிச்சிட்டேன்" என்று சமாளித்தாள் சாவித்திரி.

அவளுடைய நீண்ட கருங்குழலை தட்டிவிட்டு துண்டால் அரக்கி தேய்த்து நீர் நீக்கி—ஈரப் பசைகூட இன்றிப் போக்கி...கோதிவிட்டு தொங்கும் கொண்டை போட்டு விட்டாள் செல்லம்மாள்.

"வக்கீல் என்னம்மா சொன்னார்? எம்பிள்ளை விடுதலை ஆயிடுவானா?" எனக் கேட்டாள் ஏக்கத்தோடு செல்லம்மாள்.

"ஆமாம் அத்தை. ஹைகோர்ட்டிலே எப்படியும் அத்தானை விடுதலை செய்ய வச்சிடலாம்னு சொன்னாரு" என்று அத்தைக்கு ஆறுதல் கூறினாள் சாவித்திரி.

அத்தையை தடுக்குப் பாயில் அமரச் செய்து சாதம் பரிமாறி—தேறுதல் கூறி—மகனின் பிரிவாற்றாமையால் அன்ன ஆகாரத்தை வெறுத்துவிட்ட அந்தத் தாயை அரை வயிறாவது சாப்பிட வைத்தாள்.

அன்று இரவு பூராவும் சாவித்திரிக்கு தூக்கம் வரவே இல்லை. கண்ணன் வீட்டு மஞ்சத்தின் நினைவே நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்தது.

'அதென்ன அவ்வளவு சுகமா இருந்தது. நம் உடலின் உள்ளே இவ்வளவு கூச்சமும் இன்பமுமா ஒளிஞ்சுக் கிடக்கிறது! அதை வெளிக்கொணரும் சக்தி...ஒரு ஆடவனிடம் அல்லவா இருக்கிறது! நமது இன்பப் பேழையின் திறவு கோலை ஏன் ஆண் மகனிடம் கொடுத்து வைத்தானோ படைப்பின் கர்த்தா. அவருக்கு மட்டுமென்ன...இன்பம் தானாகக் கிட்டி விடுமா? இந்த அம்மா இடம் கொடுத்தால் தான்!' என்று எண்ணி எண்ணி இறுமாந்தாள். இதிலும் ஒரு வகை இன்பக் கிளு கிளுப்பு ஏற்படுவதை உணர்ந்தாள்.

எண்ணினால்கூட இன்பமா? என்னே இயற்கையின் மாய சக்தி என மனம் மருவினாள்.

'அவருடன் கூடிக் கிடக்கும்போது அப்படியொரு வேதனையும் ஏற்பட்டதே! ஏன்? முதன் முதலாக இன்பம்

காணும்போது இந்த வலி உண்டாகத்தான் செய்யுமோ!... கன்னி கழிப்பது என்பது இதுதானோ?'

இவ்வாறு அவளுடைய மனம் அந்த இன்ப வட்டத்திற்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தது. இதே சிந்தனையாக ஒரு வித சுகம்— இதம்.

❋ ❋ ❋

இவ்வளவுக்கு அவர்கள் முன்னேறி விட்டபிறகு கண்ணனின் மடியில் சாவித்திரி முகம் புதைத்து அழுவதில் என்ன குறைகேடு? காதலன் மடியிலே காதலி!

அவனும் ஒரு கிளையண்ட்டுக்கு சமாதானம் சொல்லி அனுப்புகிற கட்டத்தைக் கடந்து காதலி என்ற உரிமையோடு சாவித்திரிக்கு ஆறுதல் கூறினான். இப்போது அவள் கண்ணீரைத் துடைத்துவிட வேண்டிய பொறுப்பும் அவன் தலையில் விழுந்து விட்டதே!

சிறிது நேர அமைதிக்குப் பின்னர்—

"சாவித்திரி! எனக்கு இன்னொரு ஐடியாவும் தோன்றுகிறது!"

"என்ன கண்ணன்?" என்று கேட்டாள் சாவித்திரி, ஆவலோடு.

'வக்கீல் சார்' என்று ஆரம்ப காலத்தில் அழைத்தவள், காதலியாகி 'கன்னி' அழிந்த மறுநாள் முதற்கொண்டு 'கண்ணன்' என்றே அழைக்க ஆரம்பித்தாள். தாலியும் கட்டிக்கொண்டால் கண்ணன் என அழைக்காமல் அத்தான் என்பாள்.

"அதாவது ...உலகநாதனின் பிணம் கிடந்த இடத்தில் கட்டை விரல் இல்லாத பாதச் சுவடுகள் பதித்திருப்பதைச் சரியான ஆதாரமா எடுத்துக் காட்டியும் அதைப் பற்றிக் கொஞ்சம்கூட நீதிமன்றம் பொருட்படுத்தலே. அதைக் குறித்து புலன் விசாரணை செய்யும்படி போலீசாருக்கு நீதிமன்றம் உத்தரவு போடவில்லை. போலீசாராவது நான் கிளப்பிய பிரச்னையில் ஏதாவது உண்மை இருக்கிறதான்னு மறுபரிசீலனை செய்திருக்கலாம். அதையும் செய்யலே. அதனாலே... நானே அந்தக் கட்டை விரல் இல்லா பாதச் சுவட்டுக்குரிய ஆள் யாருன்னு கண்டு பிடிக்க முயற்சி எடுத்தால் என்ன?"

"முயற்சி எடுங்கள் வேண்டாம்னு சொல்லலே. ஆனால் அந்த ஆசாமி யாருன்னு கண்டு பிடிக்கிறதென்ன அவ்வளவு

சுலபமான காரியமா? ஆள் கிடைச்சிட்டா மட்டுமென்ன அவன்தான் கொலை செய்தான்னு எப்படி உங்களாலே நிரூபிக்க முடியும்?'

“முடியும்! அவன் யார்? உலகநாதனுக்கும் அவனுக்குமுள்ள தொடர்பு என்ன? பகை உண்டா? உலகநாதனை அவன் கொலை செய்ய மோட்டிவ் இருந்ததா? இதையெல்லாம் விசாரிச்சு தெரிஞ்சுக்க முடியும். முதல்லே அந்த ஆசாமி யாருன்னு தெரியணும்.”

“அவன் யாருன்னு தெரியறதுக்குள்ளே எங்க அத்தான் ஏழு வருட தண்டனையையும் அனுபவிச்சுட்டு வந்துடுவாரு.”

“விதி வசமா அத்தனை நாட்கள் ஆயிட்டாலும்கூட பரவாயில்லை. சிவராமன் கொலைகாரன் அல்ல என்பதை சட்டத்திற்கும் சமுதாயத்திற்கும் காட்டியே தீரணுங்கிறதுதான் லட்சியம்.”

“இப்போ என் லட்சியத்தையும் சொல்லிடுறேன். அத்தான் கண்ணெதிரிலே—அவருடைய ஆசீர்வாதத்தோடதான் நம்ம திருமணம் நடக்க வேண்டும். அதுவரைக்கும் நம்ம காதல் விவகாரத்தை அத்தைக்கும் தெரியாமல்தான் வச்சிருப்பேன். ஏன்னா, அத்தைதான் என்னை அத்தானுக்கே கட்டி வைக்கணும்கிற ஒரு பிடிவாதத்தோடு இருக்கிறவங்க. இப்போ தெரிஞ்சுதுன்னா என்னைக் கொன்னே போடுவாங்க. 'ஏண்டி! அவன் அநியாயமா ஜெயில்லே கிடக்கிறான்; இந்த நிலையிலே உனக்குக் காதலும் களியாட்டமுமா கேட்குது? வழக்காட வக்கீலைத் தேடிப் போனியா? உனக்கு வாழ்க்கை தேடிக்கப் போனியா'ன்னு அத்தை கேட்டாங்கன்னா நான் நாக்கைப் பிடுங்கிக்கிட்டுத்தான் சாகணும்.”

“வாஸ்தவம்தான் சாவித்திரி. அத்தை மட்டுமென்ன விஷயம் தெரிஞ்சால் யாருமே கேட்கத்தான் செய்வாங்க. அதை நானும் உணர்றேன்.”

“உங்க குறும்புத்தனத்திலே... என்னை உணர்ச்சி வசமாக்கிடுறீங்க. அப்படி என்னை மதி மயங்கச் செய்திட்டதிலே இதுவரைக்கும் பத்து தடவைகள்.. கணவன் மனைவி மாதிரி உறவு கொண்டுட்டோம். இனிமே அத்தான் விடுதலையாகி வந்தப்புறம்தான் 'அதை' வச்சுக்கணும்.”

“ஓ! அப்படியே நமக்கு நாமே கட்டுப்பாடு விதிச்சுக்குவோம்” என்று சாவித்திரியின் உள்ளங்கையில் அடித்து உறுதியளித்தான்.

அன்று முதல் இருவரும் 'தீண்டாமை'யை அனுஷ்டித்தனர். சந்திப்பார்கள்—பேசுவார்கள்—பிரிவார்கள். விரல் நுனிகள் கூட தீண்டப்படுவதில்லை.

# 4 மனிதருள் ஒரு தெய்வம்

உயர்நீதி மன்றத்தில் ஏழாண்டு சிறைத் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டதுமே...இனி ஏழாண்டுகளுக்கு வெளி உலகைக் காணவே முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டான் சிவராமன்.

ஆதலால் சிறை வாசத்தை ஜீரணித்துக்கொள்ள தன் உள்ளத்தையும் உடலையும் பக்குவப்படுத்திட முற்பட்டான்.

வழக்கறிஞர் கண்ணன், கருணை மனுவில் கையெழுத்து இடும்படி கேட்ட போதுகூட ஒப்புக்காகவே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான். தெய்வமே ஒரு நிரபராதிக்குக் கருணை காட்டாதபோது ஜனாதிபதியா கருணை காட்டிவிடப் போகிறார் என்ற சலிப்பு அவனுக்கு.

இப்போது அவன் தன்னை சரிப்படுத்தி விட்டான். சிறை வாழ்க்கை அவனுக்கு பழகிப் போய்விட்டது.

மனிதன் சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வது இயல்பானதே. கட்டாயத்தின் பெயரால் ஒரு புதிய வாழ்வுக்குள் தள்ளப்படும்போது அதையே தன்னுள் சுவீகரித்துக் கொண்டு மாற்றத்தை ஏற்றுக்கொண்டே தீரவேண்டும். தவறுதலாக ஊசி குத்தி விட்டால் துடிக்கும் அதே மனிதன்... நோய் தீர ஊசி போட்டுக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகும்போது அதை விடப் பெரிய ஊசியைக் குத்திக் கொள்ள சம்மதிக்கிறான்.

சிறைச்சாலையைக் காண்பதற்கு முன்புதான் அச்சம். அதையே அனுபவித்து விட்டால் அதுவும் ஒரு வாழ்க்கையாகி விடுகிறது. அதனால்தான் சிறைச்சாலை என்ன செய்யும் என்று துணிந்துவிட்ட சிறைப் பறவைகளும் உண்டு. சிறையை விட்டுப் போவார்கள். மற்றொரு குற்றத்தைப் பண்ணிவிட்டுத் திரும்பி வருவார்கள்.

தன்னிச்சையாக வெளி உலகுக்கு வரப் போக—நினைத்ததைத் தின்ன—கண்டு களிக்க முடியாது என்பதைத் தவிர கைதிகளுக்கு என்ன குறை?

சிவராமனும் தன்னைத் தானே தேற்றிக் கொண்டதோடு தாய்க்கும் மாமன் மகளுக்கும் தைரியமூட்டிக் கடிதங்கள் எழுத ஆரம்பித்தான்.

தனக்காக சாவித்திரி ஏழாண்டு காலம் காத்திருக்க வேண்டாம் என்றும், ஒரு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து

சாவித்திரிக்கு மணம் முடித்து வைக்கும்படியும் தான் சிறையி லிருந்து வரும்போது வீட்டில் ஒரு ஆண் பிள்ளையும் பெண் குழந்தையும் தவழ வேண்டும் என்றும் எழுதியிருந்தான்.

இது சாவித்திரிக்குக் கிடைத்த லைசென்ஸ்தான் இருந் தாலும் அத்தான் முன்னிலையில்தான் தனது திருமணம் நடக்க வேண்டும் என்ற சபதத்திலிருந்து இம்மியும் பிறழ்ந் தொழுகத் தயாராக இல்லை.

சாவித்திரி ஏற்கனவே ஒருவனுக்குச் சொந்தமாகி விட் டாள்—அவன்தான் வக்கீல் கண்ணன் என்பதை அறியமாட் டான் சிவராமன். அவர்களுக்கு அருகாமையில் வாழ்கின்ற செல்லம்மாளுக்கே இன்னமும் தெரியாதே சிறையிலிருக்கும் சிவராமனுக்கு தெரிந்து விடுமா என்ன?

ஒருநாள் வீட்டிலிருந்து ஒரு கடிதம் வந்தது. சாவித் திரிக்கு மாப்பிள்ளை பார்த்துவிட்ட நல்ல சேதி வந்திருக்கும் என்று நம்பினான். ஏனென்றால் சென்ற வாரம் மிகக் கண்டிப் பாக ஒரு கடிதம் எழுதியிருந்தான் தாய்க்கு தனக்காக சாவித்திரியின் இளமையைக் காலத் தீயில் போட்டுக் கருக்கி சாம்பலாக்க வேண்டாம் என்று எழுதியிருந்தான். அதைப் படித்து விட்டுத் தாய் சாவித்திரிக்கு மாப்பிள்ளை பார்த்து முடித்திருப்பாள் என்றொரு நம்பிக்கை. ஆவல் பற பறக்கக் கடிதத்தைப் பிரித்தான்

"அன்புள்ள அத்தான்!

வணக்கம் உங்களின் பிரிவால் உள்ளம் நொந்து—உடல் மெலிந்து கொஞ்சம் கொஞ்சமாய் குன்றிப்போன அத்தை இப்போது படுத்த படுக்கை யாகி விட்டார்கள். பெரிய டாக்டரை வரவழைத் தும் சிகிச்சை அளித்தோம்.

உடலில் நோயிருந்தாலல்லவா மருந்தும்—கவ னிப்பும் பயன் தரும். அத்தைக்கு உங்களுடைய பிரிவால் ஏற்பட்ட மனநோய்தான் உயிருக்கு எமனாகி விட்டது. டாக்டரும் 'இந்த அம்மா மனம் தேறினால்தான் உடல் தேறும்' என்று சொல்லி விட்டார்.

கடந்த இரண்டு நாட்களாக நிலைமை மோச மாகி விட்டது. உங்கள் பெயரை மட்டுமே உச்ச ரித்தபடி கிடக்கிறார்கள். ஒரு சொட்டு தண்ணீர்கூட தொண்டையில் இறங்க வில்லை. இப்போதோ நாளைக்கோ என்ற ஆபத்தான கட்டத்தில் கிடக் கிறார்கள். உயிர் பிரிவதற்கு முன்னால் மகனை ஒரு

முறையாவது பார்க்க முடியாதா என்ற தவிப்பில் அந்த உயிர் ஊசலாடுகிறது. அக்கம் பக்கத்தாரும் உங்களை ஒருமுறை வந்து பார்த்துவிட்டுப் போகட்டும்-- இந்த உயிர் அந்த ஆறுதலோடு பிரியட்டுமே என்கிறார்கள்.

ஆகையால் தாங்கள் இது கடிதம் கிடைத்ததும் புறப்பட்டால்தான் அத்தையை உயிரோடு பார்க்க முடியும். உடனே புறப்பட்டு வரும்படி கண்ணீர் சிந்த கரம் குவித்து வேண்டுகிறேன்.

இப்படிக்கு.
சாவித்திரி ''

கடிதம்... அவன் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது. ''ஐயோ... அம்மா....'' என்று வீரிட்டு அலறினான். அந்த சென்ட்ரல் ஜெயிலே கிடுகிடுத்தது. குழந்தையைப்போல் அழுதான். தாயைப் பிரியப் போகிறோம் என்ற கட்டம் வரும்போது ஐம்பது வயது மகனாக இருந்தாலும் குழந்தையைப் போல்தான் அழுவான்

முன்னூறு நாள் வயிற்றில் சுமந்து சாவைச் சந்தித்துப் பின்னரே அவள் ஒரு ஜீவனைப் பெற்றெடுக்கிறாள் ஒரு தாய். அந்த ஜீவன் பெற்ற தெய்வத்திற்கு நன்றிக்கடன் செலுத்தத் துடிப்பது இயற்கைதானே!

ஆனால்... அவனோ சட்டத்தின் பிடியில்—சிறைச்சாலைக்குள்ளே! நான்கு சுவர்கள்—பலத்த பாதுகாப்பு—அதற்கும் அப்பால் உயர்ந்த மதில்! இவற்றைக் கடந்து தாயின் அருகில் போய் அமர்ந்துவிட்ட மாதிரி மனோவேகம் இருக்கலாம் அந்த மனதை உள்ளடக்கிய உடல்... தாயினருகில் போய் அமர முடியுமா?

சிறைக் கம்பிகளில் தன் தலையை மோதிவிட்டு கதறித் துடித்தான் அவனுக்காக இரக்கம் காட்டுவார் யாருமில்லை. இவ்வாறு சில சமயங்களில் கைதிகளில் சிலர் வீட்டை நினைத்துக் கதறுவது சகஜம்.

இந்தக் கதறலை கேட்டுக் கேட்டுப் புளித்துப் போனவர்கள்தான் அங்கே இருக்கிறார்கள்.

தெய்வம் பொய்க்காது அது மெய்யான மெய். இதை உணர்த்துகிற மாதிரி அன்றைக்கென்று வந்து சேர்ந்தார் நீதிபதி வாசுதேவன். அப்போது மாலை நேரமாகி விட்டது. கைதிகள் வெளியே விடப்பட்டு உள்ளே அடைக்கப்படும் நேரம் நெருங்கியது. அவர் முன்னாள் நீதிபதி என்பதால் சலுகை கொடுத்தார்கள்.

அங்கே தெய்வமில்லே. காலில் விழுந்து கதறி அழுது கருணை காட்டும்படி கேட்க. வாசுதேவன்தான் இப்போது அவனுக்குத் தெய்வமாகக் காட்சி தந்தார்.

அவரிடம் போய் முறையிட்டான்.

"ஐயா! என்னைப் பெற்றெடுத்த தாய் மரணப் படுக்கையிலே கிடக்கிறள். இந்தா பாருங்க, இந்தக் கடிதத்தை. அந்த உயிர் பிரியும்போது அவள் அருகில் இருந்திட நான் கொடுத்து வைக்கலியே. அந்த ஆவி பிரிவதற்கு முன்னுலே என் கையாலே ஒரு வாய் பால் ஊற்ற முடியாத பாவியா இந்த ஜெயில்லே கிடக்கிறேனே. ஐயா! என்னை தண்டிச்சீங்க. நீங்க அன்னிக்கு எழுதின தீர்ப்பை மாற்றவே முடியலையே. அந்தத் தீர்ப்பு என்னை சிறைச்சாலைக்குள்ளே தள்ளினதோட நிற்கலே, என் தாயின் உயிரையும் வாங்கும்படியா அமைஞ்சிடுச்சி.

"உங்க தீர்ப்பினுலே இப்போ ஒரு உயிரே போகப் போவுது. நான் ஜெயில்லே இருக்கிறதைப் பத்திக் கவலைப் படலே. இன்னும் பத்து வருஷம் வேணும்னுலும் ஏன் என் ஆயுசு முடிகிற வரைக்கும் இங்கேயே கிடக்க சித்தமா இருக்கேன். அதற்குப் பிரதிபலனு ஓரே ஒரு தடவை அதுவும் இப்பவே என்னை வெளியே போக அனுமதி வாங்கிக் கொடுங்க. ஒருநாள்கூட வேண்டாம்; இன்னிக்கு ராத்திரி ஓரே ஒரு பொழுது தவணை கொடுங்க. என் தாயைப் பார்த்துட்டு என் கையால் ஒரு வாய் பால் ஊட்டிட்டு ஓடி வந்து விடுகிறேன்.

"ஐயா! தனது ரத்தத்தைப் பாலாக்கி ஊட்டி வளர்த்த தாய்...ஐயா! தாய்...அந்தத் தாய்க்கு இறுதிக் கடன் செலுத்த முடியாத பாவியா பரிதவிச்சுப் புலம்புகிறேன். பெத்த மகன்னு ஒருத்தன் இருந்தும் பக்கத்தில் அவன் இருக்கக் கொடுத்து வைக்காத பாவ ஜென்மம்னு என் அம்மாவை ஊர் உலகம் பேசிடக் கூடாதய்யா, பேசிடக்கூடாது" என்று புலம்பினன் சிவராமன்.

"சிவா! கொஞ்சம் பொறுமையா இருப்பா. உன்னுடைய தவிப்பை நான் உணர்றேன். தாய்க்குரிய கடமையைச் செய்யணும்னு நீ துடிக்கிற துடிப்பிலேயுள்ள தர்மம் எனக்குத் தெரியும். ஆனு...ஜெயில்லே உன்னை விடும்படியா விண்ணப்பித்து அந்த அனுமதி கிடைக்கிறதுன்னு குறைஞ்சது இரண்டு நாளாகுமே" என்று மயங்கினர் வாசுதேவன்.

"நீங்க நீதிபதியா இருந்தவராச்சே...உங்க செல்வாக்கைப் பயன்படுத்த முடியாதா?"

''இப்போ நான் நீதிபதி இல்லையே. அப்படியே இருந்தாலும் சட்டப்படிதானே உன்னை வெளியே அனுப்ப முடியும். இந்த நெருக்கடியான—ஆபத்தான சமயத்திலே...... சட்டப்படி உன்னை அனுமதிக்க போதிய அவகாசம்கூட இல்லையே. இம்...என்ன செய்யறதுன்னு எனக்கே புரியவில்லை.''

''ஏன் சார் புரியலேன்னு நடக்கிறீங்க. என் தலைவிதியை நிர்ணயிக்க முடிஞ்ச உங்களாலே ஒரே ஒரு இரவு மட்டும் என்னை போய்வர அனுமதிக்க முடியாதா?''

''முடியாது'' என்று கூறிவிட்டு சற்று நிதானித்தார். இதற்குள் வேலைகளை முடித்து கைதிகள் சிறைக்கொட்டடிக்குத் திரும்ப ஆயத்தமானார்கள். ஒருசில வினாடிகள்...நீதிபதி வாசுதேவன் முகத்திலே தெளிவு—பிரகாசம்—ஏதோ ஒரு வழியைக் கண்டு பிடித்து விட்டார்.

''சிவா! இப்போ ஒரே ஒரு வழிதாம்பா இருக்கு. அதற்கு நீ சம்மதிச்சுத்தான் ஆகணும்!''

''இம்...நான் தயார். எதுவாக இருந்தாலும் சொல்லுங்க. செய்து முடிக்கிறேன்.''

அவன் காதுக்கு அருகில் தனது வாயைக் கொண்டு போய்......

''சிவா! கேட்டவுடனே அதிர்ச்சி அடைவாய்! முடியாதுன்னு சொல்லுவே. ஆனால் இதைத் தவிர வேறு வழியே இல்லை. அதாவது அதோ அந்த மறைவிடத்திற்கு வா...... உன் கைதி ஆடைகளைக் கழற்றிக் கொடு. என் ஆடைகளை நான் தர்றேன். நான் கைதி ஆடைகளை அணிந்து கைதிகளோடு கைதியா ஜெயிலுக்குள்ளே போயிட்றேன். நீ ஆஜராகிவிட்ட மாதிரி பதிவாகிவிடும்.

''நீ என் டிரஸ்ஸைப் போட்டுக்கிட்டு அதோ நிற்குதே என்னுடைய கார், அதிலே ஏறிப் போயிடு. காரை எங்க வீட்டிலே விட்டுடு. ஏன்னு, நான் வீட்டிலே இருக்கிறமாதிரி ரிக்கார்டு ஆயிடும். அப்புறம் நீ பஸ்ஸிலே போய் உங்கம்மாவைப் பார்த்துட்டு பொழுது விடியறதுக்குள்ளே பட்டணத்துக்குத் திரும்பிடு. காரை எடுத்துக்கிட்டு வா. நாளைக்கு ரத்தினகிரிக்குப் பக்கத்திலேதான் கல்லுடைக்கிற வேலை உங்களுக்கெல்லாம். அங்கே வந்து சேர்ந்துடு. நான் கைதிகளோடு வேலை செய்துகிட்டிருப்பேன். சரியான மறைவிடமாப் பார்த்து நீ வந்து நில்லு. டிரஸ்ஸை மாத்திக்குவோம். நீ கைதிகளோடு கலந்துக்கோ. நான் அங்கே

இருந்து நழுவி காரிலே வாசுதேவனு திரும்பிப் போய்விடு கிறேன்.''

"ஐயோ! எனக்காக நீங்கள் ஜெயில்லே கிடக்கிறதா?'

'கிடக்க வேண்டும் என்பது விதி. அதை மாற்ற யாரா லும் முடியாது. உனக்கு இப்படியொரு ஆபத்தான கட்டத் திலே உனக்கு உதவி செய்ய முடிஞ்சதே அதை நினைச்சுப் பெருமைப்படுகிறேன். ஒரு நிரபராதியைத் தண்டித்த பாவத் திற்காக ஒரே ஒரு இரவு......ஜெயிலலே......கிடக்கிறது பரிகாரம்.''

"என் மனசு கேட்கலையே. நீங்க ஒரு பாவமும் செய்யலையே. ஒரு விநாடிகூட ஜெயில்லே வாழவேண்டிய அவசியமே இல்லாத உங்களை ஒருநாள் ராத்திரிப் பூரா ஜெயில் கிடக்கச் செய்வதா? என் சுய நலத்திற்காக இன்னொரு பாவ மூட்டையை நான் சுமக்கணுமா? வேண்டாமய்யா வேண்டாம்.''

"சிவா! நேரத்தை வீணாக்காதே. அதோ கைதிகள் வரிசையா நிற்க ஆரம்பிச்சிட்டாங்க. இனிமே நம்பரை சரி பார்த்து உள்ளே அடைக்கப் போறாங்க இம்...சீக்கிரம்... வா...'' என்று சிவராமனைத் துரிதப்படுத்தினார். தாயின் முகம் சிவராமனின் அகத்தில் பளிச்சிட்டது

சிறை பிளாக்குக்குப் பின்புறமாக நழுவினான். அதே இடத்திற்கு வாசுதேவனும் விரைந்தார்.

ஒருசில விநாடிகளே. சிவராமன் வாசுதேவனாகி விட் டான். அவர் சிவராமனாகி விட்டார்.

அங்கிருந்து...முகம் சரியாக யார் கண்ணிலும் பட்டு விடாமல் குனிந்தபடியும் — ஆள் நடமாட்டம் இல்லாத பக்கம் முகத்தைத் திருப்பியும் விறு விறுவென நடந்து காரில் ஏறி ஸ்டார்ட் செய்தான்.

அவன் ஏற்கனவே லாரி டிரைவராக இருந்தது இப்போது காரை ஓட்டப் பயன்பட்டது. நீதிபதி திரும்புகிறார் என்றே முன்வாசல் காவலர்கள் எண்ணினர். வாசற்கதவு திறந்தது. சிவராமன் வெளியேறி விட்டான்.

கார் வெளியே போய் விட்டதை கைதிகளோடு கைதி யாய் வரிசையில் நின்ற வாசுதேவன் கவனித்தார். ஆறுத லான பெருமூச்சு விட்டார். மகத்தான ஒரு சேவையைச் செய்துவிட்ட மனநிறைவு அவருடைய முகத்தில் எனைப் பட்டது.

வார்டன் கைதிகளின் நம்பரைச் சரி பார்த்தார். சிவ ராமனின் நம்பர் வந்தது. முகத்தை யாரும் பார்த்துவிடாமல் தலையைச் சாய்த்து நின்றார். நம்பர் சரி பார்க்கப்பட்டதால்

நகர்ந்தார் வாசுதேவன். ஒவ்வொரு விநாடியும் அவர் பதறிய பதற்றம். எங்கே பிடிபட்டு விடுவோமோ என்ற நடுக்கம். பிடிபட்டால் தனக்கு ஆபத்து நேருமே என்று அவர் அஞ்சவில்லை.

அவரை அடையாளம் கண்டு கொள்வார்களானால் மறு கணமே காவலர்கள் உஷாராகி விடுவார்கள். சிவராமன் தப்பி விட்டான் என்ற செய்தி பரவி விடும். அது சங்கிலித் தொடர்போல் வெளி உலகுக்கும் அறிவிக்கப்படும். பாதி வழியிலேயே சிவராமன் மடக்கப்பட்டு விடுவான். அப்புறம் வெளியே விடப்பட்டும் தாயைக் காண முடியாதவனாகத் திரும்புவான் சிவராமன்—ஒரு கைதி தப்பிச் செல்ல வழி வகுத்துக் கொடுத்த அவருக்கும் தண்டனை கிடைக்கும். இந்த நிலை...ஏற்பட்டு விடக்கூடாது. தான் தண்டிக்கப்பட்டால்கூட பரவாயில்லை. சிவராமன் போய் தன் தாயைப் பார்த்துவிட வேண்டும்.

நல்லவேளை இதுவரை பிடிபடவில்லை. கைதிகள் சிறை அறைகளுக்குள் அடைக்கப்பட்டு விட்டனர். அவர்களுள் வாசுதேவனும் ஒருவர். இப்போது அவரொரு கைதி. எத்தனையோ பேரை கைதிகளாக்கித் தீர்ப்பு எழுதி சிறைக்கு அனுப்பிய அந்த உயர்ந்த மனிதர் தனக்குத்தானே தீர்ப்பு எழுதிக் கொண்டவரைப்போல் கைதியாக மாறி சிறை வாசத்தை மேற்கொண்டார்.

* * *

நீதிபதி வாசுதேவன் வீட்டின் முன்புற போர்டிகோவில் காரை நிறுத்தினான். அந்தப் பங்களாவில் வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கிருந்து விறுவிறுவெனக் கிளம்பினான் சிவராமன்.

நீதிபதியின் கோட் பாக்கெட்டில் பர்ஸ் இருப்பதையும் செலவுக்குப் போதிய பணம் இருப்பதையும் நினைவுபடுத்தியிருந்தார் நீதிபதி. பர்ஸ் இருக்கிறதா என தடவிப் பார்த்துக் கொண்டான்.

ஓட்டமும் நடையுமாக பஸ் நிலையத்தை அடைந்தான். ஆவடிக்குப் பஸ் ஏறினான். பஸ் புறப்பட்டது. கண்டக்டர் டிக்கெட் கொடுத்து வந்தார். சிவராமனிடம் கண்டக்டர் வந்து கையை நீட்டினார். பர்ஸை எடுக்கக் கையை விட்டான் பைக்குள்ளே.

''ஆ...'' என்று வாய்விட்டு அலறினான். பர்ஸைக் காணோம். திடுக்கிட்டு கோட்டைத் துழாவினான். எங்கேயும் இல்லை.

''என்னப்பா? ஏன் அலறுகிறாய்?'' என்று கேட்டு அவசரப்படுத்தினார் கண்டக்டர்.

''யாரோ பிக்பாக்கெட் அடிச்சிட்டாங்க'' என்றான் பரிதாபமாய். அவனுக்காக கண்டக்டரும் இரக்கம் காட்டவில்லை. மற்றப் பயணிகளும் மனம் கசியவில்லை.

சிவராமனைக் கீழே இறக்கி விட்டுவிட்டு பஸ் போய் விட்டது. நடுத் தெருவில் நிற்கதியாய் நின்றான். நேரமோ ஓடிக் கொண்டிருந்தது. பொழுது புலரும் அறிகுறியாக வானம் வெளுக்கும்போதே பட்டணத்திற்குள் வந்துவிட வேண்டும்—காரை எடுத்துப் போய் கல்லுடைக்கும் பகுதியான ரத்தினகிரிக்குப்போய் அந்த மனித தெய்வத்தை மீட்க வேண்டும்.

எவரால் சிறையில் அடைக்கப்பட்டாரோ அவரை சிறையிலிருந்து மீட்க வேண்டிய பொறுப்பு இவன் தலையில் சுமத்தப்பட்டு விட்டது. இது காலத்தின் கோளாறு? தெய்வத்தின் விசித்திர விளையாட்டா?

உயிர் பிரிவதற்குள் தன் தாயாரையும் போய்ப் பார்த்து விடவேண்டும். கண் கலங்கிட நின்றான். பாதையில் போகும் கார்களை—லாரிகளை நிறுத்தும்படி கையை அசைத்து கையும் சோர்ந்து விட்டது.

கடைசியாக ஒரு லாரி டிரைவர் சிவராமனின் தளர்ந்த கை அசைப்புக்காக லாரியை நிறுத்தினான். அவன் மனிதன் போலும். சிவராமனை ஏற்றிக் கொண்டான். லாரி புறப்பட்டது.

இடையே ஒரு பாலம் குறுக்கிட்டது. பாலத்தின் இடது பக்கம் ஓரமாக சிலர் கூடி கீழே எதையோ பார்த்தவாறு நின்றிருந்தனர்.

லாரி டிரைவர் வேகத்தைக் குறைத்து கூடி நின்றோரிடம் என்ன என்று விசாரித்தான். சற்று நேரத்திற்கு முன்புவந்த பஸ் பாலத்தில் மோதி...பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகி விட்டதை ஒருவர் கூறினார். உடனே சிவராமன் வெளியே எட்டிப் பார்த்தான்.

கூட்டத்தில் நின்றவர்களில் அந்தக் கண்டக்டரும் ஒருவர். தலையில் ரத்தம் வழிந்தோட காட்சி தந்தான். அப்படியானால் சிவராமன் ஏறி—பர்ஸைப் பறி கொடுத்ததால் பட்டணத்திற்குப் பணமில்லாததால் இறக்கி விடப்பட்டானே அதே பஸ் விபத்துக்குள்ளாகி விட்டதா?

ஆம்! அதே பஸ் விபத்துக்குள்ளாகி பள்ளத்தினுள் தலை குப்புறக் கிடந்தது. எத்தனை பேர் உயிர் இழந்தனரோ! எத்தனை பேருக்குப் படுகாயமோ?

'நல்லவேளை! நாம் இறக்கி விடப்பட்டோமே!...இல்லை எனில் நாமும் விபத்துக்குள்ளாகி இருப்போம். அம்மாவை யும் பார்த்திருக்க முடியாது; நமக்காக சிறையில் கிடக்கும் நீதிபதியையும் மீட்க முடியாது. தெய்வம் பொய்க்காது. அது மெய்யான மெய்யாக இருக்கிறது. இப்போதுதான் தெய்வத்திற்கு நம்மீது கருணை பிறந்திருக்கிறது' என்று உள்ளூர எண்ணி தெய்வத்திற்கு நன்றி செலுத்தினான்.

உயிருக்காகப் போராடும் தன் அம்மாவைப் பார்க்க வேண்டிய அவசர அவசியத்தை லாரி டிரைவரிடம் தெரிவித் திருந்தான். இன்னும் சற்று வேகமாய் லாரியை ஓட்டும்படி வேண்டினான். லாரி டிரைவர்தான் மனிதனாயிற்றே. லாரி யின் வேகத்தை அதிகமாக்கினான்.

ஆவடிக்குள் நுழைந்ததுமே லாரியை நிறுத்தச் சொல்லி இறங்கினான். வீடு வரைக்கும் வரும்படியும் பணம் தருவதா கவும் டிரைவரை அழைத்தான்.

அதற்கு அவன் ரத்தின சுருக்கமான பதில் ஒன்றைக் கூறிவிட்டு லாரியைக் கிளப்பினான்.

"எனக்கும் அம்மா இருக்கிறாள்; நீ போய் உன் அம்மா வைப் பார்; பணம் வேண்டாம்."

* * *

சிவராமன் தலைதெறிக்க ஓடினான்—வீட்டை அடைந் தான். கதவு சாத்தியிருந்தது. பூட்டியிருக்கிறதோ என எண்ணி வேகமாய் தள்ளி விடவே... அது சும்மா சாத்தப்பட் டிருந்த கதவாகையால் படார் என்று திறந்துவிட்டது. தள்ளிய வேகத்தில் உள்ளே வந்து விழுந்தான்.

சாவித்திரி யாரது என்று கூச்சலிட்டு எழுந்தாள். அரிக் கேன் லாந்தரை மேலும் தூண்டி விட்டாள்.

சிவராமன் எழுந்து...உட்புறம் நோக்கினான். கட்டிலில் அம்மா...கால் மாட்டில் சாவித்திரி. 'அந்தப் பயங்கரம் நடந்து விட்டதா சாவித்திரி?' என்ற கேள்விக் குறியோடு அவளைப் பார்த்தான்.

அவள் 'அத்தான்' என்று உணர்ச்சி பொங்க கூவிய வளாய் எழுந்து அத்தான் சிவராமன் அருகில் ஓடி வந்தாள்.

"சாவித்திரி!......அம்மா...?" என்று கேட்கவே அவன் பயந்தான்.

"உங்களுக்காகக் காத்திருக்கும் உயிர், உங்களைக் காணாமல் போகுமா அத்தான்?"

சொல்லும்போதே அழுதுவிட்டாள் சாவித்திரி.

அம்மாவின் பக்கத்தில போய் அமர்ந்து தலையை தாங்கி எடுத்து தன் மடியில் கிடத்திக் கொண்டான்.

"அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டான் சிவராமன், பலமுறை

வெகு தொலைவில் நின்ற அந்த உயிர்க்கு இப்போது தான் மகனின் தீனக் குரல் எட்டியது போலும். கண்ணிமைகளில் சலனம்: உதடுகளில் அசைவு. கை விரல்களில் நடுக்கம்,

"அம்மா!...அம்மா!"

அவன் குரலில் தெளிவு— மகிழ்ச்சியின் ஆரம்பச் சாயல்.

செல்லம்மாளின் கண்கள் திறந்தன. மகனையே பார்த்தாள். இமைகள் படபடத்தன. மேலும் நன்றாகப் பார்த்தாள். "சிவா..." என்று பேசியே விட்டாள். சாவித்திரி நீட்டிய பால் கிண்ணத்தை வாங்கினான்.

"உங்க மகன் சிவா வந்துட்டேன்ம்மா. நான் விலகலையாயிட்டேம்மா. இந்தப் பாலைக் கொஞ்சம் குடிங்கம்மா..." என்று பாலை அவளுடைய வாயில் ஊட்டிவிட்டான். என்ன ஆச்சரியம்! பாலைத் தாராளமாகக் குடித்தாள். ஒரு சொட்டு தண்ணீர்கூட இறங்காமல் கிடந்த ஜீவன் அது!

மகனைக் கண்டமாத்திரத்தில் என்ன தெளிவு! எவ்வளவு பலம்! மகனைப் பற்றியபடி எழுந்து உட்கார்ந்தாள்.

"சிவா! சாப்பிட்டியாப்பா? சாவித்திரி! தம்பிக்கு சாப்பிட ஏதாவது கொடும்மா" என்று பேசவே ஆரம்பித்து விட்டாள்.

அந்தப் பேச்சில் அவளொரு தாய் என்பதையே வெளிப்படுத்தினாள் 'இனி அந்த உயிர் சாமான்யமாகப் பிரியாது. இந்த தைரியத்தில் இன்னும் ஒருசில வருடங்கள் தாக்குப் பிடிக்கும். அவ்வளவு சக்தி வந்து விட்டது. இது என்ன மருந்தா மாயமா? அல்ல! அல்ல!! பாசத்திற்கு ஈடான மருந்து வேறு உண்டா? அதன் வலிமை போகும் உயிரைக் கூடப் பிடித்து நிறுத்தும்.

"அம்மா! பேசாமல் என் மடியிலேயே படுத்துக்கோ" என்று மறுபடியும் படுக்க வைத்துக்கொண்டான். லேசாகத் தட்டிக் கொடுத்தான்.

"சிவா! இனிமே என்னை விட்டுட்டுப் போக மாட்டியே" எனக் கேட்டாள் செல்லம்மாள்.

"நீ என்னை விட்டுட்டுப் போக மாட்டியே. முதல்லே அதைச் சொல்லு!"

திருப்பிக் கேட்டான் சிவராமன்.

"எப்படிடா போவேன். உன்னை விட்டுட்டு இந்த உயிர் அவ்வளவு சாமான்யமாப் போயிடுமா? எமன் கிட்டேயே வாய்தா கேட்பேன்டா, என் பிள்ளைக்குக் கல்யாணம் காட்சி பண்ணி வச்சுட்டு வர்றேன், கொஞ்சம் பொறுத்திருப்பான்னு. அவனையும் ஒரு தாய்தானே பெற்றிருப்பாள்! அந்தத் தாய்க்கு எவ்வளவு ஆசை—பாசம் இருக்கும்னு அவனுக்குத் தெரியும். கண்டிப்பாக எனக்கு வாய்தா கொடுப்பான் சிவா..."

எவ்வளவு ஆணித்தரமாகப் பேசினுள் அந்த அம்மா!

சிவராமனுக்குக் குரலில் வளம் உண்டு. இனிமை உண்டு. ஆனால் சங்கீதத்திற்குரிய முறைப்படி சாரீரம் கிடையாது. இருந்தாலும் ஒரு தாலாட்டுப் பாடினுன்.

அருமையான சாரீரம் இருந்தால்தானு தாய்மார்கள் தாலாட்டுப் பாடுகிருர்கள்? உள்ளக் கிடக்கை—மகிழ்ச்சி—உணர்ச்சி கொப்பளிக்கும்போது தாய்மை பாடுகிறது. அதற்கு இனிய குரல்—இசைப் பயிற்சி எதுவுமே அவசியம் இல்லை. இருந்தாலும் தாலாட்டைக் கேட்கும்போது என்ன மயக்கம்—என்ன இன்பம்! குழந்தைகள் கண்ணயர்ந்து விடுகின்றனவே.

பெற்ற அன்னை தாலாட்டுப் பாடி மகனைத் தூங்க வைப்பது இயற்கை. இங்கே மகன் தாலாட்டுப் பாடித் தாயைத் தூங்க வைத்தான். எந்தத் தாய் தன்னைத் தொட்டிலில் இட்டு—தாலாட்டுப் பாட்டிசைத்து கண்ணுறங்கச் செய்தாளோ, அந்தத் தாய்க்கு மகன் தாலாட்டுப் பாடித் தூங்கச் செய்தான். இது பாக்கியங்களிலெல்லாம் சிறந்த பாக்கியம் அல்லவா!

ஒரு அன்னைக்கு இந்தப் பாக்கியம் கிட்டுவதே அபூர்வம்! யோகம்! அது செல்லம்மாளுக்குக் கிட்டியது. அவளொரு புனிதவதியே!

தாயும் மகனும் ஒன்று கூடிய—மகன் ஊட்டி தாய் பால் அருந்திய—தனயன் தாலாட்டி தாய் கண்ணுறங்கிய காட்சியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தாள் சாவித்திரி.

# 5: பொழுது புலர்ந்தது

உதய காலத்தை உணர்த்தும் பறவைகளின் கீச்சு கீச்சு குரல் கேட்க ஆரம்பித்தது. சிறை கம்பிகளுக்கு அப்பால் நின்றவாறு வானத்தை நோக்கினார் நீதிபதி வாசுதேவன். கீழ்வானம் வெளுக்கும் அறிகுறி தென்பட்டது. இந்நேரம ரத்தினகிரி அடிவாரத்திற்கு வந்து சேர்ந்திருப்பான் சிவ ராமன் என்று எண்ணியிருந்தார்.

அன்றைய்ப் பொழுது எப்படி விடியுமோ என்ற அச்சமும் உள்ளூர எழாமலில்லை.

பள பளவென பொழுது புலர ஆரம்பித்தது. தூரத்தே கேட்கும் மாதா கோயிலின் மணியோசை. மசூதியில் உதய கால நமாஸ் ஓதிடும் முஸ்லிம் குருவின் குரல்...

ஆம்! விடிந்து விட்டது.

மறுநாள் ஆகஸ்டு 15. சுதந்திரத் திருநாள்.

அதை முன்னிட்டுக் கைதிகளில் சிலர் விடுதலை செய்யப் பட்டனர். அதற்காக வரிசைக்கிரமமாக நிறுத்தப்பட்டு விடுதலை பெற்ற கைதிகளின் நம்பரைச் சொல்லி பிரித்த போது......

நீதிபதி வாசுதேவனை ஜெயிலர் பார்த்துவிட்டார். திடுக் கிட்டுப் போனார். அவருக்கே உடம்பு வெல வெலத்துப் போயிற்று.

வாசுதேவனை தனித்துப் பிரித்து நிறுத்தினார். சக கைதி களும் திகைத்தனர். அப்போதுதான் அனைவருக்கும் தெரிந் தது. 'ஏழு வருட கைதி'யான சிவராமனைக் காணவில்லை என்பது

ஆனால் இரவே, சிவராமனுக்குப் பதில் வாசுதேவன் சிறை அறைக்குள் கைதியாக நுழைந்திருக்கிறார் என்பதை ஒரே ஸெல்லுக்குள் அடைக்கப்படும் பத்துக் கைதிகளும் அறிவார்கள். மூச்சு விடவில்லை. அப்படி யாராவது காணாமல் போய்விட்டால் காட்டிக் கொடுக்கும் புத்தி கைதி களுள் யாருக்குமே கிடையாது.

இவர்களைத் தவிர ஏனைய கைதிகளுக்குத்தான் காலையில் தெரியும், சிவராமனுக்குப் பதில் வாசுதேவன் என்ற நீதிபதி கைதியாகி இருந்தார் என்பது. இந்த அதிசயத்தை விடுதலை நாளுக்காக விடுதலை பெற்றுச் சென்ற இருபது கைதிகளும் தெரிந்துகொண்டே சென்றனர்

சிறைச்சாலை—ஜெயிலர் அறை. அதிகாரிகள் சுற்றிலும் அமர்ந்திருந்தனர். அவர்கட்கு முன்னால் வாசுதேவன் நிறுத்தப்பட்டார்.

அவர் நீதிபதியாக பதவி வகித்த காலத்தில் தனது நீதி பீடத்தில் அமர வரும்போது எழுந்து நின்ற மரியாதை செலுத்திய அதிகாரிகள்—அவர் எழுந்து செல்லும்போது எழுந்து நின்றவர்கள்—இன்று அவரை நிறுத்தி வைத்து மற்றவர்கள் அமர்ந்திருந்தனர்.

சிவராமன் தப்பிவிட்டான். அவனுக்குப் பதிலாக அவனுடைய நம்பரில் ஆஜர் கொடுத்து கைதியாக அடைபட்டிருந்தார் நீதிபதி வாசுதேவன் என்ற அதிசயச் செய்தி முக்கிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு அனைவரும் கூடி விட்டனர்.

அதிகாரிகளுக்கு விழி பிதுங்கும் இக்கட்டான நிலை. வேறொரு சாதாரண ஆசாமியாக இருந்திருந்தால் அடித்து உதைத்து உண்மையை வரவழைத்து இருப்பார்கள்—தரக் குறைவாக நடத்தியிருப்பார்கள்.

அகப்பட்டிருப்பதோ முன்னாள் நீதிபதி; கௌரவமான மனிதர்; பெரும் புள்ளி. தவறு இழைத்தவர் என்பதற்காக நிறுத்தி வைத்து விசாரிக்கலாமே ஒழிய, கடுமையாக நடந்து கொள்ள இயலாது அன்றோ!

விசாரணையை ஆரம்பித்தனர்.

"சார்! சிவராமனுக்காகத் தாங்கள் இங்கே கைதியாக அடைபட்டது எப்படி?"

"உங்களைப் பலவந்தமாக இந்த நிலைக்கு உட்படுத்தி அவன் தப்பி ஓடி விட்டானா?"

"அல்லது சிவராமன் தப்பிச் செல்ல நீங்களும் உடந்தையாக இருந்தீர்களா?"

இவ்வாறு மூன்று கேள்விகள் மூன்று பக்கங்களிலிருந்து கிளம்பின.

"சிவராமனுக்காக நானே விரும்பி ஏற்றுக் கொண்ட முடிவு இது அவன் என்னைக் கட்டாயப்படுத்தவும் இல்லை; வேண்டிக் கொள்ளவும் இல்லை. உண்மையை அப்படியே சொல்லுவதானால், இப்படி தப்பிச் செல்ல முடியும் என்ற யோசனையைச் சொன்னவனே நான்தான். ஆகையால் அவன் தப்பிச் செல்ல உடந்தையாக இருந்திருக்கிறேன்" என்றார் வாசுதேவன்.

"இது சட்டப்படி எவ்வளவு பெரிய தவறு என்பதை நீங்கள்...அதுவும் நீதிபதியாக இருந்தவர் உணராதது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது!"

"நான் உணராமல் இல்லை. அவனை தப்பிச் செல்ல யோசனை கூறி அனுப்பும்போதே இது சட்டப்படி பெருங் குற்றம் என்பது தெரியும்"

"தெரிந்துமா இக் குற்றத்தைச் செய்தீர்கள்? ஒண்டர்! ஒண்டர் சட்டத்தின் பாதுகாவலராக இருந்து பெரும் புகழும் பெற்ற நீங்கள், தெரிந்தே தவறு செய்தேன் என்று சொல்வது......"

"துணிச்சலான பதில் அல்ல, அலட்சியமான பதிலும் அல்ல. சட்டத்தை மீறி இந்தக் காரியத்தை நான் செய்யும்படியான கட்டாயத்திற்குள் என்னை நானே தள்ளிக்கொண்டு விட்டேன். இதற்கு வேறு யாரும் பொறுப்பல்ல."

"அப்படி என்ன கட்டாயம்? நெருக்கடி உங்களுக்கு ஏற்பட்டது?"

"என் இதயத்தில் அன்பும், மனிதாபிமானமும் இருக்கிறது; அதுதான் காரணம். இதயம் என்பது வெறுமனே ஆட்டோமேட்டிக்காய் ஓடிக் கொண்டிருக்கும் இயந்திரம் அல்ல. அதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் பிறக்கின்றன. அங்கே உள்ளம் என்ற ஒன்றிருப்பதால் எத்தனையோ ஆசா-பாசங்கள்—அபிலாஷைகள்—எழுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக இறக்கம் என்ற உயர்ந்த பண்பு இதயத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதே, நான் என்ன செய்வேன்!"

"தத்துவார்த்தமான பேச்சுமூலம் தவறுக்கு நியாயம் கற்பிக்க முயற்சிக்கிறீர்களா?"

"இல்லை. எனது குற்றத்தை நியாயமாக்க நான் முயல மாட்டேன் ஒருபோதும். நான் செய்தது சட்டப்படி குற்றமே. ஆனால் ஒரு இதயமுள்ள மனிதன் என்ற நிலையில் நான் செய்தது ஒரு பரிதாபத்துக்குரியவனுக்கு செய்த பேருபகாரம் என்றே நினைக்கிறேன். அதை விளக்கிக் கூற முயல்வது தத்துவ ரீதியான பேச்சாக உங்களுக்குத் தோன்றுவது சகஜம்தான்.

"எப்படிப்பட்ட சூழ்நிலையில் இதற்கு நான் உடன்பட்டேன்; சட்டத்தின் பாதுகாவலனாக பல காலம் பதவி வகித்த நானே சட்டத்திற்கு விரோதமான இந்தக் கடுமையான குற்றத்திற்கு ஏன் ஆளானேன்?—அதுவும் சிவராயனுக்கு ஏழாண்டு சிறைத்தண்டனை விதித்த நானே அதே ஏழாண்டு சிறைத் தண்டனையிலிருந்து விடுவித்து எப்படி அனுப்பி வைத்தேன் என்பதை விளக்கிச் சொல்ல வேண்டியவனாக நிற்கிறேன்.

"அதுவும் விசாரணை என்று நீங்கள் வைத்து விட்டதால் தான்—என்னிடம் கேள்விகள் கேட்பதால்தான். என்மீது

குற்ற விசாரணை நடத்தாமலேயே அதற்குரிய தண்டனையை வழங்கியிருந்தாலும் அதை மனதார ஏற்றுக் கொண்டிருப்பேனேயன்றி ஆட்சேபித்திருக்க மாட்டேன்."

"அதுசரி... விசாரிப்பது எங்கள் கடமை என்பது உங்களுக்கும் தெரியுமே! ஆல்ரைட்! நீங்கள் உங்கள் தரப்பை எடுத்துச் சொல்லலாம்."

"சிவராமனின் தாய் உயிருக்காக மன்றுடிக் கொண்டிருக்கிறுள் என்று ஒரு கடிதம் வந்தது."

"அப்படிப் பொய்யாக எழுதும்படி சிவராமனே முன் ஏற்பாடாக யாரையாவது கேட்டுக் கொண்டிருந்திருக்கலாம் அல்லவா?"

"இருக்கலாம்! அப்படி சிவராமன் ஏமாற்ற முயன்றிருந்தால் அவனுடைய கேடுகெட்ட உள்ளத்தைப் புரிந்து கொள்ள இதை ஒரு வாய்ப்பாகக் கருதிக் கொள்கிறேன். ஆனுல் அது உண்மையாக எழுதப்பட்ட கடிதம் என்றே நான் நம்புகிறேன். உணர்ச்சிக் கொந்தளிப்பு மிக்க வார்த்தைகளால் கோர்க்கப்பட்ட காவியமாக அந்தக் கடிதத்தைக் கருதுகிறேன்.

அதைப் படித்துவிட்டு ஓவெனக் கதறினுன். பெற்ற மாதாவைப் பார்க்க வேண்டும் என்ற பதை பதைப்பு எல்லா மகன்களுக்கும் ஏற்படவே செய்யும். இவனொரு அசாதாரணமான மனிதன். தாய்மீது தன்னுயிரையே வைத்திருந்தான். எனவே போகாமல் இருந்திருந்தால் இதயம் வெடித்து இங்கேயே செத்திருக்கவும் கூடும். அவ்வளவு துடிப்புத் துடித்து விட்டான்.

"வேதனையோடு அவனுக்கு ஆவேசமும் கலந்து வந்து விட்டன. ஏனென்ருல் அவன் தன்னை ஒரு நிரபராதி என்று மனதார நம்புகிருன். தான் அநியாயமாகத் தண்டிக்கப்பட்டு விட்டோம் என்ற எண்ணம் தலை தூக்கும் போதெல்லாம் கொதிப்படைந்து விடுகிருன்.

"இந்த நிலையில் சாகக் கிடக்கும் தாயைப் பார்க்கக்கூட முடியாமல் அக்கிரமமாய் அடைக்கப்பட்டிருக்கிறேமே எனக் குமுறினுன். அந்த ஆத்மா அமைதியும் ஒருநாள் இரவு ஆறுதலும் அடையட்டுமே என்று அனுதாபம் காட்டினேன். என்னைத் தண்டிக்க முடிஞ்சா உங்களாலே என்னை ஒரே ஒரு நாள் இரவு மட்டும் போய்வர அனுமதிக்க முடியாதா எனக் கேட்டான்..."

"அதற்கும் வழியிருக்கிறதே சார்... நீங்கள் அறியாததா? பெயிலில் செல்ல அனுமதி கோரி விண்ணப்பித்திருக்கலாமே சார்!"

"ஆம்! விண்ணப்பித்திருக்கலாம். சட்டத்தின் அனுமதியோடு போய்விட்டும் வந்திருக்கலாம். ஆனால் பெயிலில் போய்வர அனுமதி கேட்டு உத்தரவு வரும்வரை அந்த உயிர் காத்திருக்குமா? அன்னையின் ஆவி பிரிவதற்கு முன்னால் அந்த முகத்தைக் காணவேண்டும் என்று அவன் தவித்ததிலும்—அதுதான் நியாயம் என்று நான் நினைத்ததிலும் தவறு இல்லையே!

"பிணத்தைப் போய் பார்ப்பதிலோ—பிணம் அடக்கம் செய்யப்பட்ட பிறகு யாரோ ஒரு மூன்றாம் மனிதனாகப் போய் வருவதிலோ என்ன புண்யம். அந்த உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பதாகவும் எந்த நிமிடமும் அது பறந்துவிடும் என்பதாகவும் அந்தக் கடிதத்தில் உருக்கமாய் எழுதியிருந்தாள் அவனுடைய மாமன் மகள். எனவே நேற்று இரவே அவனை அனுப்பி வைப்பதுதான் புண்யமான செயல் எனக் கருதினேன்."

"ஏமாந்து விட்டீர்களே சார், ஏமாந்து விட்டீர்களே! பாவம்...புண்யம் என்பது சட்டத்திற்கு உண்டா?"

"உண்டு. பாவம், புண்யம் என்ற அடிப்படையில்தான் சட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன."

"நீங்கள் மேதை. எதற்கும் பதில் சொல்லி விடுவீர்கள்."

"இதில் மேதாவிலாசம் ஒன்றுமில்லை. உள்ளம் திறந்து பேசுகிறேன். அவ்வளவுதான். அவன்பேரில் எனக்கொரு அபிமானம். அவனுக்கு தீர்ப்பு வழங்கிய நாள்முதல் அதை வளர்த்துக் கொண்டு விட்டேன். அதன் விளைவாக அவனை அடிக்கடி இங்கே பார்க்க வருவேன். நேற்றும் தற்செயலாக பார்த்துப் போகவே வந்தேன்."

"வந்தீர்கள். முன்னாள் நீதிபதி என்ற முறையில் விரும்பிய சலுகைகளை வழங்கினோம். அதை ஒரு பெருங்குற்றம் புரிய சாதகமாகக் கையாண்டு விட்டீர்கள்."

"மேலும் மேலும் என் தவறைச் சுட்டிக் காட்ட வேண்டியதே இல்லை. இது நான் உணர்ந்தே செய்தது. சுருக்கமாய்ச் சொல்லி முடித்து விடுகிறேன். கடிதத்தைப் பார்த்துக் கழிவிரக்கம் காட்டினேன். எனது ஆடைகளை அவனுக்கு அணிவித்து எனது காரிலேயே நானாக அவனை மாற்றி அனுப்பினேன்."

"ஓகோ! அதனால்தான் அவன் சுலபமாகத் தப்பியிருக்கிறான்!"

"அவனுடைய கைதி உடைகளை அணிந்துகொண்டு அவனாக நான் மாறி சிறைவாசத்தை ஏற்றேன்."

"அவன் திரும்பி வந்து விடுவதாகச் சொல்லிவிட்டுச் சென்ருனு?"

"ஆமாம். சத்தியமே செய்துவிட்டுச் சென்ருன்.

"அதை நீங்களும் நம்பிவிட்டீர்கள் இல்லையா?"

"ஆம். அவன் திரும்பி வருவான் என்று நம்பினேன். விடிந்து இவ்வளவு நேரமாகியும்......அவன் வராமல் இருக்க மாட்டான். இந்நேரம் வந்திருப்பான். வழக்கமா இன்றும் கல் உடைக்கக்கூடிய ரத்தினகிரி அடிவாரத்தில் என்னை மீட்பதற்காகக் காத்திருப்பான்."

இது அவருடைய அழுத்தமான பதில்.

அதேசமயம் ஒரு அதிகாரி திடுமென உள்ளே பிரவேசித்தார்.

"இல்லை. இனி அவன் வரவே மாட்டான். நாம் தேடிக் கண்டுபிடிக்க உலகம் பூராவும் வலை விரித்தாலும் சிக்க மாட்டான். யார் பிடியிலும் அகப்படாத உலகுக்குப் போய் விட்டான்."

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" எனப் பதறினுர் வாசுதேவன்.

"அவன் செத்துப் போய்விட்டான்."

"ஆ! சிவராமன் செத்து விட்டானு?"

"ஆம்! அவன் ஏறிச் சென்ற பஸ் பாலத்தின் மீதிருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளாகி விட்டது. ஐந்து பேர் இடுபாடுகளுக்கிடையே நசுங்கிச் செத்து விட்டனர். ஐந்து பிணங்களும் கொஞ்சம்கூட உருப்படியாகக் கிடைக்கவில்லை. யார் யார் என்பதை அங்கே அகப்பட்ட உடமைகளை வைத்து தீர்மானிக்க வேண்டியதாயிற்று. இதோ நீதிபதி விலாசம் வைத்துள்ள பர்ஸ், பணம், சில பில்கள். இவற்றை வைத்து சிறையிலிருந்து தப்பிச் சென்ற சிவராமன்தான் இறந்துபோன ஐவரில் ஒருவன் என்பதைக் கண்டு பிடித்தார்கள்..."

"ஓ மை காட்! இவ்வளவு பெரிய விபரீதம் நடந்து விட்டதே! அம்மாவைக் காணுமலே போய் விட்டானே. அன்னையின் உயிருக்கு முன்னுல் நம் உயிர் போய்க் கடவுளின் சந்நிதானத்திற்குப் போய்ச் சேரட்டும் என்று போய் விட்டானு?"

"சார்! என்ன நடந்து விட்டது பார்த்தீர்களா! நீங்கள் அவனுக்கு நல்லது செய்வதாக நினைத்துக் கொண்டீர்கள். உங்கள் நன்மையால் விளைந்த தீமை மகாக் கொடியது. இங்கே இருந்தாலாவது பாவம் உயிரோடு இருந்திருப்பான். அநியாயமாக அவனை வெளியே தப்பி ஓட வழி செய்து

கொடுத்தீர்கள். அவன் இந்த உலகத்தை விட்டே போய் விட்டான்.

"நீங்கள் எதிர்பார்த்தபடி அவன் திரும்பியிருந்தாலும் உங்கள் குற்றத்தின் கடுமை குறைந்திருக்கும். வராமல் தலை மறைவாக ஒளிந்திருந்தாலும் நாங்கள் பிடித்து வந்திருப் போம். அப்போதும் நீங்கள் இழைத்த குற்றத்தின் தன்மை தணிந்திருக்கும். இப்போது குற்றம் கொடூரமாக உருவம் பெற்று விட்டதே சார் அவன் சாவுக்கும் காரணமாகி விட்டீர்களே!"

மேலதிகாரி வாசுதேவனின் தலையில் விழுந்த கொடுமை யைப் பெரிது படுத்தினார்.

"இனிமேல் என்ன செய்யப் போகிறீர்கள்? அவன் திரும்பி வரவே மாட்டான் என்பது உறுதியாகி விட்டது அல்லவா!"

"ஆமாம்! என்னை மீட்பதற்காக அவன் வரமுடியாமல் போய்விட்டானே என்ற வருத்தம் துளியும் எனக்கில்லை. ஓடிப்போன பாவி எங்காவது உயிரோடு வாழ்ந்திருக்கக் கூடாதா? அவன் வெளியுலகில் வாழ்வதற்காக நான் சிறைக் குள் கிடந்து மாள்கிறேன் என்ற அளவிலாவது பெருமை அடைந்திருப்பேனே."

வாசுதேவன் மனம் புகைவதைக் கண்டு சட்டம் என்றால் சட்டம்தான் என்ற ஈவு இரக்கமின்றி நடக்கும் அந்த அதி காரிகளே கண் கலங்கினர்.

"சார்! நீங்கள் சட்டப்படி குற்றம் புரிந்திருந்தாலும் இதயத்தால் உயர்ந்தவர்; உத்தமர்; தெய்வாம்சம் பொருந் திய மனிதரிலும் மேம்பட்டவர்" என்று பாராட்டிப் புகழ்ந்தார் ஜெயிலர்.

அத்தோடு அதிகாரிகள் மட்டத்தில் விசாரணை முடிவு பெற்றது.

அதே சமயம் வெளியுலகில் நடந்ததென்ன...?

❋ ❋ ❋

வைகறைப் போதில் சேவல் கூவியதும் திடுக்கிட்டு விழித்தான் சிவராமன். இரவு காயைத் தூங்க வைத்த பின்னர் சாவித்திரியுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந் தான்.

"சாவித்திரி! உண்மையில் நான் விடுதலை ஆகி வரலே. எனக்காக ஒரு மனித தெய்வம் ஜெயில்லே அடைபட்டிருக்கு.

இந்த மாபெரும் பாவத்தைச் செய்து விட்டுத்தான் அம்மா வைப் பார்க்க ஓடோடி வந்தேன்.''

'' அப்படியா? நீங்க விடுதலையாகலியா? உங்களுக் காக ஒருவர் சிறையில் கிடக்கிறாரா? நம்ப முடியலையே அத்தான்!''

'' ஆமாம் சாவித்திரி! தெய்வம்கூட நம்ப முடியாதது நடந்திருக்கு. அவர் யாருன்னு சொன்னா நீ ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடையப் போறே. அவர்தான் எனக்குத் தண்டனை அளித்த நீதிபதி வாசுதேவன்!''

'' ஆ! அவரா? அவருக்கு உங்கள்மீது பரிவா?''

''ஆம் சாவித்திரி! அவர் மனிதர் இல்லை. இல்லை மனித நிலையையும் கடந்தவர். அவரை விடுவிக்க நான் அதிகாலை யிலே அங்கே இருந்தாக வேண்டும்.''

''கண் விழித்தவுடனே அம்மா என் புள்ளே எங்கேன்னு கேட்டால் என்ன சமாதானம் சொல்லுவேன்? எப்படி கடலெனப் பொங்கி எழப்போகும் அந்த இதயத்தை ஆற்று வேன்!''

''எப்படியோ, அம்மாவை நீதான் சமாளிக்க வேண்டும். அவங்களை நீதான் காப்பாற்றணும். இடையில் என்னைப் பார்த்து விட்டு இந்தத் தெம்பினால் இன்னும் சில காலம் அம்மா உயிருக்கு ஒரு ஆபத்தும் நேராது. சிறைக்குள் அடைபட்டுக் கிடக்கும் அந்தக் கொடுமையை எப்படி என் கண்ணாலே பார்ப்பேன்னு அம்மா பிடிவாதமா இருக்காங் களே... அந்தப் பிடிவாதத்தை நீதான் மாற்றணும். நீயும் அந்த வைராக்கியத்தை கை விட்டுடு.

''அம்மாவை அழைச்சிக்கிட்டு வா. சென்ட்ரல் ஜெயி லுக்கு வந்து பெட்டிஷன் கொடுத்து என்னைப் பார்க்கணும்னு சொல்லு. அனுமதி கொடுப்பாங்க என்னைப் பார்த்துட்டு வாங்க. இந்த ஒரே வழிதான் அம்மா உயிரைக் காப்பாற்றி வரும். எப்படியும் மாசம் ஒரு தடவையாவது என்னைப் பார்க்க அனுமதி கிடைக்கும். என்னைப் பார்ப்பதால் கிடைக் கும் ஆறுதல் ஆயிரம் மருந்துகளால் கிடைக்கும் குணத்தை விட மேலானது.''

''ஆகட்டும் அத்தான். இனிமே அப்படித்தான் ஆறுதல் அளிக்க முடியும்.''

இன்னும் என்னென்னவோ பேசினார்கள். முக்கிய மானவை இவ்வளவுதான். இப்போதும் கண்ணனைக் காத லிக்கும் கதையை அத்தானிடம் கூறவில்லை சாவித்திரி. காதல் கதையைப் பேசும் கட்டமா இது? அதற்குரிய காலமா இது? ஆகவே அத்தானிடம் உண்மையை மறைத்து

தன் உள்ளத்தினுள்ளேயே கண்ணனை ஒளித்து வைத்து விட்டாள்.

அப்புறம் தாயின் அருகில் போய் குழந்தையைப்போல் படுத்துவிட்டான்.

அன்னையின் அரவணைப்புக்காக எந்தவயதிலும் மனிதன் ஏங்கவே செய்கிறான்!

முருகன் கோயிலில் உதயகால பூஜைக்காக ஒலித்த மணியோசை எழுந்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான்—விரைந்தான். வீட்டுக்கு வந்த வேகத்தோடு கிளம்பியும் விட்டான்.

ஓடிக்கொண்டிருக்கும் அத்தானின் உருவம் மறையும் வரை வாசலிலேயே நின்றாள்.

சிவராமன்...நகருக்குள் நுழைந்தான். அப்போது அவனுடன் சிறையில் வசித்த நண்பர்கள் எதிரில் வந்தனர். அவர்களுள் ரௌடி சாமுண்டி பரம்பரைக் கேடி. சிறைச் சாலை அவனுக்கு விருந்துக்குப் போய்வரும் மாமியார் வீடு மாதிரி.

அவர்களைக் கண்டது ஒரே திகைப்பு சிவராமனுக்கு. இவர்கள் எப்படி வெளியே வந்தார்கள் என்று விழித்தான்.

ரௌடி ரங்கன் சிவராமனைப் பார்த்துவிட்டான். "சிவா! சிவா!" எனக் கூப்பிட்டான்.

அவர்களிடம் போனான் சிவராமன்.

"எப்படிடா ஜெயில்லேயிருந்து வந்தீங்க?"

ஆச்சரியத்தோடு கேட்டான் சிவராமன்.

"உன்னை மாதிரி தப்பியோடி வரலே! சுதந்திர தினத்திற்காக விடுதலை செய்யப்பட்ட கைதிகள்லே நாங்க ஐஞ்சு பேரும்......"

"அதிருக்கட்டும். நான் தப்பி வந்தது எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சா?"

"ஆமா! நல்லவேளை, தப்பியோடிய குற்றத்திற்காக தண்டிக்கப்படாமல் தப்பினே."

"எப்படி ...நான் தப்ப முடியும்?"

"உன்னையும்தான் விடுதலை பண்ணிட்டாங்களே... ஜனாதிபதிக்கு கருணை மனு போட்டிருந்தியாமே. அவர் உன் பேரிலே கருணை காட்டி சுதந்திர நாளை முன்னிட்டு எங்களைப் போலவே உன்னையும் விடுதலை செய்ய உத்தரவு போட்டுட்டாரு."

"அப்படியா? நான் விடுதலையாயிட்டேனா? கடவுளே! என் கண்ணீரைத் துடைத்து விட்டாயா? அம்மா! நான் உன்னிடம் விடுதலையாயிட்டதாப் பொய் சொன்னேன்.

அந்தப் பொய்யை கடவுள் உண்மையாகவே ஆக்கிட்டாரும்மா. டேய் ரங்கா! எனக்காக ஒருவர்..."

"அதான், ஜட்ஜ் வாசுதேவன்தானே. உனக்கு விடுதலை கிடைக்கலேன்னு அவரு வலையா மாட்டிக்கிட்டிருப்பாரு. உன்னை தப்பியோடச் செய்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டிருப்பாரு. நல்ல மனுஷன் பாரு. கடவுள் அனுக்கிரகத்தினாலே... நீ விடுதலையாகப்போய் அவரும் மன்னிச்சு மீட்கப்பட்டுட்டாரு. அது மட்டுமா; அவரை ஒரு விசாரணை கமிஷனுக்கு தலைவரா நியமித்து அவசர உத்தரவு வந்துதாம். இப்போதுதான் வேறெங்கோ புறப்பட்டுப் போறாரு"

இவ்வாறு பயங்கரமான பொய்யை அவிழ்த்துக் கொட்டினான். சிவராமன் விடுதலை ஆகவே இல்லை. விடுதலையாகி விட்டதாக அடித்துச் சொல்லிவிட்டான், அதுவும் நம்பும் படியாக

சிவராமனுக்காக உதவி செய்யப் போய் வாசுதேவன் சிறையில் கிடந்து உழல்கிறார். அவர் மீட்கப்பட்டு ஒரு விசாரணைக் கமிஷன் தலைவராகி ஊரை விட்டே போய் விட்டார் என்று உரத்த குரலில் பேசி வழியை அடைத்து விட்டான்.

அதையும் நம்பிவிட்டான் சிவராமன். விடுதலையாகி விட்டோம் என்ற மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிவிட்டதால் ரௌடி ரங்கனின் பேச்செல்லாம் மெய்யாகத் தோன்றியது அவனுக்கு.

"இனிமே என்ன, வீட்டுக்குப் போ. ஆனந்தமா வாழ்க்கையை நடத்து. இனிமே ஜெயில் பக்கமே வராதே" என்று உபதேசமும் செய்துவிட்டுப் போனான்.

ஆனந்தம் பீறிட்டு வர—இந்த நல்ல செய்தியை அம்மாவிடமும் சாவித்திரியிடமும் விழா கொண்டாட வீட்டுக்கு விரைந்தான்.

சற்று தொலைவுக்குப் போய்விட்ட கைதிகளில் ஒருவன் ரௌடி ரங்கனைக் கேட்டான்.

"ஏண்டா, எவ்வளவு பெரிய பொய்யைச் சொல்லி சிவராமனைத் திருப்பி அனுப்பிச்சே. பாவம்! இவனுக்காக வாசுதேவன் ஜெயில்லே கிடக்காரே. இனிமே அவரு மீளவே முடியாத அளவுக்கு ஜெயில் பக்கமே வராதேன்னு வேறே சொல்லிட்டே."

"ஆமாம்! எல்லாம் காரணத்தோடதான். அந்த நீதிபதி வாசுதேவன் இருக்கானே ஒரு முசுடு. சட்டம் சட்டம்னு அடிச்சுக்குவான். கொஞ்சம்கூட இரக்கமே காட்டமாட்

டான். எனக்கு மூணு வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தவனே அந்த வாசுதேவன்தான். அதுக்காகப் பழி தீர்க்க எனக்குக் கிடைச்ச அருமையான சந்தர்ப்பம் இது. இப்போ சிவராமன் போயிருந்தான்னு வாசுதேவனை விடுதலை பண்ணி விடுவாங்க அதைக் கெடுக்கிறதுக்காகவே, 'நீ விடுதலையாயிட்டே...வாசுதேவன் ஊருக்கே போயிட்டாரு'ன்னு ஒரு போடு போட்டேன்."

"அது சரிடா...தப்பி வந்தவனுச்சே, இவனை போலீசார் தேடத்தானே செய்வாங்க"

"இவன் எங்கேயோ இருக்கான்னு நம்பினுல்லே தேடுவாங்க. இவன் விபத்திலே செத்துப் போயிட்டதாக போலீசார் முடிவு பண்ணிட்டாங்க. செத்துப் போனவனு ஆயிட்டதுனுலே இவனைத் தேடணும்கிற எண்ணமே அவர்களுக்கு ஏற்படாதே!"

"இதெப்படி உனக்குத் தெரியும்?"

"பேப்பரிலே வந்திருக்கே..."

"இதை சிவராமனும் பேப்பர்மூலம் தெரிஞ்சுக்கிட்டான்னு!"

"அவனு தெரிஞ்சுக்கிட்டு. 'செத்தவனு கருதப்படுகிறோம்; இனிமே யாரும் நம்மைத் தேடவே மாட்டாங்க. நிம்மதியா வாழ்வோம்'னு நினைச்சான்னு வாழ்ந்திட்டுப் போகட்டும். தான் நேர்மை தவருத தர்ம புத்திரன்னு நினைக்கக்கிட்டால் மறுபடியும் 'ஜெயில்லே போயி மாட்டிக்கிடட்டும். நமக்கென்னடா...வாங்கடா" என்று சக தோழர்களைக் கூட்டிக்கொண்டு பவனி போனுன் ரங்கன்

பஸ்கள் விபத்துக்குள்ளாவது இப்போது சர்வ சாதாரணமாகி விட்டதால் அது சம்பந்தப்பட்ட செய்திகளும் சாதாரணமாகி விட்டன

எனவே அந்தச் செய்தி முக்கியத்துவம் பெறவும் இல்லை. விபத்துச் செய்தியை செய்தித் தாள்களில் பார்க்கவில்லை சிவராமன்.

மேலும், அன்று விடுதலையாகி விட்டதாக மகிழ்ச்சியிலேயே நினைத்துக் கிடந்ததால் வீட்டுக்குள்ளேயே கிடந்தான். சிவராமனுக்குத் தெரிந்த நண்பர்கள் கண்ணிலும் படாமல் இந்தச் செய்தி தப்பியது.

மேலும் ஒரு நீதிபதி குற்றவாளி ஒருவனை தப்பி ஓட வழி செய்தார் என்ற செய்தி வெளியானுல் அது அரசுமீது கெட்ட எண்ணத்தைத் தோற்றுவிக்கும் என்பதால் அதை அடியோடு மறைத்து விட்டார்கள்.

# 6 காதலே வா

அந்தி மயங்கிய நேரம் — கடைசி டிரிப்பை முடித்துவிட்டு அவனுக்குச் சேரவேண்டிய கூலியையும் பெற்றுக்கொண்டு ஊர் திரும்பினான் சிவராமன்.

அவன் செத்துப் போனவனாக போலீசு ரிக்கார்டுகளில் பதிவாகி விட்டதால் யாரும் அவனைத் தேடும் பிரமேயமே ஏற்படவில்லை. இதை அவன் அறியாததோடு விடுதலை செய்யப்பட்டவனாகத் தன்னைக் கருதிக் கொண்டிருப்பதால் எவ்வித பயமோ தடங்கலோ இன்றி நடமாடி வந்தான்— பழைய டிரைவர் தொழிலைச் செய்து வந்தான். அவனை நன்றாக அடையாளம் தெரிந்திருக்கும் போலீஸ் துறை சம்பந்தப்பட்ட எவருடைய கண்ணிலும் இதுவரை சிவராமன் சிக்கவில்லை.

ஆகையால் நிம்மதியாக வாழ்வை ஓட்டினான்.

லாரி ஊரை நெருங்கும்போது... உயர்சாதி நாய் ஒன்று குறுக்கே பாய்ப்போய் லாரி சக்கரங்களில் அடிபட்டது. உடன் பிரேக் போட்டு லாரியை நிறுத்தினான். கேவலம் அடிபட்டது நாய் தானே என்று பொறுப்பற்றவனாகப் போய்விடவில்லை; லாரியை நிறுத்தி லாரியின் அடியில் கிடந்த நாயை வெளியே இழுத்துப் போட்டான். அப்போதுதான் அதன் உயிர் பிரிந்தது. அந்த உயிர் பிரிகிறபோது சிவராமனின் கண்கள் கசிந்தன. பொதுவாக எந்தப் பிராணியின் உயிராக இருந்தாலும் சரி, அது பிரியும்போது பார்க்க நேரிட்டால் மனம் கலங்கவே செய்யும்.

அதே சமயம், "ராஜு" என்று வீறிட்டு அலறும் சப்தம் கேட்டது. துணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தான். வானகத்து வாசல் திறந்து வையகத்திற்கு வந்துவிட்ட நிலவோ என்று வியப்புறும் வண்ணம் எழிலே உருவான பெண்ணொருத்தி நின்றாள்.

சிவராமன் எழுந்து அவளை நோக்கினான். "இந்த நாய் உங்களுடையதா?" எனக் கேட்டான்.

ரத்தம் சொட்டச் சொட்டக் கிடந்த நாயை எடுத்து தன் மடியில் கிடத்தி அழுது புலம்பினாள் அந்தப் பெண். அவள் உடுத்தியிருந்த விலை உயர்ந்த புடவை பூராவும் ரத்தச் சேறு. அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தவே இல்லை-

அவன். அந்த நாய்மீது அவனுக்கு அவ்வளவு அளவுகடந்த பிரியம். அவளுடைய நாய்தான் என்பதை தலையசைப்பின் மூலம் காட்டினுன்.

"அநியாயமா என் ராஜியை கொன்னுட்டீங்களே" என்று வேதனையை வெளிப்படுத்தினுள்.

"எம்பேரிலே தப்பில்லே. திடீருன்னு குறுக்கே பாய்ந்துட்டது."

"அதனுலே ஒரு உயிரைக் கொன்ற பாவம் உன்னைச் சேராதுங்கிற எண்ணமா? இதுவே ஒரு மனிதனின் உயிரா இருந்திருந்தால் இந்நேரம் கைது செய்யப்பட்டிருப்பீங்க."

"ஆமாம்! இது ஒரு நாய்தானேன்னு நான் அலட்சியமா நினைக்கலையே! நீங்க வர்றதுக்கு முந்தியே லாரியை நிறுத்தி நாயை வெளியே எடுத்து சிகிச்சை அளிக்க முடியுமான்னு பார்க்கத்தானே செய்தேன். ஒரு நாயின் உயிரா இருந்தாலும் ஒரு நாயின் உயிரா இருந்தாலும் உயிர் என்ருல் ஒரே உயிர்தான். அதில் பேதமில்லே. தப்பு யார்மேலே இருந்தாலும் சரி, இப்போ நீங்க என்ன தண்டனை விதித்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்."

"உங்களுக்கு தண்டனை விதிச்சிட்டா மட்டும் என் நாயின் உயிர் மீண்டும் கிடைச்சிடுமா? போனது போனது தானே?"

"அழாதீங்கம்மா. அடுத்த வாரம் ராஜபாளையம் வரைக்கும் லாரி எடுத்துட்டுப் போறேன். திரும்பி வர்றப்போ ஒரு உயர்ந்த ஜாதி கோம்பை நாய்க்குட்டியை வாங்கிட்டு வருகிறேன்."

அந்த அழுகைக்கும் இடையே, "ஆமா... அந்த ஜாதி நாய்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கேன்" என்ருள் அவள். நாய் வளர்ப்பது என்ருல் அவளுக்கு அவ்வளவு ஆர்வம் என்பது வெளிப்பட்டது.

"உங்க முகவரியைக் கொடுத்தீங்கன்னு... புதிய நாயைக் கொண்டு வந்து கொடுக்கிறேன்."

உடனே அவள் தனது முகவரியை எழுதிக் கொடுத்தாள். அதில், "வனஜா, வெண்மதி பவனம், புதுத்தெரு, அம்பத்தூர்" என்று காணப்பட்டது. அதைப் பையில் பத்திரப்படுத்தினுன்.

அப்புறம்... அந்த நாயை அங்கே பாதை ஓரமாக குழி தோண்டி...புதைத்தான். அக்காட்சியைப் பார்த்து கண்ணீர் உகுக்க நின்ருள் வனஜா. "பால் வார்க்கணுமே" என்ருள்.

"இதோ அஞ்சு நிமிஷத்திலே வர்றேன்."—சொல்லிவிட்டு ஓடினுன் சிவராமன்.

மூன்று நிமிடங்களிலேயே திரும்பி விட்டான். அவ ளிடம் பாலைக் கொடுத்தான்.

அவள் நாய் புதைக்கப்பட்ட மண்மேட்டில் பால் வார்த் தாள். அப்போது அவள் உள்ளம் குமுறுவதை சிவராமன் உணர்ந்தான்.

"நீங்க விரும்பினால் உங்களை லாரியிலே கொண்டுபோய் வீட்டிலே விட்டுடறேன்."

"வேண்டாம்! அதோ...அந்த தோப்புக்குள்ளே என் கார் நிக்குது. நீங்க போகலாம்."

இதற்குப் பிறகுதான் போகவே எத்தனித்தான் அவன், அதுவரை அவளிடம் விடுதலை வேண்டி நிற்கும் குற்றவாளி யாக நடந்து கொண்டான்.

லாரியில் ஏறி அமரப் போனான்;

"மிஸ்டர்! உங்க பேரு......?" என்று அன்பு கனியக் கேட்டாள்.

"சிவராமன்!"

"உங்களைக் கண்டிப்பாக எதிர்பார்ப்பேன், அடுத்த வாரம்."

"நிச்சயமாக வருவேன். அதுவரை எனக்கு நிம்மதி கிடையாது."

லாரி ஸ்டார்ட் ஆனது. லாரியில் அவன் போவதை ஏனோ அப்படிப் பார்த்தாள்,

'இவன் மிக உயர்ந்த குணம் படைத்தவன். ஒரு நாயைத்தானே அடித்துக் கொன்றோம் என்று அலட்சிய மாக நடந்துகொள்ளவில்லை. நெஞ்சம் நிறைய இரக்கத் திற்கு இடமளித்திருப்பவன். தவறு சிறிதோ பெரிதோ, அந்தத் தவறு நேர்ந்ததற்காக வருத்தப்படக்கூடியவன். கூடுமானவரை தவறை செய்யாமல் வாழ நினைப்பவன். பால் வார்க்கணும்னு கேட்டவுடனேயே எவ்வளவு வேகமாய் ஓடிப்போய் வாங்கி வந்தான்.'

இவ்வாறு அவள் உள்ளம் சிவராமனைப் பற்றி மதிப்பீடு செய்தது. வீடு திரும்பினாள்.

நாயைப் பறிகொடுத்த துயரத்தைப் பாட்டியிடம் சொல்லி அழுதாள். பாட்டி வனஜாவுக்கு ஆறுதல் கூறுவதற்கு மாறாக அவளும் கலங்கி நின்றாள். அப்புறம் இருவரும் ஒரு வருக்கு ஒருவர் ஆறுதல் மொழி புகன்று மனம் தேறினர்.

பாட்டியின் பராமரிப்பில் வாழ்ந்து வருபவள் வனஜா. உலகம் தெரிந்த நாள்முதல் பாட்டியைத் தவிர இவ்வுலகில் அவளுக்கு யாரையும் தெரியாது. அப்பா அம்மா முகங்களைக் கூட காணக் கொடுத்து வைக்காத அபாக்கியவதி.

ஆயினும் அந்தக் குறையைக் கொஞ்சமும் உணராதவளாக பாட்டியால் செல்லமாக வளர்க்கப்பட்டாள் வனஜா. பாட்டிக்கு வருமானம் என்ன? அவளுடைய உறவினர் யாரோ மாதா மாதம் ஆயிரம் ரூபாய் அனுப்பி வந்தார்கள். அதை வைத்து வனஜாவை ஆளாக்கினாள். படிக்க வைத்தாள்; பி.ஏ. பட்டதாரியாகவும் ஆக்கினாள். தாயும் தகப்பனும் இருந்து ஆற்ற வேண்டிய கடமைகளை அந்த வயது முதிர்ந்த பாட்டி ஆற்றினாள்.

இப்போது பணம் வருவதும் நின்றுவிட்டது. உதவி செய்து வந்தவர் ஏனோ உதவியை நிறுத்தி விட்டார். அதைப் பற்றிப் பாட்டி கவலைப்படவும் இல்லை. ஆயிரம் ஆயிரமாகப் பணம் வந்தபோது அவ்வளவையும் செலவு செய்துவிட இல்லை. அவளும் வனஜாவும் இரண்டே இரண்டு ஜீவன்கள்தான். பங்களா வாடகைகூட நூறுதான். அது டவுனில் இருக்குமானால் ரூபாய் ஐநூறு வாடகைக்குப் போகும். அம்பத்தூரில் ஒதுக்குப்புறமாக அமைந்துவிட்டதால் அவ்வளவு பெரிய பங்களா நூறு ரூபாய் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இரண்டு பேருக்கு என்னதான் அறுசுவை உணவு உண்டாலும் எவ்வளவு ஆகிவிடும்? வாழ்க்கையும் வசதியாகவே இருந்தது. மாதா மாதம் ஒரு கணிசமான தொகை பேங்கில் சேமித்து வந்தாள் பாட்டி. இத்தனை ஆண்டுகளில் எல்லாச் செலவுகளுக்கும் போக இருபதினாயிரம் ரூபாய் சேர்ந்திருந்தது. இனி யார் உதவினாலும் உதவாவிட்டாலும் இதே வசதியான வாழ்வைத் தொடர்ந்து நடத்த முடியும்.

வனஜாவையும் ஒரு நல்ல இடத்து மாப்பிள்ளை கையில் ஒப்படைத்துவிட முடியும். இந்தக் கடனையும் செலுத்தி விட்டால் பாட்டி நிம்மதியாகக் கண்ணை மூடி விண்ணுலகம் பயணமாவாள்.

பி.ஏ. படித்த வனஜாவை வேலை வெட்டி எதுவும் பார்க்க வேண்டாம் என நிறுத்திவிட்டாள். வனஜா ஏதாவது ஒரு வேலையை பொழுதுபோக்குக்காகவாவது பார்க்க விரும்பியும் பாட்டி இசையவில்லை.

அவளுக்கு அறிமுகமானவர்களிடமெல்லாம் நல்ல மாப்பிள்ளை கிடைத்தால் தெரிவிக்கும்படி சொல்லி வைத்திருந்தாள். இரண்டொரு மாப்பிள்ளை வீட்டாரும் வந்து பார்த்து விட்டுப் போனார்கள். இந்தத் தங்கப் பதுமையை மணக்க அவர்களுக்கெல்லாம் ஆசையே.

ஆனால்......மாப்பிள்ளைகளை வனஜாவுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

வனஜா மனமொப்பி ஒப்புதல் தராதவரைக்கும் எவ்வளவு பெரிய இடமாயினும் பாட்டி சம்மதிக்கமாட்டாள்.

வாழப் போகிறவள் அவள். அவளுடைய மனம்போக் வாழ்வு தேடிக் கொடுப்பதே தனது கடமை என்று திட்டமாக அறிவித்துவிட்டாள்.

❀ ❀ ❀

சரியாக ஒரே வாரம் நிறைவுற்றது. காலிங் பெல் கண கணவென ஒலித்தது. வாசற்கதவைத் திறந்தாள் வனஜா. அங்கே—சிவராமன் அழகான ஒரு நாய்க் குட்டியோடு நின்றான்.

இப்படியொரு நாணயமான மனிதனா? ஏதோ ஒப்புக் காகக் கூறிவிட்டுப் போகிறான் என்றல்லவா நினைத்தோம். அவனோ வாக்குத் தவறாமல் வந்து விட்டானே என ஆச்சரி யம் மேலிட நின்றாள். அந்த மலைப்பில் நாயைக்கூட சரி யாகக் கவனிக்கவில்லை.

"இதோ...நாய்க்குட்டி. இது காவலுக்கும் ஏற்றது. நன்றி உணர்ச்சி மிக்கது. இந்தாங்க..."

நாய்க் குட்டியை அவளிடம் நீட்டினான். அதை வாங்கி உற்று நோக்கினாள். அதன் அழகைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தாள்.

"ரொம்ப நன்றி. வாங்க உள்ளே" என அன்பொழுக அழைத்தாள். அவன் தயங்கினான். "சும்மா வாங்க..." வருந்தி அழைத்தாள்; உள்ளே போனான். ஆடம்பர மாளிகையில் அழகான கூடம்.

"உட்காருங்க."—குரல் கேட்டு சோபாவில் அமர்ந்தான். "இது சொந்த வீடா?" எனக் கேட்டான். "இல்லை, வாடகை வீடுதான்" என்று பதிலிறுத்தாள்.

"வீட்டிலே யார் யார் இருக்கீங்க?"

"நானும் பாட்டியும்தான்."

"அப்பா அம்மா இல்லையா?"

"நானொரு அபாக்கியவதி அவர்கள் முகத்தைக்கூட பார்க்காதவள். கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. இதோ வந்துடறேன், இந்தப் புத்தகத்தைப் பார்த்துக்கிட்டிருங்க" என்று டீப்பாயில் கிடந்த புத்தகத்தை எடுத்துக் கொடுத்து விட்டு உள்ளே போனான்.

அது ஒரு நாவல்—'காதலே வா' என்ற தலைப்பு. இது எதையோ ஒன்றை உணர்த்துகிறதா?

ஐந்தாறு பக்கங்களைப் புரட்டியிருப்பான். உயர்ரக பிஸ்கட்ஸ்—டீ வைத்துள்ள டிரேயை ஏந்தி வந்தாள் வனஜா. அவனது முன்னால் கிடந்த டீப்பாயில் வைத்து, "இம்...சாப் பிடுங்க...எதிர்பாராத வரவு. அவசரத்திற்கு இவ்வளவுதான் என்னாலே உபசரிக்க முடிந்தது. இன்னொரு தடவை உங்களுக்கு விருந்து வைக்க விரும்புகிறேன்" என்ற உள்ளக் கிடக்கையை வெளியிட்டாள்.

"அதற்கென்ன வந்தால் போகிறது. நீங்களும் ஒருநாள் என் வீட்டுக்கு வரணும். நானும் விருந்து வைக்கணும்லே. வீட்டிலே என் தாயும் என் மாமன் மகள் சாவித்திரியும் நானும் ஆக நாங்க மூணு பேருதான்" என்று சகஜமாகப் பழகினவனைப்போல் பேசினான்.

"மாமன் மகள் என்றால் முறைப் பெண்ணா?"

"ஆமா...அவளை எனக்குன்னே வளர்த்து ஆளாக்கி வச்சிருந்தாங்க அம்மா. என் கூடவே வளர்ந்திட்டதினாலே எங்களுக்குள்ளே பாசமும் பிடிப்பும் ஏற்பட்டிருக்கே தவிர அவளை என் மனைவியா நடத்த முடியும் என்று எனக்குத் தோணலே. அவளை எப்படிக் கட்டிக்கிட்டுக் குடும்பம் நடத்துறது. முடியாது என்று சொன்னால் அம்மாவின் அதிருப்திக்கு ஆளாக நேரிடுமேன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். நல்லவேளை அதிலேயிருந்து தப்பிக்க ஒரு வழியை விதி காட்டியது.

"இப்போ வர்ற வழியிலே சவுக்குத் தோப்பிலே சாவித்திரியும் கண்ணன் என்கிற வக்கீலும் காதற் களியாட்டத்திலே மூழ்கிக் கிடக்கிறதைப் பார்த்துட்டேன். நானும் அம்மாவும் அறியாவண்ணம் தன் மனசிலே கண்ணனை வரித்து விட்டாள் சாவித்திரி என்ற உண்மை இன்னிக்குத்தான் எனக்கு தெரிஞ்சது. அதைப் பார்த்த பிறகு சாவித்திரி என்னை விட்டு வெகு தொலைவுக்குப் போயிட்டாள் என்பதை புரிஞ்சிக் கிட்டேன். அவள் என்னிக்கும் என் மாமன் மகள் என்ற உறவில் சகோதர பாசத்தோடு இருப்பாள். நானும் என்றென்றைக்கும் அத்தானாகவே இருப்பேன். கணவன்—மனைவியாக கட்டப்படும் கொடுமையிலிருந்து இரண்டு பேருமே தப்பிச்சுக்கிட்டோம். இதை அம்மாவிடம் போய் சொல்லி சாவித்திரி விருப்பப்படியே நடந்துடுவோம். கண்ணனுக்கே கட்டி வச்சிடுவோம்னு சொன்னால் போதும்; அம்மாவும் சம்மதிச்சுதான் ஆகணும்!"

இவ்வளவு விரிவாக வனஜாவிடம் தனது குடும்பக் கதையைப் பேசிவிட்டான். வரும் வழியில் சாவித்திரியும் கண்ணனும் ஒரு சேரக் கிடந்த காட்சியைக் கண்ட சுவையோடு

வந்தான். அதை இறக்கி வைக்க இடம் தேவை என்ற தவிப்பு வேறு. கேட்பதற்கு வனஜா கிடைத்தாள். மனதில் உள்ளதைக் கொட்டிவிட்டான். வனஜாவுக்கும் ஆச்சரியமாகவே தோன்றியது. இரண்டாவது சந்திப்பிலேயே இத்துணை அன்யோன்யமாகப் பழகியவரைப்போல் பேசுகிறாரே!

''உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலேன்னு தெரியும். மனசுக்குப் பிடித்த மாப்பிள்ளை கிடைத்து நீங்க அமோகமா வாழணும்'' என்று அட்வான்ஸாக வனஜாவை வாழ்த்தியும் விட்டான்.

இதற்கு எப்படி வனஜா பதில் கூறுவாள்? மெல்லச் சிரித்தாள்.

''ஆமா... உங்க பாட்டி எங்கே?'' என்று கேட்டான் சிவராமன்.

''கோயிலுக்குப் போயிருக்காங்க...'' என்று பதிலளித்து விட்டு பீரோவைத் திறந்து பணம் எடுத்து வந்தாள். ''நாய் என்ன விலை?'' என்றாள்.

''நான் வியாபாரம் செய்ய வரலே. உங்களுக்கு வெகுமதி அளிக்க வந்தேன்'' என்றான்.

''வரும் ஞாயிற்றுக்கிழமை நீங்க எங்க வீட்டுக்கு வரணும்'' என்று தனது முகவரியை எழுதிய துண்டுச் சீட்டைக் கொடுத்துவிட்டு எழுந்தான்.

'கண்டிப்பா வர்றேன்' என்று வாய்விட்டுக் கூறாமல் சிரித்த முகத்தோடு தலையசைத்தாள்.

விடைபெற்றுப் போய்விட்டான் சிவராமன். இங்கே வரும்போது வாழ்வின் தொடர்கதையாக சாவித்திரியின் கதையை முடித்துவிட்டு வந்தான். இங்கே ஒரு கதையைத் துவக்கி விட்டுப் போகிறான். ஆமாம்! வனஜா அவன் சென்ற மறுவினாடியே...ஞாயிற்றுக் கிழமைக்கு இன்னமும் எத்தனை நாட்கள் இருக்கின்றன என்று காலண்டரைப் புரட்டிப் பார்த்தாளே!

❀ ❀ ❀

COMICS PDF TIMES

வீட்டுக்குப் போனதும் சவுக்குத் தோப்பில் கண்ட காட்சியை வெகு பக்குவமாக அம்மாளிடம் எடுத்துரைத்தான் சிவராமன். கேட்ட மாத்திரத்தில் கொதித்தெழுந்தாள், 'வரட்டும் அந்தக் கழுதை. காலை கையை முறிச்சுப் போடுறேன்' என்று. அம்மாவை சமாதானப்படுத்தினான் அவன்.

அவள் மனம் யாரை நாடுகிறதோ அவனுக்கே மணம் முடித்து வைத்தால்தான் கண் கலங்காமல் வாழ்வாள் என்பதை வலியுறுத்தினான். (சாவித்திரிமீது அவனுக்கு இருக்கும் பாசம் உடன்பிறப்புக்கு ஒப்பான பாசம் என்றும் அவளை மணந்து கொண்டு மனைவியாக பாவிக்க தன்னால் முடியாது என்றும் அந்தரங்கத்தில் கிடந்த நீண்ட கால எண்ணத்தையும் தாயிடம் தெரிவித்தான்.

அதன் பின்னரே செல்லம்மாள் சாவித்திரியை கண்ணனுக்குப் பேசி முடிக்க ஒப்புதல் தந்தாள்.

மறுநாளே கண்ணனைக் கண்டு கலந்து பேசினான். கண்ணனும் இதயமார மணவினைக்கு சம்மதித்தான். பெற்றோருக்கு எழுதி அவர்களை வரவழைத்து நிச்சயதார்த்தம் வைப்பதாக வாக்களித்தான்.

அப்பாடா...நீண்ட காலம் உள்ளத்தின் உள்ளே கண்ணில் விழுந்த துரும்பைப்போல் உறுத்திய உறுத்தல் நீங்கிய நெஞ்ச நிறைவோடு திரும்பினான்.

ஞாயிற்றுக் கிழமையும் வந்தது. வனஜா வாக்களித்தபடி வந்து சேர்ந்தாள். அவளை செல்லம்மாளும் சாவித்திரியும் விழுந்து விழுந்து உபசரித்தனர். பேச்சின் இடை இடையே 'எங்க அத்தானுக்கு இது இது பிடிக்கும். இது இது பிடிக்காது. இதையெல்லாம் ஞாபகத்திலே வச்சிக்கிட்டா நல்லது' என்று பொடி வைத்துப் பேசினாள் சாவித்திரி.

அன்று பூராவும் அவளுடைய பேச்சில் இருபொருள் படும்படியான வார்த்தைகளே கூடாடின. அதாவது வனஜாவையும் சிவராமனையும் இணை சேர்த்துப் பேசினாள்.

"இன்னிக்குத்தான் எங்க வீட்டுக்கு மகாலட்சுமி வந்த மாதிரி நிறைஞ்சாப்லே இருக்கு இது என்னிக்குமே நிறைஞ்சிருக்க ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்."

வெளிப்படையாக வனஜா விடை பெறும்போது பேசிவிட்டாள் சாவித்திரி. அப்போது வனஜாவின் முகம் வெட்கத்தால் சிவந்தது

"சாவித்திரி மகா வாயாடி. வாய்க்கப் போற புருஷனும் வாயாடி வக்கீல். கேட்கணுமா, வீட்டிலே சதா பேச்சுப் போட்டிதான் நடக்கும்" என்று போட்டாளே ஒரு போடு வனஜா.

இந்த எதிர்த் தாக்குதலை சாவித்திரி எதிர்பார்க்கவே இல்லை. 'இது எப்படி வனஜாவுக்குத் தெரியும்?' என மலைத்தாள் அவள்.

"சரிதான், இப்பவே அத்தான் உங்ககிட்டே ஒண்ணும் விடாமல் ஒப்பிக்க ஆரம்பிச்சாச்சா. இம்...இனிமே தாங்கள்

எல்லாம் அத்தானுக்குப் பயப்பட வேண்டிய அவசியமில்லே. உங்களுக்குப் பயந்து நடந்துதான் காரியத்தைச் சாதிச்சுக் கணும்!''

''அப்படியா? காரியம் சாதிக்கணுமா? அதுக்காக நீ ஒண்ணும் என்னைக் காக்கா பிடிக்க வேண்டாம் உனக்கும் வக்கீல் கண்ணனுக்கும் கல்யாணம் நடத்தப்படும். சேங்ஷன் பண்ணிட்டேன்...போதுமா?'' என்று சுடசுடக் கொடுத்தாள் வனஜா.

அவ் இருவரின் பேச்சைக் கேட்டு மெய் மறந்து ரசித்து நின்றனர் சிவராமனும் செல்லம்மாளும்.

வனஜா விடை பெற்றுச் சென்றாள்.

சிவராமன் மனதில் வனஜாவைப் பற்றிய ஒரு எண்ணம் கருவாக இருந்தது. வனஜா மனதிலும் கருக் கொண்ட நிலையே. அதை உருவாகவே சாவித்திரி மாற்றிக் காட்டி விட்டாள். இப்படியொரு ஆசையை இருவர் மனதிலும் கிளர்ந்தெழச் செய்து விட்டாள். வண்ணக் கலவையும்—தூரிகையும் இருந்தன. அவற்றை எடுத்து சிவராமன்—வனஜா என்ற ஓவியத்தை வரைந்து முடித்தாள் சாவித்திரி.

இந்த முடிவுக்குப் பிறகு...சிவராமன்—வனஜா இருவருக்கும் இடையே காதல் மலர்ந்தது அதாவது முன்னால் போய் விட்ட வாசனத்தை ரிவர்ஸில் கொண்டு வந்து காதலிப்பதில் இருந்து துவக்கினார்கள்.

அன்றாடச் சந்திப்பு—ஆனந்தக் களிப்பு. மக்கள் நடமாட்டம் இல்லா இடம் அப்பகுதியில் எங்கெங்கு உண்டோ அங்கெல்லாம் சிவராமன்—வனஜா காதற் களியாட்டமே!

இது பாட்டியின் காதுக்கு எட்டியது. வனஜாவைக் கண்டிக்கும் தோரணையில்தான் பேச்சை ஆரம்பித்தாள். வனஜாவின் கலங்கும் கண்களைக் கண்ட பின்னர் பாட்டியின் உள்ளம் உருகி விட்டது. வனஜாவின் விருப்பம்போல் நடத்திவிட சம்மதித்தாள். ஆனால்...பேச்சின் இறுதியில் பாட்டி வீசிய சொற்கள் அனைத்தும் சரமாரியான வெடி குண்டுகளாக வெடித்துச் சிதறின.

''வனஜா! திருமணம் என்று உறுதியானதும் நமக்குப் பண உதவி செய்து வந்தவரிடம் உன்னை அழைத்துப்போய் அனுமதியும் ஆசீர்வாதமும் பெற்றுக்கொள்வதாக வாக்களித்திருக்கிறேன் அவர் சம்மதித்தால் உன் காதல் கைகூடும். நானாக ஓரிடத்தில் மாப்பிள்ளையைப் பார்த்துக் கட்டி வைப்பதாக இருந்தால் இதில் சிக்கலே இல்லே. இது காதல் திருமணம். சாதி விட்டுச் சாதி—அதிலும் மாப்பிள்ளை சிவராமன் எஸ்.எஸ்.எல்.சி.கூட படிக்கவில்லே. நம் அந்தஸ்

துக்கு ஏற்றவனுமல்ல. சாதாரணக் குடும்பம். இந்த நிலையில் உன் விருப்பப்படியே நடந்துகொண்டால் நாளைக்கு உற்றார்-உறவினர்—தமக்கு உதவியவர் என்னைத்தான் கரித்துக் கொட்டுவார்கள். அதனாலே நீ பட்டணத்துக்கு வா. உன் விருப்பத்தை அவர்களிடம் சொல்லு. அவர்கள் சம்மதித்தால் எனக்கு ஆட்சேபனையே இல்லை.''—இதுதான் பாட்டியின் முடிவு.

அதன்படி மறுநாள் பட்டணம் புறப்பட்டனர்.

## 7. குற்றவாளி யார்?

செண்ட்ரல் ஜெயில்—நீதிமன்ற விசாரணைக்குப் பின்னர்—ஒரு கொலைக் குற்றவாளியை தப்பியோட வழி வகுத்துக் கொடுத்து உடந்தையாக இருந்த குற்றத்திற்காகவும்—அவன் சாவுக்கு தப்பிச் சென்றதே காரணமாகி விட்டதாலும்—பதினெட்டு மாத வெறுங்காவல் தண்டனை அடைந்த வாசுதேவன் சிறையில் உருக்குலைந்தவராய்க் கிடந்தார். முன்னாள் நீதிபதி என்பதால் வெறுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது. வேறொருவராக இருந்திருந்தால் கடுங்காவல் தண்டனை—அதிலும் சற்றுக் கூடுதலாகவே கிடைத்திருக்கக் கூடும்.

தனிமைச் சிறை—ஓரளவு வசதிமிக்க ஒரு லாட்ஜ் ரூம் மாதிரிதான். அங்கே அமர்ந்தவாறு ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார் வாசுதேவன்.

''சார்! உங்களைப் பார்க்கணும்னு யாரோ வந்திருக்காங்க'' என்று சிறைக் கதவைத் திறந்தான் ஒரு கான்விக்ட் வார்டர்.

''என்னைப் பார்க்கவா? ரேவதியா?'' என்று முணு முணுத்தபடி வார்டரின் பின்னால் நடந்தார்.

பார்வையாளர் பகுதிக்கு வந்தார். மற்ற கைதியாக இருந்தால் இடையே இரும்புவேலி தடுத்து நிற்கும். வாசுதேவனோ வெறுங் காவல் கைதி—முதல் வகுப்புப் பெற்றவர். எனவே தடையோ தடுப்போ இல்லாத பார்வையாளர் பகுதிக்குள் அனுப்பப்பட்டார்.

அங்கே—சோகமே வடிவாய் நின்றிருந்தாள் வனஜா! அவளையே நோக்கினார் வாசுதேவன். அவளும் அவரையே பார்த்தாள்.

"வனஜா...!" என்று உள்ளத்தின் அடித்தளத்தில் எழும்பிய ஓங்கார அழைப்பை அவரால் கட்டுப்படுத்த இயலவில்லை.

"அப்பா!" என்று இரு கரங்கள் நீட்டி விரைந்தோடி வந்தாள் வனஜா

இருவரும் கட்டி அணைத்துக் கொண்டனர். தாரை தாரையாக இருவரும் கண்ணீர் உகுத்தனர்.

"வனஜா! இப்போ என்னை அப்பான்னு சொன்னியே... நான்தான் உங்கப்பான்னு யாரும்மா சொன்னது?"

"இன்னிக்கு பட்டணத்துக்குக் கூட்டி வந்த பாட்டி இத்தனை காலமா மறைத்து வைத்திருந்த உண்மையைச் சொன்னாங்க. உங்க வீட்டுக்குப் போனோம். அங்கே சித்தி மட்டும் இருந்தது. நீங்க ஜெயில்லே கிடக்கிறதா சித்தி ரொம்ப அலட்சியமா சொல்லிச்சு."

"அவள் குணமே அப்படித்தாம்மா. அவள் குணம் தெரிந்துதான்—கைக் குழந்தையா இருக்கிற போதே உன்னை உன் பாட்டியிடம் ஒப்படைச்சு வளர்க்கச் சொன்னேன். பால்குடி மாறாத பச்சிளங் குழந்தையா இருக்கும்போதே உன்னை இம்சித்தவளாச்சே. பாட்டியிடம் ஒப்படைக்காமல் எங்களுடனேயே வச்சிருந்தால் உன்னை இதுக்குள்ளே கொன்னே போட்டிருப்பாள் ராட்சசி."

"அது சரிப்பா. சித்தி என்னைக் கொடுமைப்படுத்து வாங்கன்னு பயந்து பாட்டியிடம் விட்டீங்க. நியாயம். நீங்கள் அடிக்கடி வீட்டுக்கு வருவீங்க. எனக்கு விதவிதமான விளையாட்டுப் பொருள்களெல்லாம் வாங்கிக் கொடுப்பீங்க. ஒரே ஒருநாள் தங்கிட்டுப் போயிடுவீங்க. உங்களை யாருன்னே காட்டிக்காமே நடந்துக்கிட்டீங்க. ஏம்பா, அவ்வளவு இரும்பு மனசா உங்களுக்கு? என்னுடைய அப்பா ஒரு நீதிபதியின்னு நான் பெருமைப்பட்டுக்கக் கொடுத்து வைக்கலையே! நீங்க யாரோ மாதிரி நடந்துக்கிட்டீங்களே ஆயிரம் ஆயிரமா பணம் அனுப்புவீங்க. அனுப்புறது எங்கப்பாதான்னு எனக்குத் தெரியாதே! நீங்க யாரு, நீங்க யாருன்னு பாட்டியிடம் எவ்வளவோ கேட்டிருக்கேன். அவளும் சொல்லலே!"

"ஆமம்மா! நீ என் மகள் என்பதை உனக்குக்கூடத் தெரியாமல் உன் திருமணம் வயது வர்றவரைக்கும் வளர்க்கணும்னு நினைச்சேன். உன் சித்தி போட்ட சொக்குப் பொடியிலே அப்படி உலகை மறந்து கிடந்தேம்மா. அவள் போட்ட உத்தரவு அம்மா! வனஜா! என்னை மன்னிச்சிடு அம்மா!"

"ஐயோ! நான் உங்களை மன்னிக்கிறதா? நான் உங்களை அப்பான்னே தெரிஞ்சுக்கக் கூடாதுங்கறது சித்தி போட்ட உத்தரவா?"

"ஆமாம்மா... ஆமா... இன்னிக்கு ஏம்மா பாட்டி இத்தனை நாள் காத்த ரகசியத்தை உடைச்செறிஞ்சா?"

"அதுவாப்பா! நான் ஒருத்தரை மனசார விரும்புறேன். அவரையே கல்யாணம் செய்துக்க ஆசைப்படுறேன். இதை பாட்டியிடம் சொன்னதும்... நமக்கு பணம் அனுப்பி உதவி செய்ருரே அவருடைய அனுமதியும் ஆசீர்வாதத்தையும் வாங்கிட்டு வரலாம் வா என்று பட்டணத்திற்குக் கூட்டி வந்தாள். வீட்டுக்குப் போனதும் சித்தி நடந்துகிட்ட முறையால்—தகாத பேச்சினால் பாட்டியின் இதயம் வெடித்து விட்டது. வீட்டில் தொங்கிய உங்க போட்டோவைக் காட்டி இவர்தான் உங்கப்பா என்று சொல்லிட்டாங்க. இப்பதான் நீங்க ஏன் வீட்டுக்கு வரப் போக இருந்தீங்க; பணம் அனுப்பிச்சீங்க என்ற உண்மை புரிஞ்சது. இங்கே இருக்கீங்க என்றவுடனே இங்கே ஓடிவந்தேன் அப்பா! உங்களை அப்பான்னு தெரிஞ்சுக்கிட்ட முதல் நான் ஒரு கைதியாகவா பார்க்கணும்? ஏம்பா உங்களுக்கு இந்தக் கதி? யாருக்கு என்ன தீங்கு செய்தீங்க?"

"யாருக்கோ எப்போதோ தீங்கு செய்திருக்கிறேன். அதுக்கு கடவுள் கொடுத்த தண்டனை" என்று ஆரம்பித்து சிவராமன் கதையைக் கூறினார். அவன் வெளியே போனது வரை சொன்னார்.

"அந்தச் சண்டாளன் வரவே இல்லையா?"

"அவன் நல்லவனம்மா. வந்திருப்பான். தப்பி போற வழியிலே பஸ் விபத்துக்குள்ளாகி செத்துப் போயிட்டான் வனஜா!"

"ஐயோ! இதென்னப்பா கொடுமை! இரக்கம் காட்டிய குற்றத்திற்காக உங்களுக்கு சிறைவாசமா? நீதிபதியா வாழ்ந்த நீங்க கைதியாகவா?"

வனஜா கதறினாள்

"வனஜா! அழாதே! நான் நல்லாத்தான் இருக்கேன். நீ ஒருவனைக் காதலிச்சா அவன் ஒரு உத்தமனாகத்தான் இருப்பான்; பணம் காசு உள்ளவனா இருக்கணுங்கிற அவசியமில்லை சாதி சமயம் பார்க்க வேண்டாம். உன் மனசுக்குப் பிடிச்சிருந்தால் அவனையே கட்டிக்கிட்டு ஆனந்தமாக ஆயோகமாக வாழு திருமண விழாவுக்கு வருவேம்மா, ஜெயில்லே விடுதலையாகி. போம்மா, போயி பாட்டியிடம் சொல்லி திருமணத்திற்கு ஏற்பாடு செய்."

"வேண்டாம்பா. உங்களை இந்த நிலையிலே பார்த்த பிறகு எனக்கு திருமண ஆசையே அற்றுவிட்டது. நீங்கள் விடுதலையானதும் பார்த்துக் கொள்ளலாம்."

இதற்குமேல் இருவரும் பேசவில்லை. அப்பாவின் நெஞ்சத்தில் ஆறுதல் பெற்றுள் வனஜா.

❋ ❋ ❋

வழக்கமாக சிவராமனைச் சந்திக்கும் தோப்புக்கு வந்தாள் வனஜா. அவளுக்காக அங்கே காத்திருந்தான் சிவராமன் பட்டணத்திற்குப் போய் திருமணத்தை உறுதி செய்து விட்டுத் திரும்புவதாகச் சொல்லிச் சென்ற வனஜாவை எதிர்நோக்கித்தான் காத்திருந்தான்.

வனஜா அவன் அருகில் வந்து அமர்ந்து கண்ணீர் வடித்தாள். என்ன ஆச்சு என்று பல தடவைகள் கேட்டும் பதில் பேசவில்லை அவள்.

"அப்போ என்னைக் கட்டிக்கிறதுக்கு உங்க குடும்பத்தார் சம்மதம் கிடைக்கலே; அப்படித்தானே. சரி, நான் வர்றேன் வனஜா. என்னை மறந்திடு" என்று வேகமாக எழுந்தான்.

அப்புறமே அவள் வாய் திறந்தாள்.

"சிவா! உங்களைக் கட்டிக்கக் கூடாதுன்னு யாருமே சொல்லலே. ஆனால், எங்கப்பா யாருன்னு இன்னிக்குத்தான் தெரிஞ்சுக்கிட்டேன். அவர் ஜெயில்லே இருக்காரு"

"ஜெயில்லே இருக்காரா? ஏன்? என்ன குற்றம் செய்தார்?"

"குற்றம் செய்யலே; கருணை காட்டினுர். அதற்காக சிறைவாசம். யாரோ ஒரு கைதி அம்மாவைப் பார்க்கணும்னு அழுதானும். அப்பா இரக்கம் காட்டி அவனுக்காக இவர் ஜெயிலுக்குள்ளே இருந்துகொண்டு அவனைத் தப்பிக்க விட்டிருக்காரு."

"ஆ! அவரு பேரு என்ன வனஜா?"

"நீதிபதி வாசுதேவன்!"

"அவர் ஜெயில்லே இருக்காரா? இன்னுமா?"

"ஆமா...போனவன்தான் திரும்பி வரலையே! திரும்ப முடியாத இடத்துக்குப் போயிட்டானே."

"என்ன? திரும்ப முடியாத இடத்துக்கா?"

"ஆமா! பஸ் விபத்திலே செத்துப் போயிட்டானும். உயிரோடு இருந்திருந்தால் திரும்பி வந்திருப்பானும்."

"ஆமா! திரும்பி வந்திருப்பான்."

"ஆ! அவனை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்! அவன் சாகலே. உயிரோடு இருக்கான்"

"இருக்கானு? இருந்துமா எங்கப்பாவை மீட்க அவன் போகலே; பாவி?"

சிவராமனின் உள்ளமெல்லாம் ஆட்டம் கண்டது. 'ரௌடி ரங்கன் பொய் சொல்லி எவ்வளவு பெரிய பாவத்திற்கு என்னைப் பலியாக்கிட்டான் பாவி' என்று உள்ளூரப் பொருமினான்.

"வனஜா! அவனை நான் பிடிச்சுக் கொடுக்கிறேன். அவன் இருக்குமிடம் எனக்குத் தெரியும். உங்கப்பாவை விடுதலை செய்திடலாம். கவலைப்படாதே. நாளைக்கு இதே இடத்திற்குப் போலீசை வரச்சொல். நான் அவனை இங்கே கூட்டிவந்து ஒப்படைக்கிறேன்."

"சிவா! கண்டிப்பா அவனை பிடிச்சுக் கொண்டு வந்திடுவீங்களா? சிவா! இந்த உதவிக்காக...என்னை ஒப்படைக்கப் போறேனே, அதுகூடப் போதாதே..."

"அதெல்லாம் அப்புறமா பேசிக்கலாம். நீ போ...போலீசுக்குத் தகவல் கொடுத்துவிடு."

என்று துரிதப்படுத்தினான். வனஜா புறப்பட்டு விட்டாள். அப்பா விடுதலையாகிவிடுவார் என்ற எக்களிப்பு—இதயம் பூராவும்.

இனி ஒருநாள் கூட வெளியே இருக்கக் கூடாது. தனக்காக சிறையில் கிடக்கும் அந்த உத்தமரை மீட்பதே முதல் வேலை என்ற துடிப்பு சிவராமனுக்கு.

❋ ❋ ❋

மறு நாள் அதே சவுக்குத் தோப்பு—வனஜா முன்னதாக வந்து காத்திருந்தாள். போலீசாரை சரியாக ஆறு மணிக்கு வரச் சொல்லி விட்டாள்.

சிவராமன் மட்டும் தலைதாழ்ந்தவனாக வந்து நின்றான். "சிவா! எங்கே அவன்?" என்றாள் பதற்றத்தோடு சற்று நேரம் மௌனம். "எங்கே அந்த துரோகி?" என்று துளைத்தெடுத்தாள்.

"இதோ, நான்தான் அவன்!" என்றான் பொங்கும் இதயத்தை அடக்கியவாறு.

"நீங்களா? சிவா! இதென்ன விளையாட்டு?" என்று பேதலித்தாள்.

"நானேதான் வனஜா" என்றான் முன்னிலும் சற்று அழுத்தமாக.

நடந்த கதையைப் பூராவும் எடுத்துக்கூறி ரௌடி ரங்கன் பேச்சைக் கேட்டு தான் ஏமாந்து விட்டதையும் தெரிவித்தான்.

இப்போது அவளுக்குத் தேவை அப்பாவா? காதலனா? மனம் இரு கூறாகப் பிரிந்து போராட்டம் உருவெடுத்தது. இதற்குள் போலீசார் வருவதை கார் வெளிச்சம் எடுத்துக் காட்டியது. அவனை இழுத்துக் கொண்டு தப்பியோடிவிடப் பாய்ந்தாள். அங்கேயிருந்து திடுதிப்பென எழுந்தார் இன்ஸ்பெக்டர். அவர் வனஜாவுக்கு முன்னதாக அங்கே வந்து மறைந்திருந்தார். அதனால் சிவராமனைக் காப்பாற்ற வனஜாவால் முடியவில்லை.

அப்பாவை மீட்க காதலனைக் காவு கொடுத்து விட்டாள். ஒருவர் சிறையைவிட்டு வெளியே வர இன்னொருவர் உள்ளே போகிறார். பாவம், பரிதாபத்திற்குரியவள்!

தப்பியோடிய குற்றத்திற்காக சிவராமன் மீது விசாரணை தொடர்ந்தது. ஏற்கனவே கொலைக் குற்றத்திற்காக விதிக்கப் பட்ட தண்டனையையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

## 8. தெய்வத்தின் பார்வை

மேலை நாடுகளில் வழக்கறிஞர்களாய் இருப்போரில் பலர் துப்புத் துலக்குவதையும் மேற்கொண்டிருக்கிறார்கள். வழக்கில் புதைந்து கிடக்கும் உண்மையை வெளியே கொண்டு வர முயல்கிறார்கள். உண்மை புதையுண்டு போகாமல் இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொள்கிறார்கள்.

தர்ம நியாயப்படி பார்த்தால் குற்றவாளி தண்டிக்கப்பட்டே தீரவேண்டும். நிரபராதி விடுதலை பெற்றே ஆகவேண்டும். குற்றம் புரியாதவன்மீது சந்தர்ப்பவசத்தால் போலீசார் குற்றம் சுமத்திவிடக்கூடும். சந்தர்ப்ப சாட்சியங்களை வலுவாக போட்டிருக்கவும் கூடும்.

குற்றம் சாட்டப்பட்டிருப்பவன் போலீசாரின் ஜோடனையிலிருந்து தப்பிக்கவே முடியாத அளவுக்குச் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும். இந்த நிலையில் வழக்கறிஞர் தனது முழு

பலத்தையும் பயன்படுத்தி அவனுக்கு விடுதலைப் பெற்றுத்தர வேண்டும். சாட்சியங்களை உடைத்து உண்மையை வெளிப்படுத்த வாதம் புரிந்தும் பயனில்லாமல் போனால்...? அநியாயமாக ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடுவானல்லவா! இந்த அநியாயம் நடந்து விடக் கூடாது என்பதற்காக துப்பறிந்து நடந்தது என்ன என்ற உண்மையைக் கண்டுபிடித்து அதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கவும் வேண்டும் என்பது மேலை நாட்டு வழக்கறிஞர்கள் பலரின் கொள்கை.

கண்ணன் இந்த முறையைத்தான் ஏற்கனவே மேற்கொண்டிருந்தான் சிவராமன் தான் கொலை செய்யவே இல்லை— நிரபராதி என்று கதறித் துடித்தான். அந்த அக்கிரமக்காரன் அகப்பட்டிருந்தால் கொன்று இருப்பேன் என்று தன் உண்மையான மனநிலையை ஒளிவு மறைவில்லாமல் சொல்லவும் செய்கிறான். சிவராமனின் வாக்குமூலத்தை பச்சையான உண்மை என்று கண்ணன் நம்பினான். சிவராமன் குற்றவாளியாக இருக்க முடியாது என்ற திட்டவட்டமான தீர்மானத்திற்கும் வந்து விட்டான்.

அன்று முதல் கண்ணன் நடந்த நிகழ்ச்சியை—புதையுண்ட மர்மத்தைக் கண்டறியும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டான். அவன் தேடிக் கண்டுபிடித்து அம்பலப்படுத்தி சிவராமனின் விடுதலையை பெற்றிட முயற்சி எடுப்பதற்குள் சிவராமன் சிறையைவிட்டு வெளிவந்து விட்டான். ஆகவே கண்ணன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று.

இப்போது மீண்டும் பிரச்னை தலைதூக்கி விட்டது. சிவராமன் கைது செய்யப்பட்டிருக்கிறான் மறுபடியும் இப்போது அவன்மீது நடத்தப்படுவது சிறையிலிருந்து தப்பிச் சென்றான் என்ற குற்றச்சாட்டின் கீழ் வரும் வழக்கு.

இருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிவராமன் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க ஆதாரம்—தடயம் இருக்குமானால் இப்போதும் கண்ணன் நீதிமன்றத்தில் வழக்காட வழியுண்டு

ஆகவே முன்பு சேகரித்து வைத்திருந்த ஆதாரங்களையும்—தயாரித்திருந்த ஆர்க்யூமெண்ட்டையும் எடுத்துப் புரட்ட ஆரம்பித்தான். பழைய சம்பவங்களையும்—உயர்நீதிமன்றத்தில் அவன் ஆற்றிய வாதத்தையும் தேவசகாயம் எதிர்வாதம் புரிந்ததையும் நன்றாக நினைவுபடுத்திக் கொண்டான்.

அத்தான் சிறையிலிருந்து மீண்டுவிட்டார் என்ற ஆறுதலுடன் ஆனந்தமும் கலந்த நிம்மதியோடு வாழ்ந்தாள்

சாவித்திரி. இப்பொழுது...சிவராமன் கைது செய்யப்பட்டான் என்ற சேதி எட்டியது. அனல்பட்ட புழுவாய்த் துடித்தாள்.

அருவியெனப் பாயும் கண்ணீரைத் துடைத்துவிடும் அன்புக்கரம் எங்கே? கண்ணனின் அன்பு ஆதரவைத் தவிர அவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்?

"அத்தானைக் கைது செய்திட்டாங்களாமே. இந்த எதிர்பாராத அதிர்ச்சியைத் தாங்க முடியலையே" என்று கதறி அழுதாள் கண்ணனிடம் சாவித்திரி.

"சாவித்திரி! அழாதே! இதோ, அது சம்பந்தமான ரிக்கார்டுகளைத்தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறேன். அச்சமும் குழப்பமும் தீர்ந்து நிரந்தரமான பரிகாரம் ஏற்பட இது ஒரு தக்க தருணம் என்றே நான் கருதுகிறேன். கவலைப்பட வேண்டியதே இல்லை. எனக்கு நம்பிக்கை இருக்கு. சிவராமன் குற்றவாளியல்ல என்று நிரூபித்து நிரந்தரமான விடுதலை வாங்கித் தருவேன்.

"இன்று சிவராமனை கோர்ட்டில் ஆஜர்படுத்துகிறார்கள். இன்னிக்கே நானும் ஆஜராகிறேன். உண்மையான குற்றவாளி யார் என்பதை மெய்ப்பித்துக் காட்டுவதாக இருக்கிறேன். நான் யாரைக் குற்றவாளி என்று சந்தேகிக்கிறேனோ அந்த நபரே முன்வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டால் சரி. இல்லையேல் இன்னார்தான் என்று காட்டிக் கொடுப்பேன். சாவித்திரி! நீயும் வந்து அந்த எதிர்பாராத திருப்பத்தைப் பார். நீயே திகைத்துப் போவாய்."

கண்ணன் பேச்சில் ஆழ்ந்த நம்பிக்கை வெளிப்பட்டது. முன்னைவிடத் தெளிவும்—தென்பும் முகத்தில் பளிச்சிட்டன. வக்கீல் குமாஸ்தா வந்து கேஸ் கட்டுகளை எடுத்து அடுக்கித் தூக்கிச் சென்றார். கண்ணனும் புறப்பட்டான். சாவித்திரி பின்தொடர்ந்தாள்.

நீதிமன்றம்—பார்வையாளர்களால் நிரம்பி வழிந்தது. சிறையிலிருந்து தப்பியோடி...இறந்து விட்டதாகக் கருதப்பட்ட கைதி...உயிரோடு மீண்டும் பிடிபட்டான்—அவனுக்குப் பதிலாக சிறை வாசத்தை தானே வலியப் போய் ஏற்று அவன் திரும்பி வராததால் தண்டனை அடைந்தவர் வாசுதேவன்! அவர் ஒரு நீதிபதி—

இவ்வளவு போதாதா, கேள்விப்பட்ட மக்கள் திரளாகக் கூடுவதற்கு!

பலத்த போலீசு காவல் போடப்பட்டிருந்தது நீதிமன்றத்தில். இருந்தாலும் பரபரப்படைந்து குழுமிய மக்களை அமைதிப்படுத்தவும், மேற்கொண்டு வந்தோரை உள்ளே

நுழைய விடாமல் கட்டுப்படுத்தவும் போலீசாருக்கு மிகவும் கஷ்டமாகவே இருந்தது.

போலீஸ் வேன் மத்திய சிறைச்சாலையிலிருந்து வந்தது. நீதிமன்றத்திற்கு வெளியே திரண்டிருந்த மக்கள் அதிசயத்தைக் காணத் துடிப்பவர்களைப்போல் விழிகளை அகல விரித்தபடி நின்றிருந்தனர்.

முதலில் சிவராமன் இறங்கினான்; அடுத்து நீதிபதி வாசுதேவன் இறங்கினார். போலீசார் புடைசூழ்ந்து நடக்க சிவராமனும் வாசுதேவனும் நீதிமன்ற மண்டபத்திற்குள் நுழைந்தனர்.

உள்ளே குழுமிக் கிடந்தோரிடையே சலசலப்பு. பாவியையும் புண்ணியவானையும் ஒருசேர பார்க்கக் கூடிய விசித்திரக் காட்சியல்லவா! ஒருவரோடு ஒருவர் காதோடு காதாகக் கிசுகிசுத்தனர். 'இவருக்கா நம்பிக்கைத் துரோகம் செய்தான்?'

வழக்கறிஞர்கள் பலர் மற்ற நீதிமன்றங்களை விடுத்து இங்கே கூடியிருந்தனர். இவ்வழக்குத் தொடர்புடைய வழக்கறிஞர்கள் இருவரும் அவர்களுடைய உதவியாளர்கள் ஆளுக்கு இருவராக நால்வருமேதான். ஏனைய வழக்கறிஞர்கள் விசித்திர வழக்கு என்பதாலும் அதன் போக்கு எப்படி என்பதைக் கண்டறிவதற்காகவும் அப்படிக் கூடியிருந்தனர்.

நீதிபதி வந்தார்—அனைவரும் எழுந்தனர்; மரியாதை காட்டும் முகத்தான். நீதிபதி ஆசனத்தில் அமர்ந்த பின்னர் அனைவரும் அமர்ந்தனர். தன் முன்னால் வைக்கப்பட்டுள்ள வழக்கு சம்பந்தப்பட்ட கட்டுகளைப் புரட்டினார் நீதிபதி.

வாசுதேவனும்—சிவராமனும் எதிர் எதிரான இரு குற்றவாளிக் கூண்டில் ஏறி நின்றனர். இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் நீதிபதி. அவருக்கு சீனியர் வாசுதேவன். சட்ட நுணுக்கத்தில் மேதை. வாசுதேவனிடம் பிராக்டீஸ் செய்தவர் இந்த நீதிபதி. இன்று அவர் குற்றவாளிக் கூண்டில் நிற்க--நாம நீதிபதி பீடத்தில் அமர்ந்திருக்கிறோமே எனும் உள்ளுணர்வு கொந்தளிக்க பார்த்தார் வாசுதேவனை.

எவ்வித கிலேசமும் கலவரமும் இன்றி தெளிந்த முகத்தோடு நிற்கும் அத்தானை மட்டுமே கண் கலங்கியபடி பார்த்திருந்தாள் சாவித்திரி. அகப்பட்டது அகப்பட்டு விட்டோம்; இனி ஆவது ஆகட்டும் என்று தெளிவடைந்து விட்டாரா அத்தான்? கொஞ்சம்கூட பயமோ--கவலையோ இன்றிக் காணப்படுகிறாரே! இது சாவித்திரியின் மனப் புரளி

மற்றோர் புறம், சிவராமனை மட்டுமல்ல வாசுதேவனையும் பார்த்த விழிகள் இரண்டு. அவற்றின் சொந்தக்காரி வனஜா.

இருவரையும் மாறி மாறிப் பார்த்து மனம் குமுற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானவள் வனஜா. சாவித்திரிக்கு அத்தானைப் பற்றியே கவலை. வாசுதேவன் எக்கேடு கெட்டால் அவளுக்கென்ன? வனஜாவின் நிலை அதுவல்லவே! ஒருவர் அப்பா—மற்றொருவர் காதலர்; இருவரும் ஒரே வழக்கில் சிக்கிக் கொண்டவர்கள். இருவருடைய வாழ்வும் வனஜாவுக்கு முக்கியம்.

சிவராமன் பிடிபட்டு விட்டதால் அப்பா விடுதலையாகப் போவது திண்ணம். அப்பா கிடைத்து விட்டார் என்ற ஆனந்தம் பெருக்கெடுத்து ஓட—முகமலர்ச்சியோடு அப்பாவின் கையைப் பற்றிக்கொண்டு நீதிமன்றத்தை விட்டுப் போய்விட மனம் ஒப்புமா? காவலர் முன்னும் பின்னும்வர—கையில் விலங்கிட்டு இழுத்துச் செல்லப்படும் கொடுமையைக் காணப் பொறுக்குமா உள்ளம்!

இத்தகு மனநிலையில் வனஜா. உண்மையான குற்றவாளியை சரியாக இனம் காட்டி—சிவராமனை நிரபராதியாக வீட்டுச் செல்ல வேண்டுமே என்ற ஆர்வம்—அக்கறை கண்ணனுக்கு.

கண்ணன் எழுந்தான்—சற்றுமுன்னே நடந்தான்—நீதிபதியை நோக்கினன்.

"யுவர் ஹானர்! சிவராமன் கொலைக்குற்றம் புரிந்தவன் என்ற குற்றச்சாட்டின்மீது நடைபெற்ற வழக்கில் முன்பு எதிரிக்காக வழக்காடியவன் நானே என்பதை இந்த கோர்ட்டாருக்கு நினைவுபடுத்தி மீண்டும் எதிரிக்காக வழக்காட அனுமதி கோரி வக்காலத்து தாக்கல் செய்திருக்கிறேன்" என்றான் கண்ணன்.

"எஸ்! இப்போது இங்கே எடுத்துக் கொண்டிருப்பது சிவராமன் சிறையிலிருந்து வெளியேறினன்; முன்னுள் நீதிபதி வாசுதேவனை சிறைவாசத்தில் இருக்க வைத்துவிட்டு. தனக்காக ஒரு பெரிய மனிதர் சிறைபட்டுக் கிடக்கிறார் என்ற மனிதாபிமான உணர்வுகூட இல்லாமல் பயமின்றி நிம்மதியாக வாழ்ந்திருக்கிறான். இப்போது பிடிபட்டிருக்கிறான். இது தனியான குற்றசாட்டு. இதன்பேரிலேயே விசாரணை துவங்க இருக்கிறது. மிஸ்டர் கண்ணன் இதன் தொடர்பாக வக்காலத்துப் போட்டிருக்கிறாரா அல்லது..." என்று சர்க்கார் தரப்பு வக்கீல் விளக்கம் கோரினர்.

"இந்த வழக்கில் ஆஜராவதாகவே குறிப்பிட்டிருக்கிறார்" என்றார் நீதிபதி.

கண்ணன் ஆரம்பித்தான்: "இவ்வழக்கு முன் வழக்கின் தொடர்ச்சியே. ஆகையால் முன் நடந்த கொலை வழக்கைப்

பற்றி இப்போது வாதாடக் கூடாது என்ற முடிவுக்கு வரக் கூடாது. ஏனென்றால் ஒரு நிரபராதி சிறையில் அடைக்கப் பட்டிருந்தான் என்பது நிரூபிக்கப் படும்போது அவன் தப்பி யோடி தலைமறைவாக வாழ்ந்தான் என்ற இவ்வழக்கு அடி யோடு அடிபட்டுப் போய்விடும். முன்னாள் நீதிபதி வாசு தேவன் சிவராமன்பால் கருணை காட்டினார்; அவன் தாயா ரைப் பார்க்கவேண்டும் எனக் கண்கலங்கி நின்ற காட்சியைக் கண்டார்; அவரும் கண்கலங்கினார் சிவராமனை போய் வா என்று அனுப்பிவிட்டு அவனுக்காக அவனைப்போல் நடித்து சிறைக்குள் தன்னை ஒப்படைத்துக் கொண்டார் இது அவருடைய சொந்த விருப்பத்தின்பேரில் ஏற்றுக் கொண்ட தாகும்.

"சிவராமன் பலவந்தப்படுத்தியோ—பலாத்காரத்தைப் பயன்படுத்தியோ வாசுதேவனை சிறைக்குள் தள்ளிவிட்டு ஓட வில்லை. இருவரும் மனம் ஒப்பி நடத்திய காரியம். சிறையி லிருந்து வாசுதேவனால் தந்திரமாக சிவராமன் அனுப்பப்பட் டான் என்பதே சரி. தப்பியோடி விட்டான் எனக் கருது வதோ—அந்த அடிப்படையில் குற்றம் சுமத்துவதோ சட்டப் படி முரணானது. வெளி உலகுக்கு வந்தவன் வாசுதேவனை மீட்டு தன்னை மீண்டும் சிறைச்சாலையில் ஒப்படைத்துக் கொள்ள திரும்பி வரவே செய்தான். ஆனால் இடையில் குறுக்கிட்ட ரௌடி ரங்கன், வாசுதேவன் சிறையில் இல்லை: போய்விட்டார் என்று பொய்யுரைத்தான் நீயும் எங்களுள் ஒருவனாக விடுதலை செய்யப்பட்டு விட்டாய் என்றும் புளுகினான்.

"அவனுடைய பேச்சை நம்பித் திரும்பிவிட்டான் சிவ ராமன். ஆகவே மனிதாபிமான உணர்வுகூட இல்லாமல் சிறைவாசத்தில் வாசுதேவனை வாடக் கிடக்கச் செய்துவிட்டு வெளிஉலகில் நிம்மதியாக உலவினான் சிவராமன் என்ற வாத மும் பலமிழந்து போகிறது இதோ...ரௌடி ரங்கனையும் கூட்டி வந்திருக்கிறேன். அவனையும் சாட்சிக் கூண்டிலேற்றி விசாரிக்கலாம்."

இவ்வாறு கண்ணன் குறிப்பிட்டபோது ரௌடி ரங்கன் எழுந்து நின்றான்.

"அவனை விசாரிப்பது இருக்கட்டும். சிவராமன் நிரப ராதிதான்; அவன் சிறையை விட்டுச் சென்றது எப்படிக் குற்றமாகும் என்று குறிப்பிட்டீரே அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நீதியை நிலைநாட்ட வேண்டிய நீதி மன்றம் நீதியிலிருந்தே தவறி விட்டதாகி விடும். அப்படி யொரு இழுக்கு நீதிமன்றத்திற்கு ஏற்பட்டு விடக்கூடாது.

குற்றவாளிகூட விடுதலையாகி விடலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது. இதுதான் சட்டத்தின் ஜீவதாரம். ஆகவே...கொலை வழக்கை மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். உண்மையை அறிந்து கொள்வதில் நாம்தான் முன்னோடிகளாக இருக்க வேண்டும். நீதியை நழுவ விடாமல் காப்பது நமது கடமை. இந்த நல்ல கண்ணோட்டத்தில் உண்மையை வெளிக் கொணர்ந்து சிவராமன் குற்றவாளியல்ல என்பதை மெய்ப்பிக்கத் தயார் என்கிறாரே கண்ணன், அவருடைய வேண்டுகோளை ஏற்கிறேன். இந்த அரசுத் தரப்பு வழக்கறிஞர் எதிர்க்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.''

இது நீதிபதியின் அனுமதி—தெளிந்த கண்ணோட்டம் நீதிபதியின்மீது அவர் கொண்டுள்ள பயபக்தியை எடுத்துக் காட்டியது. சர்க்கார் வக்கீலும் இதற்கு இணக்கம் காட்டினார்.

இதனால் கண்ணனுக்குப் புதிய வலிவு ஏற்பட்டது. புதிய உற்சாகம் மேலிட்டது. பேச்சைத் தொடர்ந்தான்:

''கனம் நீதிபதி அவர்களே! முன்பு உயர்நீதி மன்றத்தில் நான் வாதாடியபோது ஒரே ஒரு கருத்தை மிக அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டேன். பிணம் கிடந்த இடத்தில் இடது புறப் பாதம் பதித்த சுவடிகள் பதித்திருப்பதையும்—அந்த பாதத்தில் கட்டை விரல் இல்லை என்பதையும் சுட்டிக் காட்டினேன். அந்த இடதுபுறக் காலில் கட்டைவிரல் இல்லாத ஆசாமி ஏன் கொலை செய்திருக்கக் கூடாது என்ற சர்ச்சையைக் கிளப்பினேன்.

''ஆனால் அந்த ஆள் யார் என்று அப்போது திட்ட வட்டமாகக் குறிப்பிட்டுச் சொல்ல என்னால் இயலவில்லை. அது யார் என்றும் அப்போது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் வழக்கு அப்போதே பைசலாகி சிவராமன் விடுதலையாகி இருப்பான். இன்று—இந்த புதிய சிக்கலும்—சிறையில் இருந்து தப்பினான்—மறைந்திருந்தான் என்ற கதையே நடந்திருக்காது. என்ன செய்வது? அதற்குப் பின்னர் கிடைத்த காலம்—அவகாசத்தைப் பயன்படுத்தி அது யாராக இருக்கக் கூடும் என்பதைக் கண்டுபிடித்தேன். சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யவும் அனுமதி கிட்டவில்லை. இதனால் என் முயற்சி—கண்டறிந்த உண்மை வீணாகி மூலையில் தள்ளப் பட்டு விட்டன.''

''இருக்கலாம். இப்போது அதை வெளியிட சந்தர்ப்பம் கிடைத்திருப்பதால் அந்த ஆசாமி யார்—நடந்த கொலைக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம் என்பதைத் தாராளமாகக்

கூறலாம்'' என்றார் நீதிபதி, கண்ணனுக்கு உற்சாகமூட்டும் தோரணையில்.

அப்போது அரசுதரப்பு வழக்கறிஞர் எழுந்து, ''இடது காலில் கட்டை விரல் இல்லாத ஒருவரை காட்டலாம் நண்பர் கண்ணன். அவரே கொலை செய்தார் என்று கூறிவிடவும் முடியும். ஆனால் கொலை செய்தவர் அந்த நபரே என்பதையும் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபித்தாக வேண்டிய பொறுப்பும் கண்ணனையே சாரும்'' என்று ஒரு சுமையைக் கண்ணன்மீது தூக்கிப் போட்டுவிட்ட மாதிரி பேசினார்.

கண்ணனோ மிக ஆணித்தரமாக அந்தப் பொறுப்பை ஏற்றான்:

''நண்பர் அரசு தரப்பு வழக்கறிஞர் என்மீது ஒரு பெரிய பாரத்தை தூக்கிப் போட்டு விட்டதாகக் கருதுகிறார் நான் பொறுப்பைத் தட்டிக் கழிக்க மாட்டேன். நிரூபிப்பது என் பொறுப்பு—கடமை. இடது புறக் காலில் கட்டை விரல் இல்லாத ஒருவரை இதோ குற்றவாளி என்று காட்டிவிட்டால் மட்டும் பிரச்னை தீர்ந்து விடுமா? அந்த நபர் நானில்லை குற்றவாளி என்று எதிர் வழக்காட மாட்டாரா? அப்படி யாரோ ஒருவரை அநாவசியமாகக் காட்டிவிட முடியுமா? அந்த நபர் யார் என்றும் காட்டுவேன். ஏன் கொலை நடந்தது? எப்படி நடந்தது என்று நான் நினைக்கிறேனோ அதையும் வெளியிடுவேன்.''

''ஆல்ரைட்! அவ்வளவு மன உறுதியும் நம்பிக்கையும் இருக்கும் பட்சத்தில் தாராளமாக அந்தக் குற்றவாளியைப் பற்றிக் கூறலாம். நான் மட்டுமல்ல, இங்கே கூடியிருப்போர் அனைவரும் எவ்வளவு ஆவலாக இருக்கிறார்கள் என்பதையும் அறிவேன். நீதியின் கண் விழித்துக் காத்திருக்கிறது... இம்! வெளியிடலாமே...''

''ஆகட்டும், கனம் நீதிபதி அவர்களே! கொலை நடந்த ஓடைக் கரையிலிருந்து வடக்கு திசை நோக்கி ஒரு ஒற்றையடிப் பாதை செல்கிறது. சிவராமன் கைது செய்யப்பட்ட மறுநாளே பிணம் கிடந்த இடம், சுற்று சார்புகள், அந்த ஒற்றையடிப் பாதை முதலியவற்றைப் பார்வையிட்டேன். என் மனதில் என்னவோ ஒரு சந்தேகம் வலுவடைந்து ஊடாடியது. இப்படி என்னைத் தூண்டி விட்டவை அந்த அடிச் சுவடுகளே. யாரோ ஒரு மூன்றும் நபர் அங்கே வந்து போயிருக்க வேண்டும். இதை திட்டவட்டமாக முடிவு செய்து கொண்டேன். அதனால் அடிக்கடி அவ்விடத்திற்குப் போய் ஆராய்ந்தேன். இந்தக் கட்டம்வரை நான் வந்திருந்த வேளையில் உயர்நீதி மன்ற விசாரணை முடிந்து கீழ்கோர்ட்

தீர்ப்பு ஊர்ஜிதமாகி விட்டது. மேற்கொண்டு சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய அனுமதியும் கிட்டவில்லை. அதனால் மேற்கொண்டு நான் துப்புத் துலக்கி கண்டுபிடித்த மர்மத்தை வெளியிட சந்தர்ப்பம் வாய்க்காமல் போயிற்று. இப்போது கனம் நீதிபதி அவர்களுடைய மேலான அனுமதி கிட்டியதால் உண்மையை வெளிப்படுத்த இவ் அருமையான சந்தர்ப்பம் வாய்த்தது.''

''அந்த ஒற்றையடிப் பாதை வழியாகப் பல தடவைகள் போகவர ஆரம்பித்தேன். ஒருநாள் முட் புதருக்கு மத்தியில் மினுக் மினுக் என்று ஒரு பொருள் மின்னுவதைப் பார்த்தேன். குனிந்து உற்று நோக்கினேன். அது...ஒரு சட்டைப் பொத்தான். தங்கத்தால் ஆனது. சில பெரிய மனிதர்கள் இம் மாதிரியான தங்கப் பட்டன்களைச் செய்து சட்டைகளில் அணிந்து கொள்வதுண்டு. அதை எடுத்துப் பார்த்தேன். அதில் துணிப் பிசிறும் ஒட்டிக்கொண்டிருந்தது. அதிலிருந்து ஒன்றைப் புரிந்துகொள்ள முடிந்தது. அது மிக எளிதாக சட்டையிலிருந்து சுழன்று விழவில்லை. இழுக்கப்பட்டு சட்டைத் துணியில் ஒரு சிறு பீஸ் அளவு தன்னோடு கிழித்துக் கொண்டே விழுந்திருக்கிறது.

பட்டனில் பின்புறத்தில் இரு எழுத்துக்கள். அவை இன்ஷியல்—பெயரின் முதல் எழுத்து. அது யாருடையது? மேற்கொண்டு அவ்வழியே சற்றுத் தொலைவுக்குப் போனால் பெரிய பங்களா இருப்பதை இன்றைக்கும் காணலாம். அங்கே வசித்தவர் மிகப் பெரிய மனிதர்; சமூகத்தில் அந்தஸ்து மிக்கவர்; நல்லவர் செல்வமும் செல்வாக்கும் நிறைந்தவர். அவருடைய இன்ஷியலும் பெயரின் முதல் எழுத்தும் பட்டனில் காணப்பட்டவை. ஆக அவர்தான் பிணம் கிடந்த இடம்வரை வந்திருக்கிறார் பட்டன் எதனாலோ இழுக்கப்பட்டு பலவந்தமாய் விழுந்திருக்கிறது. பின்னால் பட்டனைக் காணவில்லை என்று தேடியிருக்கலாம் அவர். அது அவர் கண்ணில் படாமல் போயிருக்கலாம். அவரது கெட்ட நேரம் என் கண்ணில் தென்பட்டிருக்கலாம். இது முக்கியமல்ல. அவருக்கு இடது காலில் பெருவிரல் கிடையாது என்பதை அறிந்துகொள்ள நான் பெரும்பாடு பட்டேன் ஏனென்றால் அவர் வெளியே வரும்போதெல்லாம் சாக்ஸும் பூட்ஸுமாக வரக்கூடியவர். சர்வ சாதாரணமாக நடமாடக்கூடியவரல்ல, அதுவும் சாக்ஸ் பூட்ஸ் இல்லாமல். அவ்வளவு கௌரவமான மனிதர்...''

''அவர் யார்?'' என்ற கேள்வி அனைவர் மனத்திலும் எழுந்தது.

"அவருடைய மனைவியைச் சந்தித்து ஒருநாள் பேசிக் கொண்டிருந்தேன். அவர்தான் தன் கணவருக்கு இடதுகால் கட்டை விரல் கிடையாது என்பதை என்னிடம் கூறினார். நேரிடையாக அதே குறியாக வைத்துக் கேட்டிருந்தால் அவரது மனைவி சந்தேகப்பட்டு என்னிடம் மறைத்துக்கூட இருக்கலாம். சுற்றி வளைத்துப் பேச்சு வாக்கில், 'கேஷுவலாக'க் கேட்கப்போய் அவரும் சொல்ல நேர்ந்தது. இதை ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால் அவரது மனைவி காட்டிக் கொடுத்தார் என்று யாரும் கருதிவிடக் கூடாது என்பதற்காகவே. அப்புறமென்ன, அவரும் நானும் சந்திக்க அவசியமே இல்லாத இடத்தில் சந்தித்தோம். அந்த இடத்தில் இருக்க வேண்டியவரல்ல அவர், விதி அவரை அங்கே கொண்டு போய்ச் சேர்த்தது"

இக்கட்டத்தில் பேச்சை சற்று நிறுத்தி சுற்றி ஒருமுறைப் பார்த்து மேலும் ஆரம்பித்தான் கண்ணன்.

"நானாகக் கேட்பதற்கு முந்தியே அவராகப் பேசினார். அப்போது அவர் எனக்கு ஒரு குற்றவாளியாகத் தோன்றவில்லை. மனிதராகவும் தெரியவில்லை. மனிதருள் மாணிக்கம் என்று குறிப்பிட்டாலும் அவரைச் சிறப்பித்துக் குறிப்பிட்டதாக ஆகாது. தெய்வமாகவே காட்சி தந்தார். இந்தக் கட்டத்தில் ஒன்றை பெருமையோடு கூறுகிறேன்.

"வாதத் திறமையினாலோ—சட்டத்திலுள்ள ஓட்டையினாலோ—சந்தர்ப்ப சாட்சியங்கள் இல்லாததாலோ தண்டனையிலிருந்து தப்பித்து விடுகிற உண்மையான குற்றவாளியைத் தேடிப் பிடித்துத் தண்டித்து விடுகிறது தெய்வம். சட்டத்தின் கண்களிலிருந்து தப்பலாம்; தெய்வத்தின் பார்வையிலிருந்து யாரும் தப்ப முடியாது. எப்படியோ ஒரு வகையில் குற்றவாளியைப் பிடித்துத் தண்டித்து விடுகிறது தெய்வம். இந்தத் தத்துவம் இந்த வழக்கில் மெய்யாகி—நிலையாகி—நமக்கெல்லாம் பாடமாகி விட்டது. அவர் அப்போதே என்னை வேண்டினார், தன்னைக் குற்றவாளி என்று சட்டத்தின் பிடியில் ஒப்படைக்கும்படி. நான்தான் சற்றுப் பொறுத்திருக்கும்படி வேண்டினேன்.

"அவ்வளவு உயர்ந்த மனிதனை—உத்தமரை சமூகத்தின் முன்னால் ஒரு கொலைக் குற்றவாளி என்று கொண்டு வந்து நிறுத்த எனக்கு மட்டுமல்ல, யாருக்குமே மனம் இடம் தராது. அதனால் நானும் நாட்களைத் தள்ளி வந்தேன். நேற்று முடிவாகச் சொல்லி விட்டார். 'நீயாக முன்வந்து என்னைக் காட்டிக் கொடுக்காவிட்டால் நானாகவே என்னை சட்டத்தின் முன்னிலையில் ஒப்புக் கொடுத்துவிடுவேன்' என்றார். இன்று

இப்போது இங்கு நான் உண்மையை வெளியிட முன்வராமல் இருந்திருந்தால் அவரே முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருப்பார்.''

இங்கே பேச்சை நிறுத்திவிட்டு வாசுதேவன் பக்கம் திரும்பினான் கண்ணன்.

''இனி நீங்கள் பேசலாமே'' என்று அவரை நோக்கிக் கேட்டான்.

''பேசுகிறேன். இது நான் பேசவேண்டிய கட்டம்தான். கனம் நீதிபதி அவர்களே! அரசு தரப்பு வழக்கறிஞரே! அட்வகேட் குறிப்பிட்டதைப்போல் உண்மையான குற்றவாளி மனிதருள் மாணிக்கமும் அல்ல; தெய்வமும் அல்ல; சாதாரண மனிதன். அந்த மனிதப் பண்பைக்கூட சில காலம் கை விட்டவன். தானொரு கொலையாளி என்று தெரிந்தால் சமூகத்திற்கு முன்னால் தன் கௌரவம் போய்விடுமே என்ற ஒரே ஒரு சுயநலத்தினால் உண்மையை மறைத்து பண்பு கெட்டவனாக நடந்துவிட்டான்.

''அப்புறம்......தனக்காக — தான் செய்த குற்றத்திற்காக ஒரு அப்பாவி தண்டனை அனுபவிப்பதை—சிறையில் அவதியுறுவதைக் கண்கூடாகக் கண்டான். குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுத்தது மனச்சாட்சி இடித்துக்காட்டியது. பிறிதொரு நாள் அந்த அப்பாவியே அவனிடம் போய் தன் ஒரே ஆசையை வெளியிட்டுக் கதறியபோது...... அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தான் செய்த குற்றத்திற்கு தானே தண்டனை விதித்துக்கொள்ள கிடைத்த சந்தர்ப்பமாக அவன் கருதினான். தெய்வமும் அதையே விரும்பியது.

''கண்ணன் குறிப்பிட்டதுபோல், சட்டத்தின் கண்ணிலிருந்து தப்பிய அவன் தெய்வத்தின் பார்வையிலிருந்து தப்ப முடியாது என்ற தத்துவத்தை தெய்வம் நிலைநாட்டியது. தாயைப் பார்த்துவிட்டு விடிவதற்கு முன்பே வந்துவிடு என்றுதான் அனுப்பினார். ஆனால் தெய்வம் அவனை வர விடாமல் திசை திருப்பிவிடவே... அந்தக் குற்றவாளி இன்று வரை சிறைவாசத்தை அனுபவிக்கிறார்.''

கோர்ட் கலகலத்தது. அனைவரும் இருக்கையைவிட்டே எழுந்தனர் அதிர்ச்சியால். நீதிபதி நிலைகுத்தி சிலையாகி விட்டார்.

''என்ன? எல்லாரும் அதிர்ச்சி அடைந்து விட்டீர்களா? இப்படியொரு திருப்பம்—திரைப்பு கற்பனைக் கதைகளில்கூட காண முடியாதவை அப்படி அந்த அப்பாவியான சிவராமனைத் தாயைப் பார்த்து வரும்படி அனுப்பியவர் இவர் தானே. இன்றுவரை சிறைவாசம் அனுபவித்து இப்போது

குற்றவாளிக் கூண்டில் வந்து நிற்பவர் இவர்தானே என்று என்னைப் பார்த்து விழிக்கிறீர்கள். உங்கள் அறிவே திணறுகிறது; அதை நான் உணர்கிறேன் அப்படியானால் கொலை செய்த குற்றவாளி இவரா என்று நம்ப முடியாமல் தவிக்கிறீர்கள். எனக்குத் தெரிகிறது.''

''ஆமாம்! மிஸ்டர் வாசுதேவன், அந்தக் குற்றம் புரிந்தவர் நீங்களா?'' என்று கலவரத்தோடு கேட்டார் இன்றைய நீதிபதி.

''ஆம்! நானேதான். இதோ எனது இடக் காலில் கட்டை விரல்...'' என்று கூண்டுக்கு வெளியே காலை நீட்டிக் காண்பித்தார்.

யாவரும் திடுக்கிட்டனர். ஆம்! அவரது இடது காலில் கட்டை விரலைக் காணோம்.

''பிணம் கிடந்த இடத்தில் பதிந்திருந்த பாதச் சுவடுகள் என் இடதுகால் பாதச் சுவடுகளே. கண்ணன் புதரில் கண்டெடுத்த தங்கப் பொத்தான் என்னுடையதே. ஒற்றையடிப் பாதை வழியே போனால் காணக்கூடிய பங்களா எனது உல்லாச மாளிகையே. அங்கே கண்ணனால் விசாரிக்கப்பட்டவள் எனது இரண்டாம் தாரம் ரேவதி. கண்ணன் வந்து சந்தித்த இடம்?

''நான் இருக்க வேண்டிய அவசியமே இல்லாத இடம் என்றாரே, சிறைச்சாலையைத்தான் அப்படிக் குறிப்பிட்டார். அங்கே வந்த கண்ணன் என்னிடம் என்ன கேட்க வந்தார் என்றே எனக்குத் தெரியாது. நானே வலிந்து என் குற்றத்தைக் கண்ணனிடம் ஒப்புக் கொண்டேன். இப்போது சிறைபட்டுக் கிடப்பதும் சிவராமனுக்காகத்தான் என்பதையும் தெரிவித்தேன்

''ஆம்! கொலைகாரன் நான்; ஒரு பாவமும் அறியாத சிவராமன் கடுஞ்சிறையில் கிடந்தான். என்னால்தான் அவன் தண்டனை அனுபவிக்கிறான் என்று என் மனம் உறுத்தியது. தர்மம் எச்சரித்தது; தெய்வம் அச்சுறுத்தியது. ஆகவே சிவராமனுக்கு என் சக்திக்கு மீறிய எதையும் செய்யச் சித்தமாக இருந்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில் தாயைக் காண வேண்டுமெனத் துடித்தான்.

''சட்டத்தின் காவலனாக வாழ்ந்த நானே சட்டத்தை மீறினேன். அவனை என் வேடத்திலேயே சிறையைவிட்டுத் தப்பிக்க வழி வகுத்துக் கொடுத்தேன். ஒரு கொலை புரிந்த குற்றத்திற்காக நான் அனுபவிக்க வேண்டிய தண்டனையை ஒரு நாளாவது அனுபவிப்போமே என்று எண்ணித்தான் அவனை வெளியே விட்டேன்.''

"அதெல்லாம் சரி...கொலை செய்யக் காரணம் என்ன?... நடந்த நிகழ்ச்சிதான் என்ன?" நீதிபதி இடைமறித்தார்.

"சம்பவம் நடந்த அன்று நான் மாடியிலே இருந்தேன். என் மனைவியின் கூச்சல் கேட்டது. பதறிப்போய் ஓடிவந்து பார்த்தேன், என் மனைவியின்மீது உலகநாதன் விழுந்து--அழுத்தி—அணைத்து---அவளது வாயைப் பொத்திக்கொண்டிருந்தான். என் மனைவியைக் கற்பழிக்க முயல்கிறுன் என்றே நினைத்து விட்டேன் உணர்ச்சி வசமானேன். பீப்பாயிலிருந்த பூச்சட்டியை எடுத்து அடித்தேன். அக்கணமே அவன் உயிர் போய்விட்டது. அப்புறம்தான் உணர்ச்சி வசப்பட்டு நான் செய்துவிட்ட தவறை உணர்ந்தேன். கொலைகாரனுக கைது செய்யப்படுவதா என்று என் கௌரவம் அலறியது. அதற்காகப் பிணத்தை ஓடைக்கரையில் போட தூக்கிச் சென்றபோது ஒரு தோளில் இருந்து மறு தோளுக்கு பிணத்தை மாற்றியபோது என் சட்டைப் பட்டன் தெறித்து விழுந்திருக்க வேண்டும்.

"கொஞ்ச காலம் என் நேரம் நல்ல நேரம்போலும், செத்தவன் சிவராமனின் எதிரியாக இருந்திருக்கிறுன். கொலை செய்யப்படுவதற்காக சிவராமனுல் துரத்திவரப்பட்டு இருக்கிறுன். அதனுல் சிவராமன் கொலைகாரனுக மாட்டிக் கொண்டு விட்டான். நான் கொஞ்ச நாட்கள் பெரிய மனிதனுக உலவினேன். இதுதான் நடந்த உண்மை."

வாசுதேவன்...ஒப்புதல் வாக்குமூலம் அளித்துவிட்டார். அதுவும் உண்மையை விளம்புகிறேம் என்ற டம்பீரத்தோடு. முகத்தில் கொஞ்சமும் கலவரமோ அச்சமோ இன்றி...

"அப்பா" என்றுவாய்விட்டு அலறினுள் வனஜா.

"உங்களுக்காக நான் இன்னமும் சிறையில் கிடக்கத் தயார். ஏன் நடந்த உண்மையை வெளியிட்டீர்கள்" என்று அழுதே தீர்த்தான் சிவராமன். 'எவ்வளவு உயர்ந்த மனிதர்!' என்று சாவித்திரியே மலைத்தாள்.

* * *

ஒருவாரம் கழித்து நீதிமன்றம் கூடியது. அன்று நீதிபதி தமது தீர்ப்பை வாசித்தார்.

"உணர்ச்சி வசப்பட்டே—கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கமின்றியே இந்தக் குற்றத்தை வாசுதேவன் செய்திருக்கிறுர் ஆகவே இதுவரை அவர் அனுபவித்த தண்டனையே போதுமானது. ஆனுல்...ஒரு கைதியை சிறை

யிலிருந்து தப்பிச்செல்ல உதவிபுரிந்த குற்றம் அவர் அறிந்து செய்த குற்றமாதலால் ஆறுமாத கால சிறைத் தண்டனை விதிக்கிறேன். நிரபராதியான சிவராமனைத் தண்டித்து சிறைவாசம் அனுபவிக்கும்படி தீர்ப்பு வழங்க நேரிட்டது, சந்தர்ப்பக்கேடு--போலீசார் கணிப்பில் சேர்ந்த கோளாறு. அதற்காக கோர்ட் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறது. இனி எந்த ஒரு வழக்கிலும் இம்மாதிரி நீதிப் பிழை ஏற்பட்டு விடாமல் கண்ணும் கருத்துமாய் செயல்பட இந்த வழக்குப் போலீசாருக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். நீதிக்கெனப் போராடி வெற்றிக் கண்ட கண்ணனைப் பாராட்டுகிறேம்.''

சிவராமன் விடுதலை செய்யப்பட்டான். ஆறு மாத தண்டனை பெற்று போலீசாருடன் புறப்பட்ட வாசுதேவன், மகள் வனஜாவையும் சிவ்ராமனையும் அழைத்து தன்னிரு கரங்களாலும் தழுவி அவ் இருவரையும் ஐக்கியமாக வாழும்படி ஆசீர்வதித்தார். இருவர் கரங்களையும் இணைத்தார். ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்.

''எங்களுக்கு இப்போதே வாழ்வைத் துவங்கவேண்டும் என்ற அவசரமில்லை. நீங்க தண்டனை காலம் முடிந்து சிறையிலிருந்து வந்த பிறகே, உங்க முன்னிலையிலே எங்களுக்குக் கல்யாணம் நடக்கவேண்டும்'' என்றான் சிவராமன்.

வாசுதேவன் சிரித்துக்கொண்டே வேனில் ஏற நடந்தார். சற்று தூரம் போனவர் திரும்பிப் பார்த்தார். கண்ணனும் சாவித்திரியும் ஒன்றாக சேர்ந்து இணைந்து நிற்பதைக் கண்டார்;

''உங்களுக்கும் என் வாழ்த்து. உங்க இல்லறம் நல்லறமாகவே நடக்கும்'' என்று கூறி கையை அசைத்தார்.

அனைவரும் கை அசைத்து வழி அனுப்பினார்கள். அவர் சிறைச்சாலைக்குப் போகிற மாதிரி தெரியவில்லை, எங்கோ ஒரு ஊருக்கு விடை பெற்றுப் போகிறவர் மாதிரி மகிழ்ச்சியோடு போனார்.

— நிறைவு —

COMICS PDF TIMES

Edited, Printed & Published by P. S. Thandavan,
for Vasu Pirasuram at Poovai Achagam,
19, Sri Krishnapuram, Madras-600014.